பேச்சுத் துணைக்கு ஆள் தேவையில்லை– அவன் தனது ஒரு தலையோடு இன்னொரு தலையைப் பேச வைக்கலாம என்று கமாண்ட் பண்ணுகிறார்கள்– ஆனால் சூர்ப்பனோ சூர்ப்பனகையை [illegible] போக ராவணனை அரிக்க வந்த நோய் சூர்ப்பனகை என்று


# பேர்மா ஷாப்
# சுப்ரீமோ

விண் வெளித் தொழில் நுட்பச் சிறப்புடன், தரத்தில் அதி உன்னதமான துருப் பிடிக்காத எஃகு உருக்கில், தன் பெயரைக் கூடப் பதிக்க முடியாத பளிங்குச் சுத்த மெருகு பளிச்சிடத் தயாரிக்கப்பட்ட சவர பிளேட் பேர்மா ஷாப் சுப்ரீமோ!

தேர்மோப்ளாஸ்திக் பொலிமர் என்னும் அடர்த்தியான மும்முனை விளிம்புக் கூர்மையுடன் சவரச் சொகுசின் உச்ச இன்பத்தைத் தரும் விதத்தில் உருவாக்கப்பட்ட அதன் நேர்த்தியைப் பரீட்சித்து அதன் சிறப்பைக் கண்டு அனுபவியுங்கள்!

PERMA-SHARP
SUPREMO




ரூ– 14/75 விலையில் 5 பிளேட்டுகள் கொண்ட சுளுவான எடுப்புறையில் கிடைக்கும பிளேட் ஒன்றின் விலை ரூ– 2/95

**பேர்மா ஷாப் சுப்ரீமோ**

· சிறந்த சவரத்தின் புதிய சிகரம்.

இலங்கையில் சந்தைப்படுத்துவோர் : அங்ளோ · ஏஷியன் Anglo-Asian

RJA 9711

# வேகமாக கணக்கிடுவதற்கு சாதனங்கள் தேவைப்பட்டன

## கனினி தோன்றக் காரணம் இதுவே

# 'கொம்பியூட்டர்' என்ற 'கனினி'யின் கதை

—2—

சித்ரா அருள்ராமலிங்கம்
Diploma in Computer Science, Madurai University

கோழி தன் குஞ்சுகளுடன் மேய்ந்து திரிவதைப் பார்த்திருக்கிறீர்கள்—

ஒரு குஞ்சு வழிதவறி — காணாமற் போய் விட்டால் — தாய்க் கோழிக்கு தன் குஞ்சை காணவில்லை என்று தெரிந்து விடுகிறது

தாய்க் கோழியானது — பதறிப் போய் இங்குமங்கும் பறந்து திரிந்து — தொலைந்து போன கோழிக் குஞ்சைத் தேடி கூட்டி வருகிறது—

பத்துப் பதினைந்து கோழிக் குஞ்சுகளுடன் மேய்ந்து திரியும் தாய்க் கோழிக்கு — தன்னுடைய ஒரு குஞ்சு விடுபட்டுப் போனது எப்படித் தெரிந்தது?

தவறிப் போன குஞ்சு — தாயை காணாமல் கத்திய சத்தம் கேட்டுத்தான் — தாய்க் கோழி — அறிந்தது என்று இது வரை நாம் எண்ணியிருந்தோம்—

அது முற்றும் தவறான கணிப்பு என்று விஞ்ஞானம் கண்டுபிடித்துள்ளது—

தாய்க் கோழி — தன் குஞ்சுகளை எண்ணிப் பார்த்துத்தான் தன் குஞ்சைக் காணவில்லை என்று புரிந்து கொள்வதாக விஞ்ஞானிகள் சொல்கின்றார்கள்—

இந்தக் கணக்கிடும் உணர்வுக்கு Numerical Awareness (நியூமெறிக்கல் அவேர்னஸ்) எண் கருத்துணர்வு என்று பெயரிட்டு இருக்கிறார்கள்—

இந்த எண் கருத்துணர்வு — கோழிகளில் மட்டுமல்ல — பறவையினங்கள் பலவற்றிற்கும் — பாலூட்டும் மிருகங்களுக்கும் கூட உள்ளது என்று அவர்கள் மேலும் தெரிவிக்கிறார்கள்—

இந்த எண் கருத்துணர்வுதான் பறவையினங்கள் வலசை போகும் போதும் — மிருக இனங்கள் — குழுக்களாக இடம் பெயரும் போதும் — தலைமைத்துவப் பண்புக்கு அடிப்படையாக விளங்கியது—

கொடுத்தார்—

கணக்குப் போடுதல் என்பது மனிதனின் பிறவிக் குணம் என்று சொல்லலாம்—

ஆதிகால மனிதர்க்கு கணக்கிட வேண்டிய தேவை ஏற்பட்டிருக்க வேண்டும்—

உணவுத் தேவைக்கு வேட்டையாடித் திரிந்த ஆதி மனிதன் படிப்படியாக முன்னேறி — மந்தை மேய்ப்பதற்கும் குழுக்களாக — கூட்டங்களாக வாழ்வதற்கும் — தன்னை நாகரிகப்படுத்திக் கொண்டான்!


இந்தக் காலகட்டத்தில் குடும்ப அங்கத்தினர் — அயலவர் — மந்தைகள் — பற்றிய எண்ணிக்கையை தெரிந்து — கணக்குப் பண்ணி வைத்திருக்க வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது—

சிறிய தொகைகளை எண்ணுவதற்கு தனது கைவிரல்களையும் — கால்விரல்களையும் உபயோகித்தான்— எண் என்பதற்கு ஆங்கிலத்தில் டிஜிட் (Digit) என்று சொல்வார்கள்— Digit என்பது டிஜிட்டம் (Digitum) என்ற லத்தீன் சொல்லில் இருந்து வந்தது— Digitum என்றால் விரல் என்று கருத்தாகும் எனவே விரலால் கணக்கிடும் "எண்"களுக்கு Digit என்று பெயரிட்டது பொருத்தமானது தான்!

கணக்கிடும் தொகை அதிகரித்த போது மனிதனின் கைவிரல்களும் — கால் விரல்களும் போதுமானதாக இருக்கவில்லை—

இந்நிலையில் — சிறு கற்களையும் — கல் குவியல்களையும் — மரச் சட்டங்களில் குறியிட்டு கணக்கிடுவதையும் — கணக்குப் போட உபயோகித்துக் கொண்டான்—

எகிப்தில் வசித்த இடையர்கள் — தமது மந்தைகளை மேய்ச்சலுக்கு அனுப்பும் போது — வெளியேறும் ஒவ்வொரு மந்தைக்கும் ஒரு சிறு கல்லை எடுத்து ஒரு பக்கத்தில் போட்டு — குவித்து வைப்பார்கள்— மாலையில் மேய்ச்சலிலிருந்து — மந்தை திரும்பும் போது —



ஜக்குவார்ட் துளை அட்டை கொண்டு இயங்கும் நெசவுத் தறி.

இந்த எண் சட்டம் கி மு 5000 ஆண்டுகளுக்கு முன்னரே உபயோகத்தில் இருந்ததாகச் சொல்லப்படுகிறது—

பபிலோனியா — இந்தியா — எகிப்து — சீனா — ஜப்பான் — மத்திய ஆசியா போன்ற நாடுகளில் ஏக காலத்தில் மணிச் சட்டம் கணக்கிடும் கருவியாக விளங்கியது—

"அபக்ஸ்" (A bax) என்ற சொல் — "மணல்" என்பதற்கு கிரேக்க மொழியில் வழங்குகின்ற சொல்— ஆரம்ப வகுப்பு மாணவர்களுக்கு மர நிழலில் மணலில் அரிச்சுவடி எழுதிப் படிப்பிப்பது போல் — அந்தக் காலத்தில் கணக்குகளை மணலில் குச்சிகளால் எழுதி — போட்டார்கள்— எனவே கணக்குப் பார்க்கும் மணிச் சட்டம் "அபகஸ்" (Abacus) என்று பெயர் பெற்றது!

சிறுவர்கள் பயன்படுத்தும் சிலேட் போன்ற செவ்வக வடிவ சட்டத்தில் கம்பிகள் இணைக்கப்பட்டு மணிகள் கோர்க்கப்பட்டதே மணிச்சட்டமாகும்!

இந்த மணிச்சட்டத்தைக் கொண்டு கூட்டல் — கழித்தல்— பெருக்கல் — பிரித்தல் ஆகிய கணக்கு வகைகளை செய்ய முடியும்—

இன்றும் ஜப்பானியர் கணக்குப் போட பக்கத்தில் கொம்பியூட்டரை வைத்திருந்தாலும் மணிச்சட்டத்தை வைத்துத்தான் கணக்கு பார்க்கின்றனர்—

உலக மகா யுத்தம் முடிவடை

கருவி நீண்ட பெருக்கல், பிரித்தல் கணக்குகளை மடக்கை வாய்ப்பாடு முறையில் விரைவாக செய்து முடித்தன—


உண்மையில் இயந்திர முறையில் கணக்கிடும் கருவிகள் 1642 ஆம் ஆண்டளவில் தான் உருவாக்கப்பட்டன—

இதனை உருவாக்கியவர் பிலெய்ஸ் பாஸ்கல் (Blaise Pascal) என்ற 19 வயது கணித மாணவராவார்— இவரது தந்தை பிரஞ்சு நாட்டில் ஒரு வரி மதிப்பாளர்— தினமும் நீண்ட நீண்ட கூட்டல்களை இவர் செய்ய வேண்டியிருந்தது— இந்தக் கணக்குகளை தனது மகன் பாஸ்கலிடம் சுமத்தி விடுவார்— பாஸ்கல் இந்த கணக்குகளைத் திருப்பித் திருப்பி செய்து

(Joseph Marie Jacquard) வெவ்வேறு விதமாக துளையிடப்பட்ட அட்டைகளைக் கொண்டு (Punched Cards) நினைத்த மாத்திரத்தில் புதிய டிசைன்களை போடக் கூடிய கருவியை ஜக்குவார்ட் கண்டுபிடித்தார்!

பிற்காலத்தில் கொம்பியூட்டர்களுக்கு கட்டளை கொடுப்பதற்கு இந்த துளையிடப்பட்ட அட்டைகள் உபயோகிக்கப்பட்டன— அவ்வேளை இந்த அட்டைகள் "ஜக்குவார்ட் அட்டைகள்" என்று அழைக்கப்பட்டன—

சார்ள்ஸ் பபாஜ் (Charles Babbage) என்றொரு கணித நிபுணர் கேம்பிரிட்ஜ் சர்வகலாசாலையில் விரிவுரையாளராக இருந்தார்— அவரது நண்பர் ஜோன் ஹேர்ச்சல் (John Herschel) ஒரு வானியல் நிபுணர், ஹேர்ச்சல் வானவியலில் கணக்குகள் போட ஒரு இயந்திரத்தை கண்டு




டாகடர் ஹேர்மன் ஹோலரித் குடிசன மதிப்பீட்டுக்கு உபயோகித்த பொறி.

பிடிக்க பபாஜ்ஜின் உதவியை நாடினார்—

பபாஜின் காலம் கைத்தொழில் புரட்சி காலம்— நீராவிசக்தியின் உபயோகம் வெகு சிலாகித்து புகழப்பட்ட நேரம் எனவே தான் செய்யப் போகின்ற இயந்திரத்தை நீராவி சக்தியால் இயக்கிப் பார்த்தால் என்ன என்று பபாஜ் எண்ணினார்— அவர் முதலில் கண்டுபிடித்த இயந்திரம் டிபரன்ஸ் என்ஜின் (Difference Engine) என்ற பெயர் பெற்றது ஆனால் பபாஜ் "போதும்" என்று திருப்தியடையாத மனம் உடையவர்—

எனவே செய்து கொண்டிருந்த பொறியில் திருத்தங்களை செய்யாமல் புதியதொரு பொறி செய்வதில் நாட்டம் காட்டினார்

தான் செய்யவிருக்கின்ற பொறி கணக்குகளை சேமித்து வைத்துக் கொள்ள "மூளை" என்றொரு பகுதி இருக்க வேண்டும்— அதற்கு கட்டளைகள் துளையிடப்பட்ட



அபகஸ் எனப்படும் மணிச் சட்டம்.

அனாலெட்டிக்கல் என்ஜின் (Analytical Engine) என்றொரு பொறியை உருவாக்கினார்—

ஆனால் அவர் திட்டப்படி நூற்றுக்கு நூறு வீதம் அந்தப் பொறி அமையவில்லை— அதற்கு முக்கிய காரணம் அவர் நினைத்த மாதிரி இயந்திரங்களை உருவாக்கும் அளவிற்கு தொழில்நுட்பம் வளர்ச்சி அடைந்திருக்கவில்லை.

பபாஜ் திட்டமிட்டிருந்த பொறி இன்றைய கொம்பியூட்டர்களின் அமைப்பை ஒத்தது. அதன் இயக்கமும் இன்றைய கொம்பியூட்டர்களின் இயக்கத்தை ஒத்திருந்தது—

தொழில் நுட்பத்துறை பபாஜுக்கு அந்த வேளையில் கைகொடுத்திருந்தால் 1842 ஆம் ஆண்டிலேயே முதலாவது கொம்பியூட்டர் உலகில் கண்டுபிடிக்கப்பட்டிருக்கும்—

என்றாலும் கொம்பியூட்டர் பொறி எப்படி இருக்க வேண்டும் என்று ஒரு சித்தாந்தத்தை முதன் முதலில் சொன்ன சார்ள்ஸ் பபாஜ் கொம்பியூட்டரின் தந்தை என்று இன்று கருதப்படுகிறார்—

பபாஜின் ஆய்வுகளுக்குத் துணையாக நின்றவர் எடா லவ்லேஸ் சீமாட்டி (Lady Ada Lovelace) இவர் உலக கவிஞர் பைரனின் மகள். கவிஞரின் மகளானாலும் கணிதத்தில் புலி, பபாஜின் இயந்திரங்களில் உள்ள கோளாறுகளை எடுத்து சொல்லுமளவுக்கு கெட்டிக்காரி— பபாஜின் கணிதப் பொறிக்கு கட்டளைத் தொடர் அமைத்து கொடுத்த எடாவை உலகின் முதலாவது கொம்பியூட்டர் புரோகிரமர் (Programmer) என்று பெருமையுடன் அழைப்பர் எடாவின் [illegible] இன்று

மதிப்பீட்டின் போது முடிவுகள் கணக்கிடப் பட்டு வருவதற்கு ஆறு ஆண்டுகள் பிடித்தன— இதனால் அரசாங்கம் சரியான பட்ஜெட் திட்டம் போட முடியாமல் கஷ்டப்பட்டது— எனவே 1890இல் நடக்கவிருந்த குடிசன மதிப்பீட்டை சீக்கிரம் நடாத்தி முடிக்க ஒரு கணிதப் பொறியை அமைத்தால் என்ன என்று அமெரிக்க அரசு அதன் விஞ்ஞானிகளிடம் கேட்டது—

1887 இல் ஹேர்மன் ஹோலரித் (Hesrman Hollerith) என்ற விஞ்ஞானி துளை அட்டைகளை உபயோகித்து கணக்கிடக் கூடிய இயந்திரத்தை அமைத்துக் கொடுத்தார்—

1890 இல் இந்த இயந்திரம் உபயோகமாகி இரண்டு வருடத்துள் குடிசன மதிப்பு அறிக்கையைத் தயாரித்துக் கொடுத்தது!

இந்த இயந்திரத்தின் வெற்றியைக் கண்ட ஹோலரித் இதனை வர்த்தக முறையில் தயாரித்து தனிப்பட்ட ஸ்தாபனங்களுக்கு விற்றார்— ரஷ்யா கூட தனது 1896 குடிசன மதிப்பு கணக்கெடுக்கு ஹோலரித்தின் இயந்திரத்தை உபயோகித்தது— பின்னர் ஹோலரித்தின் தயாரிப்பு ஸ்தாபனம் மற்ற பல ஸ்தாபனங்களுடன் சேர்ந்து இன்று உலகின் பிரசித்தி பெற்ற கொம்பியூட்டர் ஸ்தாபனமான IBM இன்டர் நேஷனல் பிஸ்னஸ் மெஷின் (International Business... Machine) ஸ்தாபனமாக உருவெடுத்தது!

இவ்வேளையில் மின்சாரத்தைப் பற்றிய அறிவு வளர்ந்து கொண்டிருந்தது— எனவே கணக்கிடும் இயந்திரங்கள் சாதாரண மெக்கானிக்கல் (Mechanical Engines) இயந்திரங்களாக இயங்காமல் மின்சக்தியை உபயோகித்து இயங்க வைத்தால் என்ன என்று IBM ஸ்தாபனம் எண்ணியது—

ஹார்வார்ட் பல்கலைக்கழகத்தில் கணிதப் பேராசிரியராக பணியாற்றி வந்த டாக்டர் ஹவார்ட் ஐக்கன் (Dr Howard Aiken)ஐக்கு IBMஸ்தாபனம் ஒரு

போகும போதும் – மிருக இனஙகள் – குழுக்களாக இடம பெயரும போதும் – தலைமைத் துவப் பண்புக்கு அடிப்படை யாக விளஙகியது–

இன்று விஞ்ஞானிகள் கண்டு தெளிந்த இந்த முடிவை — அன்று வள்ளுவப் பெருந்தகை ஈரடிக் குறளில் அழகாக எழுதி வைத்துள்ளார்–

"எண் என்ப – ஏனை எழுத் தென்ப இவ்விரண்டும கண் ணென்ப வாழும் உயிர்க்கு"

என்ற குறளில் வள்ளுவர் – எண்ணும எழுத்தும் வாழும மனி தர்க்கு கண்ணென்ற கூறவில்லை வாழும உயிர்க்கு என்று உயிரின ஙகளை குறிப்பிட்டு கூறியது– சகல உயிரினஙகளுக்கும எண் கருத் துணர்வு உண்டு என்பதைப் புரிந்து கொண்டு கூறிய பொய்யாமொழியாகும–

மனிதன் தான் பேசுகின்ற மொழிக்கு ஒரு வரிவடிவம் கொடுக்க முன்னரே – கணக் கிடத் தெரிந்திருந்தான் என்று மனித இயல் ஆய்வுகள் தெரிவிக் கின்றன–

எனவே மனிதன் உலகில் தோன்றிய காலத்தில் இருந்தே எண் கருத்துணர்வு அவனுக்கு இருந்திருக்க வேண்டும–

நமது நாளாந்த வாழ்க்கையில் எண்கள் பலவிதத்தில் பல விஷ யஙகளில் உதவுகின்றன–

வான சாஸ்திரம் – சோதி டம் – வர்த்தகம – விஞ்ஞா னம் போன்ற சாஸ்திரஙகளில் எல்லாம எண்களே அடிப் படையாக விளஙகுகின்றன–


எண்களுக்குப் பின்னர் தான் எழுத்து தோன்றியிருக்க வேண் டும–

எண்ணும எழுத்தும கண்ணெ னத் தகும" என்று ஔவையும எழுத்துக்கு முதலிடம கொடா மல் எண்ணுக்கே இடம

தைக்கும ஒரு சிறு கல்லை எடுத்து ஒரு பக்கத்தில் போட்டு – குவித்து வைப்பார்கள்– மாலையில் மேய்ச்சலிலிருந்து – மந்தை திருமபும் போது – குவித்து வைத்திருந்த கல் குவிய லிலிருந்து கல்லை இன்னொரு இடத்தில் போடுவார்கள்–

காலையில் போன மந்தைகள் சரியாகத் திருமபினவா என்று கணக்குப் போட்டுக் கொள்ள இந்த முறை அவர்களுக்கு உதவி யது–

சிறுகல் என்பதற்கு லத்தீன் மொழியில் கல்க்ஸ் (Calx) அல்லது கல்குலஸ் (Calculus. என்று சொல்வார்கள்– பின்னர் இந்தச் சொல்லிலிருந்து தான் கணக்கிடுவதற்கு கல்குலேட்



விப்ட்னிஸ்ஸ கணிதப் பொறி.

(Calculate) என்ற சொல் வந்தது–

கற்களும கல்குவியல்களும கூட ஆதிமனிதனின் கணக்கிடும வேலைக்குச் சரிப்பட்டு வராத போது —

கணக்கிட ஒரு கருவியைக் கண்டுபிடித்தால் என்ன என்று மனிதன் சிந்திக்கத் தொடங் கினான்–

அந்த சிந்தனையின் விளைவே மனிதனின் கணிதத் தேவைக்கு கைகொடுக்க வந்த அபகஸ் (Abacus) என்ற கருவியாகும–

இதனை நாம் எண் சட் டம் என்று குறிப்பிடலாம–

குப் போட பக்கத்தில் தொம்பி யூட்டரை வைத்திருந்தாலும மணிச்சட்டத்தை வைத்துத்தான் கணக்கு பார்க்கின்றனர்–

உலக மகா யுத்தம முடிவடை ந்த கால கட்டத்தில் ஜப்பானில் ஒரு கணிதப் போட்டி நடந்தது– அவ்வேளையில் புழக்கத்திலிரு ந்த இயந்திர கல்குலேட்டரை (Calculator) வைத்துக் கொண்டு ஒரு அமெரிக்கர் கணக் குப் போட, அதே கணக்கை மணிச்சட்டத்தை உபயோகித்து ஒரு ஜப்பானியரும போட்டார்–

முடிவில் வேகமாகவும அதே வேளையில் பிழைவிடாமலும தனக்குத் தரப்பட்ட கணக்கு களை செய்து மணிச்சட்டம கல்கு லேட்டரை வென்றுவிட்டதென் றால் மணிச் சட்டத்தின் பெருமை

திறமை என்னவென்று ஊகித்து கொள்ளுஙகள்–

மணிச்சட்டத்தில் ஆரமபித்து மனித தேவைகளுக்கு அவ்வப் போது புதிய புதிய கணிதப் பொறிகள் உருவாக்கப்பட்டன–

இவற்றில் சில சரித்திர பிர சித்தி பெற்றவை–

1600 ஆண்டளவில் ஜோன் நேப்பியர் (John Napier). மடக்கை வாய்ப்பாடுகளை உருவாக்கினார்– அதனை உப யோகிக்க ஒரு கருவியும செய் தார். "நேப்பியர் எலுமபுகள்" (Napier's Bones) என்று அழைக்கப்படும இந்தக்

டாகடர் ஹேர்மன் ஹோல ரித் குடிசன மதிப்பீட்டுக்கு உப யோகித்த பொறி.

அலுத்து விட்டார்– இதனைச் செய்ய ஒரு இயந்திரப் பொறி இருந்தால் நல்லது என பாஸ்கல் எண்ணினார்–

பற்சக்கரஙகளைக் கொண்ட ஒரு கணிதப் பொறியை பாஸ் கல் செய்தார்– இந்தப் பொறி கொண்டு கூட்டல் கணக்குகளை சில நிமிட நேரத்தில் செய்து முடித்து தந்தைக்கு உதவினார் பாஸ்கல்–

முதலாவது கணிதப் பொறியை உலகிற்கு தந்த பாஸ்கல் அவர் களுக்கு நன்றி செலுத்துமுகமாக 19 ஆம நூற்றாண்டின் உன்னத கொமபியூட்டர் மொழி ஒன் றுக்கு "பாஸ்கல்" (Pascal) என்று பெயரிடப்பட்டது–

பாஸ்கல் பொறி கண்டுபிடிக் கப்பட்டு 30 வருடஙகளின் பின் னர் அந்த பொறியில் சில திருத்தஙகள் செய்யப்பட்டு கூட் டல் கணக்குகள் மட்டுமல்ல, பெருக்கல், பிரித்தல் கணக்குக ளையும செய்யக் கூடிய பொறி ஒன்று கண்டுபிடிக்கப்பட்டது–

இதை உருவாக்கியவர் கொட் பிரைட் வொன்லீப்னிட்ஸ் (Gottfried Von Leibniz)

இதன் பின்னர் 19 ஆம நூற் றாண்டு வரை புதிய கணிதப் பொறிகள் ஏதும கண்டுபிடிக்கப் படவில்லை–

ஆனால் பின்னர் கொம்பியூட் டர் ஆய்வில் உதவக் கூடிய சில சித்தாந்தஙகளுக்கு அடிப் படையான சில கண்டுபிடிப்புகள் உருவாகின–

ஆடைகளை நெய்யும போது அவற்றில் அழகான புது டிசைன் களை போட இலகுவான முறை ஒன்றை ஜோசப் மாரி ஜக்கு வார்ட் கண்டுபிடித்தார்!

கணக்குகளை சேமித்து வைத் துக் கொள்ள "மூளை" என்றொரு பகுதி இருக்க வேண்டும– அதற்கு கட்டளைகள் துளையிடப்பட்ட அட்டைகள் மூலம உள்ளிடப்பட வேண்டும– முடிவுகள் காகிதத் தில் அச்சு பதிக்கப்பட்டு வெளியிடப்பட வேண்டும என் றெல்லாம திட்டம போட்டு

த்து கொடுத்த ஏடாவை உலகின் முதலாவது கொமபியூட்டர் புரோ கிரமர் (Programmer) என்று பெருமையுடன் அழைப்பர் ஏடாவின் பெயரிலேயே இன்று ஒரு கொமபியூட்டர் மொழியும உள்ளது–

இந்த வேளையில் அமெரிக்கா வில் குடிசனத்தொகை மதிப்பீடு ஆரமபித்தது– 1880 இல் நடந்த

ஹார்வார்ட் பல்கலைக்கழ கத்தில் கணிதப் பேராசிரியராக பணியாற்றி வந்த டாக்டர் ஹவார்ட் ஐக்கன் (Dr Howard Aiken)னுக்கு IBMஸ்தாபனம ஒரு கடிதம எழுதியிருந்தது– அந்த கடி தத்தை பார்த்த ஐக்கன் வியப் புற்றார்!

அப்படி அந்த கடிதத்தில் என்ன இருந்தது?

# உண்மை பொருளைத் தேடி தெரிந்து கொள்வது ஞானம்

ஞானம என்பது ஒரு வஸ்து வல்ல! எந்த கடையிலும கிடைக்காது. சிந்தித்துப் பார்த்து தும தெரிந்து கொள்வதுமே ஞானம.

இதைப் பற்றி பகவான் கூறுகி றார்: "பகவத் பக்தி என்பது முதல் அமசம. என்னுடைய கதையைக் கேட்க வேண்டும என்ற சிரத்தை, எப்போதும என் திவ்ய நாமஙகளை உச்சரிப் பது, பூஜிப்பதின் நோக்கம, என்னை ஸ்தோத்ரம செய்வது, என்னுடைய கைஙகர்யத்தில் ப்ரீதி ,

எல்லா அவயஙகளாலும நமஸ்காரம செய்வது, என்னு டைய பக்தனை விசேஷமாக பூஜிப்பது சகல பிராணிகளையும ஈசுவரனாக பாவிப்பது, எதைச் செய்தாலும அது என்னைப் பூஜிப்பதற்காகவே செய்வது–

என்னுடைய குணஙகளைச் சொல்வது அதிலேயே ரமிப்பது, சகல காமஙகளையும விட்டு மனதை என்னிடமே வைப்பது,

என்னை சேவிப்பதற்காக பணம, விஷய போகம, இவை களை விடுவது, என்னிடம பக்தி யுண்டாவதற்காகவே யாகம செய்வது, தானம, ஹோமம விரதம, தவம ஆகிய தர்மங் களை அனுஷ்டிப்பது போன்றவை களாலும,

ஆத்மாவையே என்னிடம சமர்ப்பித்தலாலும பக்தி உண் டாகும.

அப்படிப்பட்ட பக்தர்களால் அடையப்பட வேண்டிய விஷயம வேறு எதுவுமில்லை,

எப்பொழுது, சுத்த சத்வ குணம பொருந்தி சாந்தமாயிருக் கும சித்தத்தை என்னிடம சமர்ப்பிக்கிறானோ, அப்பொ ழுது தர்மம், ஞானம வைராக்கி யம, அணிமா முதலிய ஐஸ்வர்யங் கள் ஆகிய இவைகளை அடைகி றான்.

எப்பொழுது மனிதன் தேகம முதலியவைகளில் சித்தத்தை வைக்கிறானோ, அப்பொழுது அவனது மனம அழுக்குள்ளதாகி றது.

அதர்மம முதலியவைகளை அடைகிறான். எதனால் என்னி டத்தில் பக்தி உண்டாகுமோ அதுவே தர்மமெனப்படும.

எல்லாவற்றையும பரமாத்மா என்று நினைப்பதே ஞானம எனப் படும. விஷயஙகளில் சமபந்தப் படாமலிருப்பது வைராக்கியம எனப்படும.

சத்வ குணத்தின் விருத்தியே ஆசார்யனே பந்து, அவன் நானே யல்லாது வேறில்லை. மனித சரீரமே கிருகம. நற்குணஙகள் உள்ளவனே பணக்காரன்.

எவன் கிடைத்ததில் சந்தோ ஷம அடையவில்லையோ அவனே, தரித்திரன். இந்திரியஙகளை ஜெயிக்காதவனே கிருபணன் எனப்படுகிறான். விஷயஙகளில் ஆசைப்பட்டவனே அநீசன்" ஆசைப்படாதவனே அநீசன்"

இப்படி பகவான் சொல்லிக் கொண்டே போகிறார். படிப்பதற் கும, கேட்பதற்கும நன்றாகத் தான் இருக்கிறது. எழுதிக் கொண்டே போக இடமில்லை.

இந்த ஜென்மாவிலோ அடுத்த ஜென்மாவிலோ நிச்சயம பலன் கிடைக்கும. சிரத்தை இல்லா விட்டால் இருக்கவே இருக்கிறது எத்தனையோ பொழுதுபோக்கு!

— வைரம ராஜகோபால்

(த–10)

# சாத்தானின் சோதனை அதிகமாவது எப்போது?

தபசு நாட்களை நாம இன்று கிறிஸ்தவர்களாக எமது சபைகளிலே அனுஷ்டிக்கிறோம அதை பலர் பலவிதமாக வேறுபட்ட வகையிலே அனுஷ்டிக்கின்றனர்.

சிலர் தமது ஒரு நேர உணவை தியாகம செய்வர். சிலர் தமது சில பாவ காரியங்களை விட்டு விடுவர். ஆனால் நாற்பது நாட்கள் முடிந்ததும பழைய குருடி கதவைத் திறடி என்ற வண்ணமாக மீண்டும பாவமான காரியங்களில் ஈடுபட்டு விடுவர்.

இது தொடர்ந்து நடைமுறையில் இருந்து வரும காரியமாகும. இதை பலர் தவிர்க்க முயற்சித்தாலும தம சுயத்தில் அதை தவிர்ப்பது கஷ்டமான காரியமாகும.

ஏனெனில் பல சோதனைகள் எமமை தாக்கும போது நாம எவ்வாறு அதிலிருந்து தப்பலாம. எம சுய பெலத்தினால் அதிலிருந்து தப்பவே முடியாது.

ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் பெலத்தினால்தான் நாம ஜெயத்தை பெற்றுக் கொள்ளலாம.

மத்தேயு 4ஆம அதிகாரம முதலாம வசனத்திலிருந்து நாம

கவே அவர் இருந்தார்.

இதற்கு அவர் கூறிய காரணம. நான் என்ன விடயத்தில் பெலவீனமாக இருந்து திருந்தினேனோ அந்த விடயஙகளிலேயே எனக்கு மாறி மாறி சோதனைகள் வருகின்றன. நான் விழுந்து விடுவேன் போல் இருக்கிறது என கூறினார்.

ஆம அருமையானவர்களே, எம பெலவீனஙகளை அறிந்து அதை தகர்க்கக் கூடிய விதமாக எமக்கு பல காரியஙகளை பிசாசானவன் கொண்டு வருவான்.

இதை அறிந்து நாம எமமை தயார்படுத்திக் கொள்ள வேண்டும.

பிசாசானவன் இந்த சோதனையை இயேசுவுக்கு கொண்டு வந்த போது இயேசு அதை மேற்கொண்ட விதம தனி அலாதியானது.

அவர் இறைவனின் வார்த்தையைக் கொண்டே பிசாசை அடிக்கிறார். "மனுஷன் அப்பத்தினாலே மாத்திரமல்ல, தேவனுடைய வாயிலிருந்து புறப்படுகிற ஒவ்வொரு வார்த்தையினாலும பிழைப்பான் என்று எழுதியிருக்கிறதே" என்றார்.

இந்த வார்த்தைக்குப் பிறகு பிசாசினால் ஒன்றுமே செய்ய

## கிறிஸ்தவ நற்பிரசாதம்

சாத்தானின் சோதனைகளைப் பார்க்கிறோம. இவ்வசனஙகளில் இருந்துதான் தபசு நாட்களே பிறக்கின்றன.

மத்தேயு 4ஆம அதிகாரம 2ஆம, 3ஆம வசனஙகளில் அவர் இரவும பகலும நாற்பது நாள் உபவாசமாய் இருந்த பின்பு, அவருக்கு பசியுண்டாயிற்று. அப்பொழுது சோதனைக்காரன் அவரிடத்தில் வந்து நீர் தேவனுடைய குமாரனேயானால், இந்தக் கல்லுகள் அப்பஙகளாகுமபடி சொல்லும என்றான் என்று நாம வாசிக்கிறோம.

இவ்வசனஙகளிலிருந்து நாம எதைக் காண்கிறோம? இது இக்காலத்தில் எமக்கு ஒரு படிப்பினையாக அமைகிறது.

முடியாமல் அடுத்த சோதனைக்கு மெதுவாக தாவுகிறான்.

இதே போல் நாமும ஏன் நடக்கக் கூடாது? எம பெலவீனஙகளையே பார்த்து சாத்தான் சோதனை கொண்டு வருகிறான். இதனால் நாம ஆவியிலே சோர்வடைகிறோம.

எமமால் ஒன்றுமே செய்ய முடியாமலிருக்கிறதே என்று சொல்லுபவர்கள் இறைவனின் வார்த்தைகளைக் கொண்டு சாத்தானை தோல்வியடையச் செய்ய வேண்டும.

இறைவனின் வாக்குத் தத்தஙகள் என்றும மாறாதவை. வாக்குத் தத்தஙகளின் மேல் உள்ள விசுவாசம எமக்கும நிச்சயம பெரிய வெற்றியைத் தரும இது மாறாதது.

களில் இவ்விடயத்தைக் குறித்து. அதாவது வேதாகமம தெளிவாய் கூறும இந்தச் சமபவத்தை நாம ஆராய்ந்து பார்த்து உண்மைகளை தெரிந்து கொள்ள வேண்டியது எவ்வளவு அவசியம?

சோதனைக்காரன், இயேசுவைப் பார்த்து நீர் தேவனுடைய குமாரனேயானால், இந்தக் கல்லுகள் அப்பஙகளாகுமபடி சொல்லும என்கிறான்.

இவ்வேளை இயேசுவின் நிலையோ மிகவும ஓர் இக்கட்டான நிலைதான். கற்களை அப்பஙகள் ஆக்காமல் விட்டால் தேவனுடைய குமாரன் இல்லை என்று மறுதலிப்பதாகவும முடியும— இப்படி பல சஙகடஙகள்—

அதனால் மிகவும ஞானமாக மனுஷன் அப்பத்தினாலே மாத்திரமல்ல, தேவனுடைய வாயிலிருந்து புறப்படுகிற ஒவ்வொரு வார்த்தையினாலும பிழைப்பான் என்று எழுதியிருக்கிறதே என்று கூறி விட்டார்.

இதற்கு மேல் சாத்தானிற்கு என்ன செய்ய முடியும? வெட்கமடைந்தவனாக தோல்வியடைந்தவனாக மற்ற சோதனைக்கு தாவினான்—

இயேசுநாதர் தேவாதி தேவனல்லவா— அவரை வெல்ல யாருண்டு? இத்தபசு நாட்களில் எமக்கு இக்கட்டுரை சிறு படிப்பினையாவது கொடுக்கட்டும. படிப்பினையைப் பெற்றால் மட்டும போதாது. அதைக் கடைப் பிடிப்பது அதிக முக்கியம அல்லவா?

கர்த்தர் உஙகளை ஆசீர்வதிப்பாராக!

(த)

**40 நாள் உபவாச வேளையில் இயேசுவும் அனுபவித்த துன்பம்**




முதலாம வசனத்திலிருந்து நாம பிசாசினால் ஒன்றுமே செய்ய

# கிறிஸ்தவ நற்பிரசாதம்

சாத்தானின் சோதனைகளைப் பார்க்கிறோம. இவ்வசனங்களில் இருந்துதான் தபசு நாட்களே பிறக்கின்றன.

மத்தேயு 4ஆம அதிகாரம 2ஆம, 3ஆம வசனங்களில் அவர் இரவும பகலும நாற்பது நாள் உபவாசமாய் இருந்த பின்பு, அவருக்கு பசியுண்டாயிற்று. அப்பொழுது சோதனைக்காரன் அவரிடத்தில் வந்து நீர் தேவனுடைய குமாரனேயானால், இந்தக் கல்லுகள் அப்பங்களாகுமபடி சொல்லும என்றான் என்று நாம வாசிக்கிறோம.

இவ்வசனங்களிலிருந்து நாம எதைக் காண்கிறோம? இது இக்காலத்தில் எமக்கு ஒரு படிப்பினையாக அமைகிறது.

இயேசு கிறிஸ்து வனாந்தரத்தில் நாற்பது நாட்கள் உபவாசம இருந்தார். இறுதியில் அவருக்கு பசியுண்டாயிற்று. இந்த வேளையில் பிசாசு அவரை நெருங்கினான்.

அவர் பசியோடிருப்பதை அறிந்து, அதை வைத்து இயேசுவை மடக்கும பொருட்டு பிசாசு அவரை நெருங்கினான்.

இதிலிருந்த நாம பார்க்கிறோம: பிசாசானவன் எமக்கு முடியாமல் அடுத்த சோதனைக்கு மெதுவாக தாவுகிறான்.

இதே போல் நாமும ஏன் நடக்கக் கூடாது? எம பெலவீனங்களையே பார்த்து சாத்தான் சோதனை கொண்டு வருகிறான். இதனால் நாம ஆவியிலே சோர்வடைகிறோம.

எமமால் ஒன்றுமே செய்ய முடியாமலிருக்கிறதே என்று சொல்லுபவர்கள் இறைவனின் வார்த்தைகளைக் கொண்டு சாத்தானை தோல்வியடையச் செய்ய வேண்டும.

இறைவனின் வாக்குத் தத்தங்கள் என்றும மாறாதவை. வாக்குத் தத்தங்களின் மேல் உள்ள விசுவாசம எமக்கும நிச்சயம பெரிய வெற்றியைத் தரும இது மாறாதது.

இன்று பெரிய பெரிய சபைகள் விழுந்து போய், ஆவியிலே சோர்ந்து இருப்பதற்கு காரணம அச்சபையைச் சேர்ந்த விசுவாசிகள் சோதனைகளை எதிர் கொள்ள முடியாமல் விட்டுக் கொடுத்த நிலைமையே ஆகும.

இத்தபசு நாட்களைக் கடந்து கொண்டிருக்கும நாம எவ்வாறு இதை எதிர் கொள்கிறோம? இது முக்கியமான ஒரு

## எஸ்.என். அருள்நேசன்

என்ன தேவைகள், எம பெலவீனங்கள் இவைகளை வைத்து எமமை நெருங்குகிறவனாக இருக்கிறான்.

இயேசுவுக்கு வந்த மூன்று சோதனைகளில் முதலில் இந்தச் சோதனையைத்தான் பிசாசானவன் முதலில் எடுக்கிறான்.

கிறிஸ்துவானவரையே பிசாசானவன் தருணம பார்த்து நெருங்கியவன் என்றால் எமமை எவ்வாறு ஆட்டுவிப்பான் என்பதை நாம உணர்ந்து பார்க்க வேண்டும.

இந்நேரத்தில்தான் நாம என்றும ஆண்டவரின் கரத்தினுள் ஜீவிக்க வேண்டியவர்களாக இருக்கிறோம. பிசாசின் சோதனை வரும போது எமமுடன் ஆண்டவரின் கரம இருக்கும என்பது உண்மைதான். ஆனால் நாமும அவதானத்துடன் வாழ வேண்டியது அவசியமல்லவா?

ஓர் அருமையான நண்பர் ஒருவர் இருந்தார். கிறிஸ்துவின் போதனைகளைக் கேட்டு இரட்சிக்கப்பட்டு புது வாழ்வு ஒன்றை அந்நண்பர் ஆரமபித்தார்.

ஆனால் எந்நேரமும பிசாசு என்னைச் சோதிக்கிறான் பிசாசு என்னைச் சோதிக்கிறான் என்று கூறும ஒரு நண்பரா காரியமாகும.

வாழ்வில் ஜெயம பெற, சபை புத்துயிர் பெற இதை நாம தியானித்து கற்றுக் கொள்ளுதல் அவசியம.

இந்நாட்களில் பல சபைகளில் பல விசேஷ ஆராதனைகள் நடைபெறுகின்றன. அவ்வேளை


## முதல் கஸ்டமர் ஒரு திருடன்

ஐக்கிய அரபு குடியரசில் பிரமாண்டமான சுப்பர் மார்க்கெட் ஒன்று அமர்க்களமாகத் திறந்து வைக்கப்பட்டது, இதன் பின்னர் இங்கு நுழைந்து பொருட்களைக் கொள்வனவு செய்த முதல் நபர் யார் தெரியுமா? வியப்படைய வேண்டாம ஒரு திருடர் தான் முதல் போணியைச் செய்திருக்கிறார்,

ஆமாம் ஒரு இந்தியர் இச் சுப்பர் மார்க்கெட்டில் பொருட்களை வாங்கிக் கொண்டு வெளியேறிய போது கணக்கில் காட்டாமல் அவர் தமது பாக்கெட்டுகளில் பல பொருட்களை ஒளித்து வைத்திருப்பது கண்டுபிடிக்கப்பட்டது-

(த-032)



மகத்தான டெல்டா டொலர் வெகுமதித் திட்டம் பற்றி நீங்கள் இன்னமும் அறியவில்லையானால்.... இதோ நாம் தரும் நற்செய்தி!

இலவசம்!




நீங்கள் செய்ய வேண்டியது இதுதான். டெல்டா உறைகளை இயன்ற அளவுக்குச் சேகரியுங்கள் 30 உறைகளுக்கு ஒரு டெல்டா டொலரைப் பெறுவீர்கள். கொள்வனவுத் திறனுள்ள இந்த டெல்டா டொலர்களைப் பயன்படுத்தி உங்களுக்கு விருபபமான பின்வரும் பொருள்களை இலவசமாகப் பெற்றுக்கொள்ளலாம்!

| | |
|---|---|
| பென்சில் | -1 டொலர் |
| டெல்டா பேனை | -2 டொலர் |
| டெல்டா விளையாட்டுப்பொருள் | -3 டொலர் |
| டெல்டா ரீ-சேட் | -25 டொலர் |
| டெல்டா கைக்கடிகாரம் | -50 டொலர் |
| டெல்டா புத்தகப்பை | -70 டொலர் |
| பொக்கெட் றேடியோ | -150 டொலர் |
| சொப்பர் சைக்கிள் | -1000 டொலர் |

Delta

அதிக உல்லாச நலம் தரும்!



இலவச கூபப்ன்களையும் பிராந்தியக் கடைகளின் பட்டியலையும் உங்கள் டெல்டா வியாபாரியிடம் கேட்டுப் பெறுங்கள். இந்தக் கூப்பனை 30 டெல்டா உறைகள் சகிதம் எந்தவொரு பிராந்தியக் கடையிலோ அல்லது உங்கள் டெல்டா வியாபாரியிடமோ கொடுத்தால் உங்களுக்கு டெல்டா டொலர் கிடைக்கும். இந்த டெல்டா டொலர்களைப் பத்திரப்படுத்தி வைத்துப் பிராந்தியக் கடைகளில் மேலே குறிப்பிடப்பட்ட வெகுமதிகளைப் பெறலாம்

மகத்தான டெல்டா வெகுமதித் திட்டம் 6 மாதங்களுக்கு மட்டுமே செல்லுபடியாகும்.

1989 நவம்பர் முதல் 1990 மே வரை.

வேடிக்கையும் விநோதமும் நிறைந்த டெல்டா டொலர் வெகுமதித் திட்டத்தில் அற்புதமான வெகுமதிகளைப் பெறுங்கள்.

டெல்டா...,நலச்செழுமையும் குதூகலமும் தரும்.

UPALI உபாலி ட்ரேடிங் கம்பனி லிமிட்டெட்

223, பூரூமென்டோல் வீதி, கொழும்பு 13.

இலவச கூபப்ன்களையும் பிராந்தியக் கடைகளின் பட்டியலையும் உங்கள் டெல்டா வியாபாரியிடம் இருந்து பெற்று இன்றே டெல்டா டொலர் வெகுமதியைப் பெறத் தயாராகுங்கள்!

# முளைகட்டிய தானியங்களை உண்பது

# உடல் ஆரோக்கியத்துக்கு நல்லது

## பழங்கள் தரும் போஷாக்கை சுலபமாகப் பெற்றிடலாம்

—டி. ஜி. பத்ரசாமி—

நம் தேசத்துக்கு தேவைப் படும் ஊட்டச் சத்துகளையும் தாதுப் பொருள்களையும் பழங்கள் மட்டுமே ஈடுகட்டும் எனக் கருதுவது சரியானதாகாது-

முளை கட்டிய தானியங்களினால் விளையும் பயன்களை அறிந்தவர்கள் இவ்வுண்மையை நன்கு அறிவார்கள் எனவே பழ வகைகளுக்குப் பதிலாக முளை கட்டிய பல வகை தானியங்களை உணவுடன் சேர்த்துக் கொள்ளுவது நம் ஆகாரத்தை முழுமை பெறச் செய்யும் என்பதில் சந்தேகமே இல்லை-

தானியங்களை முளைவிடச் செய்வது சுலபமானது; கால அளவுகள் வேறுபடும் என்பதுதான் கவனத்தில் வைத்துக் கொள்ள வேண்டியதாகும்-

சுமார் இருபத்து நான்கு மணி நேரத்தில் முளை கிளம்பக் கூடிய தானியங்கள் அல்லாமல் இரண்டு அல்லது மூன்று நாட்களில் முளைவிடும் தானியங்களும் உண்டு- ஆகையால் அந்தந்த தானியங்களுக்கு ஏற்ப கண்காணித்து வரவேண்டும்-

முளை கட்ட விடுவதற்கு முன் நொருங்கிப் போன மற்றும் சொத்தைகளை நீக்கி நல்லனவற்றை மட்டும் தனியாக எடுத்துக் கொண்டு அவற்றை இரண்டு மூன்று தடவைகளுக்குக் குறையாமல் போதிய தண்ணீரில் நன்றாகக் கழுவி சுத்தம் செய்வது அவசியம்- பின்னர் தானிய அளவைப் போல் இரண்டு மடங்கு சுத்தமான தண்ணீரில் அவற்றை ஊறவைக்க வேண்டும்-

நன்றாக ஊறிய பின்னர் நீரை வடித்து விட்டு லேசான துணியில் இறுக்கமில்லாமல் துவளும்படியாய் கட்டித் தொங்கவிட வேண்டும் காற்றோட்டம் தேவை-

ஆயினும் தானியங்கள் உலர்ந்து காய்ந்து விடாமல் இருக்கும் பொருட்டு அவ்வப் போது சிறிது நீரைத் தெளிக்க மறந்து விடலாகாது- முளைவிட ஈரப்பதம் உதவுபடியானதாகையால் ஜாக்கிரதையாகத் தேவைக்கு அதிகமாகி விடாமல் தெளிப்பது அவசியம்- அதிக நீரைத் தெளிப்பதால் தானியங்கள் அழுகிப் போவதும் சாத்தியமல்லவா?

முளைவிட கட்டித் தொங்க வைத்திருக்கும் ஊறிய தானியங்களை அவ்வப்போது முறையாக கண்காணித்து வருவோமானால் ஏதேனும் காரணங்களால் ஒன்று அல்லது இரண்டு அழுகத் தொடங்கி இருக்குமாயினும் அவற்றால் இதர நல்லன பாதிக்கப் படாத வகையில் உடனுக்குடன் நீக்கிவிட இயலும் துர்வாடை தோற்றுவதையும் எளிதில் தவிர்த்துவிடலாம்-

முளை விட்ட பக்குவமான தானியங்களை உரிய முறையில் பாதுகாத்து "குளிர்ப் பெட்டியினுள்" வைத்திருப்பது மேலும் சில நாட்கள் அவற்றைப் பயன்படுத்த சௌகரியமாகும்-

நாம் சமையலுக்கு உபயோகிக்கும் எந்த வகையான தானியங்களாயினும் அவற்றை முளை கட்ட விடலாம்-

முழுத் துவரை, சுண்டக்கடலை பாசிப்பயறு, சோயாபீன்ஸ் தட்டைப்பயறு அல்லது காரமணிப் பயறு உளுந்து, மொச்சை போன்றவை நமக்கு எளிதில் கிடைப்பனவாகும்- அவை பல் வேறு சத்துப் பொருள்கள் உடையனவாக இருப்பதால் நம் ஆரோக்கியத்துக்கும் வலுவுக்கும் ஏற்றவையாகின்றன-

காலை உணவுடன் முளை கட்டிய தானியங்களைச் சேர்த்துக் கொள்ளுவது மிகச் சிறந்த பலனைத் தரும்- பலவித தானியங்களைத் தனித்தனியே முளை கட்டி வைத்துக் கொண்டு விரும்பும் வேளைகளில் சாப்பிடுவது நலமாகும்-

நம் ஒவ்வொருவருக்கும் ருசியைப் பொறுத்தவரை மாறுபட்ட அபிப்பிராயங்கள் இருப்பது இயல்பானதாகும்- ஆகையால் பச்சை தானியங்களை உண்பதற்கு விருப்பமில்லாதவர்கள் முளைகள் சிதையாத வகையில் வேகவைத்தும் சாப்பிடலாம்-

வெங்காயம், தக்காளி, பச்சை மிளகாய், காரெட் வெள்ளரிப் பிஞ்சு கொத்தமல்லித்தழை ஆகியனவற்றை தேவைக்கேற்ப நறுக்கித் துண்டுகளாக்கி முளை கட்டிய தானியங்களோடு சேர்த்தால் சாப்பிட சுவை மிக்கனவாக இருக்கும்-

இனிப்பை விரும்புபவர்கள் திராட்சை, பேரீச்சம் பழத்துண்டுகள், தேங்காய்த் துருவல் முதலியனவற்றுடன் வெல்லம் அல்லது தேன் போன்றவற்றைக் கலந்து கொள்ளலாம்-

முளை கட்டிய தானியங்களை நன்றாக மென்று தின்பது மிகவும் அவசியமாகும்- அப்போதுதான் அவற்றின் முழுப் பயனையும் நம் சரீரம் ஏற்க முடியும்- மெல்லுவதால் வாயில் ஊறும் உமிழ்நீர் நம் ஜீரண சக்திக்கு அனுகூலமாகும், ருசியின் ரசமான அநுபவத்துக்கு அறிகுறியுமாகும்-

முளை கட்டிய தானியங்களை அளவோடு வேகவைப்பதால் அவை அவற்றின் தன்மையை இழப்பதில்லை-

வழக்கமான நம் அன்றாட ஆகாரங்களோடு முளை கட்டிய தானியங்களையும் சேர்த்துக் கொள்ளுவது சரீரத்தின் சராசரித் தேவைகளை பெரிதும் ஈடு செய்யும் என்பதை நிபுணர்களும் சுட்டிக்காட்டியுள்ளார்கள், பழங்கள் தரும் அத்தனை போஷாக்குகளையும் முளை கட்டிய தானியங்கள் நமக்கு போதிய அளவுக்கு வழங்குகின்றன என்பதில் ஐயமில்லை-

[ம—10]



# சோதிட சிந்தாமணி

சிந்தாமணி சோதிடர்: திரு. ஆர்வி

[11—3—1990 தொடக்கம் 17—3—1990 வரை உள்ள பலாபலன்கள்]

### மேஷம்

அசுவினி பரணி காத்திகை 1ஆம் கால்

மேஷம்- தொழில் விஷயங்களில் போட்டிகள், எதிர்ப்புக்களைச் சமாளித்து முன்னேறக் கூடியதாக இருக்கும்- பொருளாதாரத்தில் சுபீட்சம் தோன்றும், வெளியிடத்து நண்பர்களை ஆதரிக்க நேரிடும், வெளிநாட்டில் இருந்து கிடைக்கும் செய்தி மன அதிர்ச்சியைத் தரும்-

### சிங்கம்

மகம் பூரம் உத்தரம் 1ஆம் கால்-

சிங்கம்- தொழிற்துறையில் அபிவிருத்தி காணப்படும், பழைய கடன்கள் திரும்பி வரும் பொருள்வரவு அதிகரித்தாலும் அதற்கேற்பச் செலவினங்களும் உண்டாகும், ஆனால் ... தொல்லை இல்லை, உறவினர் ஒருவரால் குடும்பத்தில் பிரச்சினை ஒன்று உருவாகும்-

### தனு

மூலம் பூராடம் உத்தராடம் 1ஆம் கால்-

தனு- உத்தியோகஸ்தர்களுக்கு உயர்ச்சிக்கு இடமுண்டு, சம்பளமாற்றம் ஏற்படும், மேலதிகாரியின் உதவியும், பாராட்டும் கிடைக்கும், பழைய முதலீடுகள் பயன் கொண்டுவரும், அந்நிய நண்பர்கள் உதவியாய் இருப்பார்கள், எதிர்பாராத பிரயாணம் ஒன்றுக்கு இடமுண்டு-

### ரிஷபம்

கார்த்திகை 2 3 4ஆம் கால்கள்- ரோகிணி – மிருகசீரிடம் 1ஆம் 2ஆம் கால்கள்-

ரிஷபம்- பணப்புழக்கம் தாராளமாக இருக்கும், கொடுக்கல்,

### கன்னி

உத்தரம் 2ஆம் 3ஆம் 4ஆம் கால்கள்- அத்தம் சித்திரை 1 ஆம் கால்கள்-

கன்னி- சுயகரும முயற்சிகளில் முன்னேற்றம் காணப்படும்,

### மகரம்

உத்தராடம் 2 3 4ஆம் கால்கள்- திருவோணம் – அவிட்டம் 1 – 2ஆம் கால்கள்-

மகரம்- குடும்பத்தில் சுமுகமான உறவு நிலவும், வெளியிட

சிந்தாமணி எண் சோதிடம்
NUMEROLOGY

உக்கிரமாக வெயில் காலத்தில் நுவரெலியாவில் ஒரு வாரம் குளிர்ச்சியாக இருக்கக் கிடைக்குமானால் எவ்வளவு சுகமாக இருக்கும் என்று நினைத்து ஆதங்கப் படாதவர்களே இல்லை எனலாம்

வெயிலின் போது குளிர்ச்சியாக இருக்கக் கிடைத்தால் மகிழ்

கார்த்திகை 2 3 4ஆம் கால்கள்– ரோகிணி – மிருகசீரிடம் 1ஆம் 2ஆம் கால்கள்–

ரிஷபம்– பணப்புழக்கம் தாராளமாக இருக்கும், கொடுக்கல், வாங்கல் திருப்தியாக நடைபெறும்– குடும்பத்தில் சுபகாரியங்கள் இடம்பெறும், எடுத்த கருமங்களில் வெற்றி கிட்டும்– வெளிநாட்டில் இருந்து மனதுக்கு மகிழ்ச்சியான செய்தி கிடைக்கும், பிள்ளைகளால் புகழ் உண்டு–

உத்தரம் 2ஆம் 3ஆம் 4ஆம் கால்கள்– அத்தம் சித்திரை 1 ஆம் கால்கள்–

கன்னி– சுயகரும முயற்சிகளில் முன்னேற்றம் காணப்படும், பெரியவர்களின் உதவி கிடைக்கும், குடும்பத்தில் மகிழ்ச்சியான சம்பவங்கள் இடம்பெறும், உறவினர்கள், நண்பர்கள் உதவியாக இருப்பார்கள், வாரக் கடைசியில் உடல்நலம் சிறிது பாதிக்கப்படலாம்–

உத்தராடம் 2 3 4ஆம் கால்கள்– திருவோணம் – அவிட்டம் 1 – 2ஆம் கால்கள்–

மகரம்– குடும்பத்தில் சுமுகமான உறவு நிலவும், வெளியிடத்து விருந்தினரை உபசரிக்க வேண்டியிருக்கும், செலவினங்கள் அதிகரித்தாலும் சமாளித்துக் கொள்ளலாம், வாகனத்தால் செலவு அல்லது விபத்துக்கு இடமுண்டு, தூரப்பயணங்களைத் தள்ளிப் போடுவது நல்லது–

## மிதுனம்

மிருகசீரிடம் 3ஆம் 4ஆம் கால்கள்– திருவாதிரை – புனர்பூசம் 1 2 3ஆம் கால்கள்–

மிதுனம்– பொருளாதாரத்தில் அபிவிருத்தி காணப்படும், நண்பர்கள் மூலமாக உதவி கிடைக்கும், நீண்ட நாளையப் பிரச்சினைகள் சில விடுபடும், கோர்ட் வழக்குகள் தள்ளிப்போடப்படும், அரசாங்கத் தண்டம் ஒன்றுக்கு இடமுண்டு, கலைஞர்கள் புகழடைவார்கள்–

## துலாம்

சித்திரை 3 4ஆம் கால்கள்– சுவாதி விசாகம் 1 2 3 ஆம் கால்கள்–

துலாம்– தொழில், வியாபாரம் நல்ல முறையில் நடந்தாலும் எதிர்பார்த்த இலாபம் கிடைப்பது கஷ்டம், பொறுமையிழந்து செயற்படுவதால் விரோதங்களைத் தேடிக் கொள்ள நேரிடும், பழைய முதலீடுகள் பலன் தரும், காணி, பூமி, வாகனத்தால் வருமானம் அதிகரிக்கும்–

## கும்பம்

அவிட்டம் 3 4 ஆம் கால்கள்– சதயம் – பூரட்டாதி 1 2 3 ஆம் கால்கள்–

கும்பம் கௌரவம் புகழ் செல்வாக்கு நன்றாக இருக்கும், முகவசீகரத்தால் கருமங்களைச் சாதித்துக் கொள்ள முடியும், பணவரவு திருப்திகரமாக இருக்கும், உல்லாசப் பொழுதுபோக்குகளில் ஈடுபட நேரிடலாம்– வாரக்கடைசியில் தேகாரோக்கியம் சிறிது பாதிக்கப்பட்டாலும் கவலைக்கு இடமில்லை–

## கடகம்

புனர்பூசம் 4ஆம் கால்– பூசம் ஆயில்யம்–

கடகம்– குடும்பத்தில் நல்லுறவு காணப்படும், பிரச்சினைகள் குறைந்து நிம்மதி ஏற்படும், புதிய உறவுகளால் நன்மைகள் உண்டாகும், செலவினங்கள் அதிகரித்தாலும் சமாளித்துக் கொள்ளலாம், அன்புப் பிராணிகளால் கவலையும் செலவும் ஏற்படும்–

## விருச்சிகம்

விசாகம் 4ஆம் கால்– அனுஷம் கேட்டை–

விருச்சிகம்– கௌரவம், புகழ் நன்றாக இருக்கும் வீண் அலைச்சலும், பண விரயமும் ஏற்படும்– மனநிம்மதி குறைவு– உடல் நலம் பாதிக்கப்படும், வெளிநாட்டில் இருந்து கிடைக்கும் செய்தியால் புது முயற்சி ஒன்றுக்கு அடிபோடக் கூடும், குடும்ப நலம் நன்றாக இருக்கும்–

## மீனம்

பூரட்டாதி 4 ஆம் கால்– உத்திரட்டாதி – ரேவதி–

மீனம்– தொழில், வியாபாரம் சிறந்து விளங்கும், தேங்கிக் கிடந்த பொருட்கள் விற்பனையாகும், அதிக இலாபம் கிடைக்கும், நண்பர் ஒருவரால் தொல்லைகள் உருவாகலாம், வெளிநாட்டில் இருந்து மகிழ்ச்சியான செய்தி கிடைக்கும், குடும்ப நலம் நன்றாக இருக்கும்–

# சிந்தாமணி எண் சோதிடம்

## NUMEROLOGY

[11—3—1990 தொடக்கம் 17—3—1990 வரை உள்ள பலாபலன்கள்]

## 1

1 10 19 28ஆம் திகதிகளில் பிறந்தவர்களுக்கு —

குடும்பத்தில் நிம்மதி– அடிக்கடி பிரயாணம்– புது முயற்சிக்கு அடிபோடல்– பெண்களால் ஏமாற்றம் – வீண் வாக்குவாதம்– பெரியார் உதவி–

அதிஷ்ட நாட்கள்– ஞாயிறு செவ்வாய் – வெள்ளி–

## 2

2 11 20 29ஆம் திகதிகளில் பிறந்தவர்களுக்கு —

பிரயாசை மிகுதி– உழைப்புக்கேற்ற ஊதியம்– உறவினரால் கவலை– வீண் அலைச்சல்– வழக்குகளில் வெற்றி– விருந்தினர் வருகை– சிறு பிரயாணம்–

அதிஷ்ட நாட்கள்— செவ்வாய் – வெள்ளி–

## 3

3 12 21 30ஆம் திகதிகளில் பிறந்தவர்களுக்கு —

தொழிலில் முன்னேற்றம் அதிக லாபம்– பழைய கடன் திரும்பி வரல்– வீட்டுக் கஷ்டம் தீர்தல்– வாகனத்தால் செலவு அல்லது விபத்து– நண்பர்கள் உதவி–

அதிஷ்ட நாட்கள்— திங்கள் – வியாழன்–

## 4

4 13 22 31ஆம் திகதிகளில் பிறந்தவர்களுக்கு —

காரியசித்தி நோய் தீர்தல்– ஆலய தரிசனம்– சகோதரர்களுடன் மனஸ்தாபம்– அதிக செலவு– ஆடை ஆபரணச் சேர்க்கை– காதலில் வெற்றி–

அதிஷ்ட நாட்கள்— ஞாயிறு வெள்ளி–

## 5

5 14 23ஆம் திகதிகளில் பிறந்தவர்களுக்கு —

இராச சத்துரு பயம்– சிறு சுகயீனம்– தேக மெலிவு– சோம்பல்– மனைவி வழியால் ஆறுதல்– காணி பூமியால் பலன் விடுபட்ட நண்பர்கள் சேர்தல்

அதிஷ்ட நாட்கள்— புதன் வெள்ளி

## 6

6 15 24ஆம் திகதிகளில் பிறந்தவர்களுக்கு —

தனதானிய இலாபம்– சிநேகிதர்களால் கவலை– பணவரவு மேல் உத்தியோகத்தரால் பாராட்டு– நோய் தீர்தல்– சகோதர வழியால் செலவு–

அதிஷ்ட நாட்கள்— திங்கள் வியாழன்–

## 7

7 16 25ஆம் திகதிகளில் பிறந்தவர்களுக்கு —

சம்பள உயர்வு– பொதுசன மதிப்பு– புகழ் பிரயாணம்– வீட்டுப் பிரச்சினை– புத்திரரால் கவலை– தூக்கமின்மை– சத்துரு ஜயம்– சிறு காயங்கள்–

அதிஷ்ட நாட்கள்— ஞாயிறு திங்கள்–

## 8

8 17 26ஆம் திகதிகளில் பிறந்தவர்களுக்கு —

கருமகாரிய சித்தி– பண வருவாயில் சுணக்கம்– இனபந்துக்கள் உதவி– வைத்தியச் செலவு– வாகனத்தால் செலவு– காதலில் விரக்தி– சோகம்–

அதிஷ்ட நாட்கள் திங்கள் புதன் – வியாழன்–

## 9

9 18 27ஆம் திகதிகளில் பிறந்தவர்களுக்கு —

குடும்பானுகூலம்– விருந்தினர் வருகை– அதிக செலவு– பணத் தட்டுப்பாடு– தொழில் மந்தம்– நெருப்பினால் பயம்– பழைய முதலீடுகளால் பலன்–

அதிஷ்ட நாட்கள்— திங்கள் – வியாழன்–

நுவரெலியாவில் ஒரு வாரம் குளிர்ச்சியாக இருக்கக் கிடைக்குமானால் எவ்வளவு சுகமாக இருக்கும் என்று நினைத்து ஆதங்கப்படாதவர்களே இல்லை எனலாம்

வெயிலின் போது குளிர்ச்சியாக இருக்கக் கிடைத்தால் மகிழ்ச்சிதான்– ஆனால் கடும் குளிர் காலத்தில் படும்பாடு எத்தகையது?

நாம் கடும் வெயிலை விரும்பாததைப் போலவே மேல் நாட்டவர் தாம் வருடா வருடம் எதிர்நோக்கும் பனிக்காலம் உக்கிரமாகவும் நீண்ட காலம் கொண்டதாகவும் இருக்கக் கூடாது என்று விரும்புகிறார்கள்– இதன் பொருட்டு பல நம்பிக்கைகளும் அவர்களிடையே நிலவி வருகிறது–

மேல் நாடுகளில் கிறவுண்ட் ஹொக் அல்லது வூட்சக் என அழைக்கப்படும் ஒரு பிராணி பனிக்காலம் வந்ததும் மரத்தின் பொந்து ஒன்றை அமைத்து நிலத்தின் கீழ் சென்று உறங்கத் தொடங்கி விடும்–

பனிக்காலம் போய் வசந்தம் தலை காட்டியதும் தான் தூக்கம் கலைந்து உடலைச் சிலிர்த்துக் கொண்டு வெளியே வரும் இந்தப் பிராணி–

மேல் நாட்டினரின் நம்பிக்கையின் பிரகாரம் பெப்ரவரி 2 ஆம் திகதி நித்திரை கலைந்து இப்பிராணி வெளியே வந்து தனது நிழல் நிலத்தில் வீழ்வதைக் கண்டால் பனிக்காலம் நான்கு வாரங்களில் முடிவடைந்து விடுமாம்–

அமெரிக்க பென்சில் வேனிய மாநில ஆளுநர் உயிருள்ள கிறவுண்ட் ஹொக் பிராணியைச் சந்திக்க வில்லை எனவே பஞ்சடைக்கப்பட்ட கிறவுண்ட் ஹொக் பிராணிக்கு உணவு ஊட்டுவதை இப்படம் சித்திரிக்கிறது ஆனாலும் தொடர்ந்தும் கடும் பனி நிலவி வருகிறதாம்!

(ம–032)

# முழு யானை ஒன்றினை முற்றாக சாப்பிடுவது எப்படி?

## ஜெர்மன் பேராசிரியர் காட்டிய வழி

ஒரு முழு யானை அதுவும அதனை முற்றாக எப்படிச் சாப்பிடுவீர்கள் என்று திடீரென்று ஒரு குண்டை ஹோட்டல் மண்டபத்திலிருந்த எம்மிடம - தூக்கிப் போட்டார் அந்த மேற்கு ஜெர்மன் புரெபசர்.

யானை என்றாலே இலங்கை தான் நினைவுக்கு வரும, அந்த அளவுக்கு யானைகள் நிறைந்த இலங்கையில் -

யார் எதைக் கேட்டாலும அது உலகின் எந்த மூலையில் இருந்தாலும சரி - அதைத் தேடிக் கொண்டு வந்து பதமாக சமைத்து பக்குவமாக பரிமாறும ஹோட்டல் ஹில்டன் இண்டர் நெஷனலில்-

நினைத்ததை - நினைத்த மாத்திரத்திலே சாதித்து சரித்திரம படைக்கும ஜெர்மன் நாட்டில் இருந்து வந்த புரெபசர் கேட்ட கேள்வி,

எம்மை ஒரு கணம திகைக்க வைத்தது- யானையைப் பொரித்தா, அவித்தா, அல்லது போறணையில் வைத்து வேக வைத்தா சாப்பிடக் கொண்டு வரப் போகிறார்கள் என்று எம்மில் பலர் - சங்கடப்பட்டு வளைந்து நெளிந்தார்கள்.

எமது சங்கடத்தைப் புரிந்து கொண்ட மாதிரி புரெபசர் - "யானையை முழுதாக சாப்பிடுவது கஷ்டமான விஷயம, ஆனால் யானையைத் துண்டு துண்டாக வெட்டி எடுத்துக் கொண்டு தினமும ஒரு துண்டாக சாப்பிட்டு வந்தால் - ஓரிரு மாதங்களில் முழு யானையையும முற்றாக சாப்பிட்டு முடித்து விடலாம" என்றார்,

சரிதான, யானை முழுதாக வராது- துண்டு போட்டுத்தான் கொண்டு வரப் போகின்றார்கள் என்று கொஞ்சம சமாதானமடைந்தாலும் - எனக்கு வயிற்றுக்குள் ஏதோ செய்தது-

திரும்பவும தொண்டையைக் கனைத்து எமது கவனத்தை தன்பால் திருப்பினார் புரெபசர், அடுத்த குண்டு என்னவாக இருக்கும என்று நினைப்பதற்குள் புரெபசர் -

"அதுபோலவே - யானையைப் போல் - எந்த ஒரு பெரிய வேலையையும - முழுதாகச் செய்து முடிக்க வேண்டும

நிர்வகிப்பது - என்பதே "நேர நிர்வாகம" Time Management என்ற கலை.

அன்று இந்தக் கலந்துரையாடலுக்கு வந்திருந்த பலரிடம - கலந்துரையாடல் ஆரமபிக்க முன்னர் - பேச்சுக் கொடுத்துப் பார்த்ததில் - பல விஷயங்களும

**நேர நிர்வாக கலை பற்றிய ஒரு கட்டுரை**

- சில உண்மைகளும் புரிந்தன.

அங்கு வந்திருந்த அத்தனை பேரும - சாமானியமானவர்கள் அல்லர்.

தொழில் நிறுவனங்களின் முகாமையாளர்கள் - தொழில் அதிபர்கள் - நிர்வாகிகள் - சட்டத்தரணிகள் - டாக்டர்கள், அரச அதிகாரிகள் - போன்ற சமூகத்தில் அறிவு ஜீவிகள் என்று கருதப்படுபவர்கள் அங்கு சமுகமளித்திருந்தார்கள்,

அத்தனை பேருக்கும ஒரு பிரச்சினை பொதுவாக இருந்தது- அதுதான் நேரத்தைத் தேடுகின்ற பிரச்சினை

ஆனால் அந்த நேரத்தைப் பிடித்து வைத்து - மனிதனால் சரியாக நிர்வகிக்கத் தெரியவில்லை. அலுவலகத்தை சரியாக நிர்வகிக்க முடியவில்லை என்றால் - வேலைகள் ஒழுங்காக நடைபெறமாட்டா - அதுபோல் நேரத்தைச் சரியாக நிர்வகிக்க தெரிந்து கொள்ளா விட்டால் நாம நினைத்த திட்டங்கள் வெற்றி பெறமாட்டா,

நேரத்தை ஆளத் தெரியாத மனிதன்தான் தினமும நேரம இல்லை - நேரம இல்லை என்று ஆலாய்ப் பறக்கின்றான்,

குடி குடியென்று குடித்துக் கொண்டே இருப்பவன் குடிகாரனாவது போல்-வேலையைத் தூக்கி 24மணி நேரமும தலையில் சுமந்து திரிபவனும வேலைக்கு அடிமையாகிறான், குடிகாரனை Alcoholic என அழைப்பது போல் வேலை வேலை என்று சதா வேலைக்கு அடிமையான


பது இல்லாமல் போகின்றது!

காலம நமமை ஆள விட்டால் காலகெதியில் காலன் நமமைக் கட்டி இழுத்துப் போய் விடுவான். எனவே காலத்தை நாம ஆளப் பழகிக் கொள்ள வேண்டும- அது தான் "நேர நிர்வாக" கலை!

முதலில் உங்கள் நேரத்தை சரியாக உபயோகிக்க கற்றுக் கொள்ளுங்கள்- பௌதிகம, இரசாயனம போல் இதுவும ஒரு விஞ்ஞானக் கலை! கற்றுக் கொண்டால்தான் புரியும!

நேரத்தை சரியாக உபயோகிக்க முதலில் உங்கள் இலட்சியம என்ன? எதிர்காலத் திட்டங்கள் என்ன? என்பதை வரையறுத்து வைத்துக் கொண்டு அதற்கேற்ற வாறு வருட நேர அட்டவணை மாத நேர அட்டவணை, தினசரி நேர அட்டவணை என்று மூன்று அட்டவணைகளைத் தயாரித்துக் கொள்ளுங்கள்-

இலட்சியங்கள், திட்டங்கள் பெரியவையாக இருந்தால் ஒரே மூச்சில் நீங்கள் அவற்றை அடைந்து விட முடியாது!. யானையைச் சாப்பிடுவது போல் சின்னச் சின்ன திட்டங்களாக அவற்றை உடைத்து வைத்துக் கொண்டு ஒவ்வொரு சின்னத் திட்டத்தையும முடிக்க ஒரு நேர அட்டவணை தயாரியுங்கள்!



அடுத்ததாக - பணிகளை தரப் படுத்த வேண்டும-

மிக அவசியமான - மிக அவசரமாக முடிக்க வேண்டிய பணிகளை A வகை பணிகள் என்று குறித்துக் கொள்ளுங்கள்- இவைகளை நீங்கள் தான் முன்னின்று நடத்த வேண்டும- அதுவும உடனடியாக நடத்த வேண்டும்-

மிக அவசியமான - ஆனால் அவசரமாக செய்யத் தேவை இல்லாத பணிகள் B வகை இவை உங்கள் பெரிய திட்டத்தை முடிக்க உதவும சிறிய பணிகள்- பெரிய யானையை சிறிய சிறிய துண்டுகளாக சாப்பிடுவது போல் - தினமும கொஞ்சம கொஞ்சமாக செய்ய வேண்டிய பணிகள்-

அடுத்தது அவசரமாக அன்றைய தினமே முடிக்க வேண்டிய பணிகள்- ஆனால் சராசரி அவசியம குறைந்தவை- இவை C வகைப் பணிகள்- இவை நாளாந்த சராசரி வேலைகள்- கடிதம் எழுதுதல் - தபாலில் போடுதல் - தொலைபேசி அழைப்புகள் போன்றவை- இவற்றை நீங்கள்தான் முன்னின்று செய்ய வேண்டும என்பதில்லை- மற்றவர்களிடம ஒப்படைக்கலாம- இதனால் உங்கள் நேரத்தை மிச்சப்படுத்த முடியும்- இந்த நேரத்தை B வகைப் பணிகளுக்கு ஒதுக்கி வைக்க முடியும்- இதனால் உங்கள் இலட்சியத்தை அடையும் முயற்சி முன்னேறும்-

எந்தப் பணியையும திட்டமிட்டபடி முடிக்கலாம என்ற தன்னம்பிக்கையுடன் ஆரமபியுங்கள்- முடிக்க முடியுமா என்ற நம்பிக்கையில்லாத நிலையில் தொடங்காதீர்கள்- முடிக்க இயலாத பணியைத் திட்டமிடாதீர்கள்-

இந்தப் பணிக்கு இவ்வளவு நேரம தான் என்று நேரத்தை ஒதுக்குங்கள்- அந்த நேரத்தில் அந்தப் பணியைத் தவிர - வேறெதையும் செய்யாதீர்கள்-

இந்தக் கட்டாய நேரத்தை - நேர நிர்வாக கலையில் - "அமைதி நேரம" (Quiet Time) என்று சொல்லப்படும- இந்த அமைதி நேரத்தில் - உங்களை எந்த தொலைபேசி அழைப்போ - முன் அறிவித்தல் இன்றி வரும சந்திப்புகளோ பிரச்சினைகளோ - குறுக்கீடு செய்யாமல் பார்த்துக் கொள்ளுங்கள்-

ஒவ்வொரு குறுக்கீடும நீங்கள் இலட்சியத்திற்காக இரண்டு அடி ஏற - ஒரு அடி சறுக்க வைக்கும-

உங்கள் செயலாளர் - வரவேற்பாளர் என்போர் - இந்தக் குறுக்கீடுகளில் இருந்து உங்களைக் காப்பாற்ற கடமையுள்ளவர்கள்- இந்தக் குறுக்கீடுகளை அவர்களைச் சமாளிக்கச் சொல்லுங்கள்-

உங்கள் இலட்சியப் பாதை



# தங்கநிற மேனியுனர் ஸ்ரீ சைதன்யர்

## கலியுகத்தில் அவதரித்து அருள் பாலித்த புனிதர்

இந்தியாவிலுள்ள மாயப் பூரில ஐநூறு வருடங்களுக்கு முன் ஒரு நாள், அந்த மயங்கும வேளை, அப்போது சந்திர கிரகணம ஏற்பட்டிருந்தது-

ஜகன்னாத மிஸ்ர என்னும பிராமணரின மனைவி சசிதேவி, தங்கநிற மேனியுடன் ஒரு ஆண் மகவை ஈன்றெடுத்தாள்,

பகவானின் தூய பக்தனாக வாழ்ந்து காட்டிய ஸ்ரீசைதன்யரின் மேற்படி பிறப்பு பற்றி ஐயாயிரம ஆண்டுகள பழைமை மிக்க வேத நூல்களில் குறிப்பிடப்பட்டுள்ளன,

சங்கீர்த்தன யாகத்தைத் தோற்றுவித்தவர் ஸ்ரீசைதன்யரே- சங்கீர்த்தன யாகம என்றால் பகவானின் புனித நாமங்களை ஜெபித்தல் என்பது ஆகும,

கலியுக துன்பங்களிலிருந்து விடுபட பகவானின் புனித நாமங்களை ஜெபித்தலே சரியான வழி, என்பதை உலகுக்கு உணர்த்துவதே சைதன்யர் வாழ்க்கையின் குறிக்கோளாக இருந்தது-

பிற்காலத்தில் அவரின் வாழ்க்கையே சங்கீர்த்தன யாகமாக மாறியது- அதாவது பகவான் நாமத்தைப் பாடிக் கொண்டு ஆடிப்பாடித் திரிதல்.

கலியுகத்தில மக்கள் விடுதலை

— ஸ்ரீமான் மஹாகர்த்தாதாஸ் —

இந்தக் கலியுகத்தில் விவேக மு... வாகள் புனித நாமங்களை

அடுத்த குண்டு என்னவாக இருக்கும் என்று நினைப்பதற்குள் புரெபசர் –

"அதுபோலவே – யானையைப் போல் – எந்த ஒரு பெரிய வேலையையும் – முழுதாகச் செய்து முடிக்க வேண்டும் என்றால் – அதைச் சிறு சிறு பகுதிகளாக்கி தினமும் கொஞ்சம் கொஞ்சமாக செய்து வந்தால் – முழுவேலையும் – சிரமம் இல்லாமல் குறித்த காலத்திற்கு முன்பே செய்து முடிக்கப்படும்" என்றார்,

"அப்பாடா" என்று நிம்மதிப் பெருமூச்சுகள் சபையோரிடமிருந்து எழுந்தன.

தொடர்ந்து –

"வேலை சிறியது என்றாலும் – பெரியது என்றாலும் பரவாயில்லை, அதனைச் செய்ய முன்னர் அதை எப்படிச் செய்யப் போகின்றோம் என்பதைத் திட்டமிட வேண்டும். பின்னர் திட்டமிட்டதை – நேரப்படி – நேரத்தை நிர்வகித்து – புரிய முயல வேண்டும், எப்படி நேரத்தை பிரயோசனமாக உபயோகிப்பது என்பதுதான் – இன்று நான் உங்களோடு கலந்துரையாட எடுத்துக் கொண்ட தலைப்பு" என்று முடித்தார்,

இரண்டு வாரங்களுக்கு முன்பு ஒரு நாள் மத்திய கொழும்பு ரோட்டரி கழகத்தின் ஆதரவில் ஹோட்டல் ஹில்டனில் – ஜெர்மனியைச் சேர்ந்த புரெபசர் – லோத்தா ஸீவார்ட் – "நேர நிர்வாகம்" என்ற பொருள் பற்றி கலந்துரையாடும் போதே மேற்கூறிய – யானைக் கதையை கூறினார்,

புரெபசர் – லோத்தா ஸீவார்ட் ரோஜ்சட்டின் – என்ற நகரில் உள்ள – நேர நிர்வாக கல்வி நிலையத்தின் பேராசிரியர், "நேர நிர்வாகம்" என்று – நிர்வாகத் துறையில் இன்று ஒரு கலக்கு கலக்கி வரும் ஒரு கலையில் "எக்ஸ்பேர்ட்"

நேரத்தை எப்படி திட்டமிட்டு எமக்கு உதவக் கூடிய வகையில் கருதப்படுபவர்கள் அங்கு சமூகமளித்திருந்தார்கள்,

அத்தனை பேருக்கும் ஒரு பிரச்சினை பொதுவாக இருந்தது – அதுதான் நேரத்தைத் தேடுகின்ற பிரச்சினை.

"எங்களுக்கு இருக்கிற நேரம் போதாது", "எனக்கு நேரம் கிடைப்பதில்லை", "எந்த நேரமும் நான் பிஸி, ஓய்வே கிடையாது", "எனக்கு ஒரு நாளைக்கு 24 மணி நேரம் போதாது – இன்னும் 10 மணி நேரம் கூட இருந்தால் தான் திருப்தி" என்று நேரத்தைத் தேடிக் கொண்டு திரிகின்ற – ஒரு இரு நூறு பிரகிருதிகள் – தலைக்கு இரு நூறு ரூபாவீதம் கட்டி கலந்துரையாடலில் கலந்து கொள்ள வந்திருந்தார்கள்,

"காலம் பொன்னானது – அதை வீணாக்காதீர்கள்" என்று தனது கருத்துரையை ஆரம்பித்த பேராசிரியர் லோத்தாவின் பேச்சிலிருந்து சில முக்கிய விஷயங்களை மாத்திரம் – இங்கு பார்ப்போம்,

"காலில் கல் அடித்து விட்டது என்று சொல்லும் போது – கல் எமது காலைத் தேடிவந்தா தாக்கியது? மனிதன் தான் செய்யும் தவறுகளுக்கு – வாய் பேசாத விஷயங்களை வமபுக்கிழுப்பது வழக்கம்.

அதுபோல் – நேரம் இல்லை நேரம் போதாது என்று நாம சொல்லும் போது, நேரம் எங்கே மனிதனை விட்டுப் போனது?

காலையில் சூரியன் உதிப்பதும் – மாலையில் அது மறைவதும் தொடர்ந்து காலம் காலமாக நடந்து கொண்டிருக்கின்றது, நேரம் அதுபாட்டுக்கு ஓடிக் கொண்டிருக்கின்றது.

தூக்கி 24மணி நேரமும் தலையில் சுமந்து திரிபவனும் வேலைக்கு அடிமையாகிறான், குடிகாரனை Alcoholic என அழைப்பது போல் வேலை வேலை என்று சதா வேலைக்கு அடிமையானவனை – அழைக்க Workolic என்றொரு புதிய சொல் அகராதியில் நுழைந்திருக்கிறது–

இவர்களுக்கு வாழ்க்கையின் இலட்சியம் – வேலை வேலை பணம் வெற்றி சாதனை என்பவைதான்,

மனிதனின் சாதனையை வைத்தே அவனை எடைபோடுகிற ஒரு சமூக நிலை இன்று உருவாகி வருகிறது, இதனை Achievement Society என்கிறார்கள்.

இதனால் சதா வேலை வேலை என்று ஓய்வில்லாமல் உழைக்கும் மனிதன் –வாழ்க்கையின் நுட்பத்தை (Sense Of Life) அறிகிறானில்லை, அவனது உடல் நலம் கெடுகிறது, உளநலம் பாதிக்கப்படுகிறது, உயர் இரத்த அமுக்கம், இருதய வியாதி சர்க்கரை வியாதி, தூக்கமின்மை – எரிச்சல் – அலுப்பு சலிப்பு – தோல்வியை தாங்கிக்க முடியாத மனோநிலை – என்பவற்றால் பாதிக்கப்படுகின்றான்.

சதா வேலை வேலை என்று அவன் பாடுபட – அவனது வீடு காடாகிறது– இல்லற வாழ்க்கை பாதிக்கப்படுகிறது– இன்று ஜெர்மன் நாட்டில் மூன்றில் ஒரு திருமணம் முறிந்து விவாகரத்து ஆகின்றது!

வேலையே கதி என்றிருப்பவனுக்கு தொழில் சிநேகிதர் தவிர உண்மையான நண்பர்கள் கிடைப்பதில்லை! சமூக வாழ்வு என் சாப்பிடுவது போல் சின்னச் சின்ன திட்டங்களாக அவற்றை உடைத்து வைத்துக் கொண்டு ஒவ்வொரு சின்னத் திட்டத்தையும் முடிக்க ஒரு நேர அட்டவணை தயாரியுங்கள்!

திட்டங்களைத் தீர்க்கும் வழிகள் உங்கள் மூளையில் இருந்தால் மட்டும் போதாது! அவற்றைப் பென்சிலும் பேப்பரும் கொண்டு எழுத்தில் எழுதி வைத்துக் கொள்ளுங்கள்! இப்படித்தான் திட்டங்கள் அமுலாக வேண்டும்! இவ்வளவு காலத்திற்குள் செய்து முடிக்க வேண்டும் என்று வரையறுத்துக் கொள்ளுங்கள்–

பின்னர் தினமும் மாலையில் அடுத்த தினம் நீங்கள் உங்கள் திட்டங்கள் நிறைவேற ஆற்ற வேண்டிய பணிகளை, சந்திப்புகளை, எழுத வேண்டிய கடிதங்களை, எடுக்க வேண்டிய தொலைபேசி அழைப்புகளை, காலவரை வகுத்து ஒரு பேப்பரில் குறித்துக் கொள்ளுங்கள்– இவற்றை முதல் நாள் மாலையில் குறித்து வைப்பதற்கு முக்கிய காரணம் ஒன்று உண்டு–

எமக்கு அடி மனம் – (Subconscions Mind) ......... ஒன்று உண்டு– நமது வெற்றிகளுக்கும் தோல்விகளுக்கும் முக்கியமானது இந்த அடிமனம்– அடிமனத்தால் ஆமோதிக்கப்பட்ட கருத்துக்கள் இலகுவில் நிறைவேறி விடுகின்றன– எனவே நீங்கள் அடுத்த நாள் இயற்ற வேண்டிய பணிகளை முதல் நாளே அடிமனதின் ஆமோதித்தலுக்கு அனுப்பி வைத்தால் – இரவு முழுவதும் அடிமனம் அப்பணிகளை அலசி ஆய்ந்து – ஆமோதித்து வைக்கும்– அடுத்த நாள் இந்தப் பணிகளை இலகுவாக – சலிப்பின்றி செய்ய இது உதவுகிறது–

பணிகளைக் குறித்து வைக்கும் வேலையை தினமும் மறக்காமல் செய்ய – வழக்கப்படுத்திக் கொள்ள வேண்டும்–

வேற்பாளர் என்போர் – இந்தக் குறுக்கீடுகளில் இருந்து உங்களைக் காப்பாற்ற கடமையுள்ளவர்கள்– இந்தக் குறுக்கீடுகளை அவர்களாச் சமாளிக்கச் சொல்லுங்கள்–

உங்கள் இலட்சியப் பாதையில் குறுக்கீடு செய்யும் இன்னொரு சாரார் உண்டு– இவர்கள் – "காலம் கவர் கள்வர்கள்" இவர்கள் திடீரென்று முன் அறிவித்தல் இன்றி உங்களைச் சந்திக்க வருவார்கள்– முக்கிய விஷயங்கள் தொலைபேசியில் அழைப்புகளாக வரும்– நண்பர்கள் – உறவினர்கள் – உங்கள் திட்டத்தில் திடீரெனக் குதிப்பார்கள்–

இவர்களை உங்கள் வரவேற்பாளர் சமாளிக்க முடியாது– நீங்கள் தான் முன்னின்று தீர்த்து அனுப்ப வேண்டும்–

இந்த – "காலம் கவர் கள்வர்களை" சமாளிக்க – முழு நாளையும் திட்டமிட்டு பணிகளுக்கு ஒதுக்காதீர்கள்– உங்கள் திட்டமிட்ட பணிகளுக்குத் தினமும் 60% காலத்தை ஒதுக்கினால் போதும்– மிகுதி 40% நேரத்தை எதிர்பாராத காலத் திருடர்களுக்கும் – உங்கள் பொழுது போக்கு – ஓய்வு என்பதற்கு ஒதுக்கி வையுங்கள்–

ஒவ்வொரு நாளும் முடிந்ததும் – நீங்கள் திட்டமிட்ட பணிகள் யாவும் செவ்வனே செய்து முடிக்கப்பட்டதா என்று சரிபார்த்துக் கொள்ளுங்கள்–

செய்து முடியாதவற்றை அடுத்த நாள் அட்டவணையில் சேர்த்துக் கொள்ளுங்கள்– சில பணிகள் தொடர்ந்து பல நாட்கள் செய்ய முடியாமல் போகும்– அந்தப் பணிகள் – ஒன்றில் அவை உங்கள் கவனத்திற்கும் – செயலுக்கும் தேவையில்லாமல் – தாமாகவே நிறைவேறி விடும்– அல்லது அவை தூக்கி எறிய வேண்டிய பணிகளாகி விடும்–

மாதம் ஒரு தடவை உங்கள் செயல் நிறைவேற்றத் திறன் பற்றிக் குணித்துக் கொள்ளுங்கள்–

"திட்டமிட்ட நேர நிர்வாகம்" தொடர்ந்தும் வாழ்க்கையின் ஒருபணியாக கருதிக்கொள்ளுங்கள்– இதனால் ஏற்படும் பலாபலன்கள் – காலகட்டத்தில் தான் உங்களுக்குப் புரியும்"

— என்று சொல்லி கருத்தரங்கை நிறைவு செய்தார் பேராசிரியர்–

இன்று இலங்கையிலும் அபிவிருத்தி வேலைகளில் ஈடுபடுகின்ற – ரெய்மர் மேர்ஜில் கூட்டுத்தாபனத்தின் நிறைவேற்றுச் சபையின் ஒரு அங்கத்தினராகிய – பேராசிரியர் லோத்தா —

ஜெர்மன் வங்கிகள் – நிக்ஸ்டோர்ப் வாங – மோட்டாரோலா கொம்பியூட்டர் நிறுவனங்களுக்கு "நேர நிர்வாகம்" பற்றிய ஆலோசகராகவும் விளங்குகின்றார்–

அன்று கருத்தரங்கு முடிந்து வெளியில் வந்த – அத்தனை பேர் முகத்திலும் "ஒரு யானையை" சாப்பிட்டு ஏப்பம் விட்ட திருப்தி தெரிந்ததை என்னால் அவதானிக்க முடிந்தது–

**— டாக்டர் அருள் —**

## — ஸ்ரீமான் மஹாகர்த்தாதாஸ் —

இந்தக் கலியுகத்தில் விவேக முடையவர்கள் புனித நாமங்களை ஜெபிக்கும் அவதார புருஷனை முழுமுதற் பொருளாக ஏற்று வழிபடுவார்கள்" என்று ஸ்ரீமத் பாகவதம் கூறுகிறது,

"கலியுகத்தில் சசியின் புதல்வனாக சங்கீர்த்த இயக்கத்தை ஆரம்பிப்பதற்கென தோற்றமெடுப்பேன்" என்று பகவான கூறியிருப்பதாக பிரஹ்ம யமலா கூறுகிறது, –

"புனித பூமியான நவதிப்பில் சசிதேவியில் புதல்வனாகத் தோன்றுவேன்" என்று கிருஷ்ண யமலா கூறுகிறது,

குழந்தை சற்று பெரியவனானான். ஒருநாள் அச்சிறுவன் மண்ணை அள்ளி உண்டான், தாய் கண்டிக்கவே "மண்தான் உணவாக மாறி வருகிறது" என்று தத்துவம் பேசி தாயை பிரமிக்க வைத்தான்,

பகவான் கிருஷ்ணன் இப்படி ஒரு தூய பக்தராக அவதாரமெடுத்து சிறு வயதிலிருந்தே புனித நாமத்தின் முக்கியத்துவம் பற்றி போதிக்க ஆரம்பித்தார்,

இந்தக் கலியுகத்துக்கென ஆடிப்பாடித் திரிதல்.

கலியுகத்தில மக்கள் விடுதலையடைய பகவானின் புனித நாமங்களை ஜெபிக்கும் முறை பற்றி இவர் வழி காட்டினார,

கலியுக மக்களுக்கு இவர் விட்டுச் சென்ற வழிகாட்டி மகா மந்திரம்,


அது பலவுருமாறு ஜெபிக்கப்படுகிறது– ஹரே கிருஷ்ண ஹரே கிருஷ்ண கிருஷ்ண கிருஷ்ண ஹரே ஹரே ஹரே ராம ஹரே ராம ராம ராம ஹரே ஹரே

ஸ்ரீசைதன்ய மகா பிரபு அவதரித்த மாசிமாத பௌர்ணமி கௌரவ பூர்ண்மா என்று சிறப்பாக அழைக்கப்படுகிறது–

அவர் அவதாரம் எடுத்த மாயப்பூரில் வருடம் தோறும் ஹரிநாம சங்கீர்த்தனம் எங்கும் ஒலிக்க நகர் விழாக் கோலம் பூண்டிருக்கும்,

இலங்கையிலும் புதுச் செட்டித் தெருவில் அமைந்துள்ள ஆலயத்தில் இன்று ஞாயிற்றுக்கிழமை மாலை இத்தினம் சிறப்பாக அனுஷ்டிக்கப்படுகிறது,

(ம–ல)



# காதலி தேடிக் கொடுத்த மனைவி

## ஆர். இராஜலிங்கம்

— 10 —

திலீபன் — தேன்மொழி திருமணம் நடந்து இரண்டு மூன்று நாட்களும் ஆகி விட்டன... ஆனால் அந்தப் புதிய தம்பதிகளிடையே எவ்விதத் தொடர்பும் இருக்கவில்லை!

தேன்மொழியைக் காணும் போதெல்லாம திலீபன் மிகுந்த வெறுப்பைக் காட்டினான்... அவள் எது கேட்டாலும எரிந்து விழுந்தான்... அவள் முகத்தைப் பார்க்கக் கூட அவன் விரும்பவில்லை...

அவன் தன்னை வெறுக்கிறான் என்பது தேன்மொழிக்குப் புரிந்து விட்டது— ஆனால் அது ஏன் என்றுதான் அவளுக்குப் புரியவில்லை—

தன் தாயின் அரவணைப்பில் சந்தோஷமாக வாழ்ந்து கொண்டிருந்த அவளுக்கு இப்படிப்பட்ட வாழ்க்கையொன்று ஏன் அமைய வேண்டும் என்பதும் அவளுக்குப் புரியவில்லை...

சிந்தித்து சிந்தித்து அழுதது தான் மிச்சம்... அவளுக்கு எதுவும் புரியவில்லை...

கணவனிடம நேரிடையாகக் கேட்டு விடலாமா என்று எண்ணினாள்— ஆனால் அதற்கும் அவளுக்குத் துணிவு வரவில்லை...

இறுதியில் மனதைத் திடப்படுத்திக் கொண்டாள்...

வேலைக்காரி முத்தம்மா அவளுக்கு ஓரளவுக்கு ஆறுதலாக இருந்தாள்... தாயைப் பிரிந்து வந்திருந்த தேன்மொழி முத்தம்மாவை தன் தாயாக நினைத்துப் பழகினாள்...

தன் கணவன் தன்னை வெறுத்தொதுக்கிய போதிலும தானே வலியச் சென்று அவனுக்கு வேண்டிய பணிவிடைகளை செய்வது என்றும் தீர்மானித்துக் கொண்டாள் தேன்மொழி...

கொடுக்கும் தேநீரை நான் குடிக்க வேண்டும் என்கிறாயோ?"

திலீபன் இப்படிக் கேட்டது அவளுக்கு அவமானமாக இருந்தாலும அதை வெளிக் காட்டிக் கொள்ளவில்லை அவள்... ஜோக்காகப் பதிலளித்தாள்...

"ஏன் அத்தான்... நான் பாராத தேன்மொழி தடுமாறி விழுந்தாள்... அவளின் அழகிய கன்னம் இரத்தம போல் சிவந்து விட்டது... தேநீர்க் கோப்பை விழுந்து உடைந்து விட்டது... அவள் உடலெல்லாம் தேநீர் கொட்டி விட்டது...

அவளின் கண்களிலிருந்து பொலபொலவென கண்ணீர் வழிந்தது... திலீபனுக்கும அவ

மறுநாள் காலை வெகு நேரம் கழித்தே எழுந்த அவன் காலைக் கடன்களை முடித்துக் கொண்டு வெளியே செல்ல ஆயத்தமானான்...

தேன்மொழியின் முகத்தில் ஒரு மாற்றம் தெரிந்தது— அவள் ஏதோ ஒன்றுக்குத் தயாராகி விட்டதை அவள் முகம் காட்டியது...

அவன்...

"ஊஹூம்..."

"என்ன போக மாட்டாயா? எனக்குப் பொல்லாத கோபம் வரும" என்றான் அவன் ஆத்திரத்துடன்...

"வரட்டுமே...! எனக்கென்ன...? " என்றாள் தேன்மொழி...

"என்ன? எதிர்த்துப் பேசுகிறாயா? உனக்கு எவ்வளவு தைரியம்...?" என்றவன் அறைவதற்காகக் கையை ஓங்கினான்...

அவள் சர்வசாதாரணமாக புன்னகைசிந்தியபடியே இருந்தாள் முதல்நாள் வாங்கிய அறையினால் அவளின் ஒரு கன்னம் இன்னும சிவந்தே இருந்தது... அவன் இப்போது மறு கன்னத்தில் "பளார்!" என அறைந்தான்...

அவள் அதையும் வாங்கிக் கொண்டு புன்னகையில் எவ்வித மாற்றமும் இல்லாமல் அசையாமல் நின்றாள்...

அவளின் செயல் திலீபனுக்கு ஆச்சரியமாகப் போய் விட்டது... விசித்திர பிராணியொன்



படி எச்சரிக்கையாகவே இருப்பேன்..." இப்படி அவள் கூறி விட்டு மீண்டும அவனைப் பார்த்துப் புன்னகைத்தாள்...

அடி எவ்விதத்திலும் அவளைப் பாதிக்காதது என்பது போலிருந்தது அவளின் செய்கை...

திலீபனுக்கு என்ன பேசுவது என்றே புரியவில்லை... இருந்தாலும் எரிச்சலுடன் கேட்டான்...

"உனக்கு வெட்கம மானம் ரோசம் எதுவுமே இல்லையோ" என்று கேட்டான் ஆத்திரத்துடன்...

அவள் மீண்டும சிரித்துக் கொண்டே "ஏன் அத்தான் அப்படிக் கேட்கிறீர்கள்?" என்றாள்...

அவள் பெருமூச்செறிந்து விட்டு பதில் சொன்னாள்...

"அத்தான் ஒரு கணவனிடம இருந்து ஒரு மனைவிக்கு "அன்பு — பாசம" என்று எத்தனையோ கிடைக்கின்றன... அதுமட்டுமல்ல... அவனுக்கு வெறுப்பு ஏற்படும் போது அவளுக்கு "அடி — உதையும் கிடைக்கின்றன...

மொத்தத்தில் இவையெல்லாம ஒரு மனைவியிடம கணவனுக்கு இருக்கும உரிமைகள்... நீங்கள் என்னை வெறுத்த போது நீங்கள் என்னை உங்கள் மனைவியாக நேசிக்கவில்லையோ என்று கவலைப்பட்டேன்...

என்னிடம நீங்கள் அன்பையும் பாசத்தையும் காட்டா விட்டாலும மனைவி என்ற முறையில் இந்த உரிமைகளையாவது வைத்துக் கொண்டிருக்கிறீர்களே... "இவள் யாரோ ஒருத்தி" என்று நீங்கள் நினைத்திருந்தால் இப்படி உரிமையுடன் நடந்து கொள்வீர்களா?"

இந்த வகையிலாவது நீங்கள் என்னை உங்கள் மனைவி என்ற உரிமையுடன் நடத்துகிறீர்களே... என் போன்ற அபலைக

தொடர் கதை

## உவகை வெள்ளம்

— அ. கௌரிதாசன் —

மழைதூறும வேளையில்நீர் திட்டிச் சேர்த்த
மடல்கண்டேன் அத்தானே மகிழ்ச்சி
கொண்டேன்
பிழையாக எண்ணவில்லை பிரியம கொண்டே —
பேதையிவள் தீட்டுகின்ற மடலைப் பாரும
உழைத்தென்னைக் காத்திடுவீர் அறிவேன் உண்மை
உளங்கொண்ட அன்போடு பண்பும உண்டு
"அழைத்திரே முத்தமது பெற்றுக் கொள்ள,
அத்தோடு விடுவீரா?" விடவே மாட்டீர்.

★

பஞ்சருகே தீயிருந்தால் பற்றிக் கொள்ளும
பஞ்சணையில் ஈருடல்கள் இணைந்து கொள்ளும
கொஞ்சமென்ன? "கொஞ்சவர வேளை உண்டு!"
குழமபாதீர்! சிலதிங்கள் பொறுப்பீர் இந்த —
வஞ்சியிவள் நெஞ்சமென்ன? உடலும உங்கள்,
வாலிபத்து விளையாட்டில் பங்கே கொள்ளும!
துஞ்சவில்லை இரவினிலே என்றீர் அத்தான்!
தூங்குங்கள்! "முதலிரவில் விழித்துக்
கொள்வோம!"

★

சுழன்றாடும விழியென்றீர்! "மோகம என்னும —
கதிகூட்டும தீயினிலே வீழ்ந்து நாளும,
உழல்கின்றேன்" என்றீரே! உண்மை யாயின்,
உரைப்பதனைக் கேளுங்கள் அத்தான்!
கன்னம —
பழமென்றீர்! மார்பகங்கள் பந்து என்றீர்!
பாவையிவள் அங்கத்தைப் பலவா றாகப்
புகழ்ந்தீர்கள் அதுகண்டு புளகம கொண்டேன்!
பொறுத்திருங்கள்; "பூவை யிவள்
அருள்பா லிப்பாள்!"

மொழி...

அன்று மாலை......

திலீபன் வீட்டுக்கு வந்ததும் அவள் தேநீரைப் போட்டு எடுத்துக் கொண்டு அவன் அருகில் சென்றாள்...

"அத்தான் தேநீர்..." என்றாள் மென்மையாக...

தேநீர்க் கோப்பையுடன் அருகில் நின்றவளை ஏளனமாக அதே சமயம் முகத்தில் கடுகடுப்புடன் ஏறிட்டான் திலீபன்...

"ஓஹோ...! தேநீரா...? அப்படியானால் நீ போட்டுக் கொடுக்கும் தேநீரைக் குடிக்காமல் வேறு எவள் போட்டுக் கொடுப்பதைக் குடிப்பீர்களாம்...?" என்று கேட்டாள்...

அதைக் கேட்டதும் திலீபனுக்குக் கடும் ஆத்திரம் ஏற்பட்டது...

"என்ன சொன்னாய்...?" என்று கோபத்துடன் கேட்டவன் "பளார்...!" என அவள் கன்னத்தில் அறைந்தான்...

இதனைச் சற்றும் எதிர்

ளைப் பார்க்கப் பரிதாபமாக இருந்திருக்க வேண்டும்... எனினும் அவன் அதை வெளிக்காட்டிக் கொள்ளாமல் கோபத்துடன் ஏதேதோ பேசிவிட்டு வெளியேறினான்...

இருட்டிய பின்னரே வீட்டுக்கு வந்தான்... அவன் தேன்மொழியை வெறுத்து ஒதுக்குவதால் அவள் அருகில் செல்லவேயில்லை... வேலைக்காரி முத்தம்மாதான் அவனுக்கு சாப்பாடெல்லாம் எடுத்து வைத்தாள்... எனினும் அவன் எதுவும் வேண்டாமென்று சாப்பிட மறுத்து விட்டான்...

இன்றும் அவள் தேநீரை தயாரித்து எடுத்துக் கொண்டு அவன் அருகில் சென்றாள்...

தேநீர்க் கோப்பையுடன் அவளைக் கண்டதும் அவன் முகத்தில் வெறுப்புத் தெரிந்தது...

"என்ன...?" என்றான் கடுகடுப்புடன்...

"தேநீர்...!" என்றாள். அவள் மென்மையாக...

"நேற்றேதான் உனக்குச் சொன்னேனே... உன்னைப் பார்க்கவே எனக்குப் பிடிக்கவில்லை... தயவுசெய்து இங்கிருந்து போய்விடு..." என்றான்

றைப் பார்ப்பது போல அவளைப் பார்த்தான்...

அவள் சிரித்துக் கொண்டே

"என்ன அத்தான் அப்படிப் பார்க்கிறீர்கள்... நீங்கள் அடித்தும் குத்துக் கல் போல நிற்கிறேனே என்றா? நேற்று நீங்கள் என்னை அடிப்பீர்கள் என்று நான் எதிர்பார்க்கவில்லை... அதனால்தான் நீங்கள் அடித்ததும் தடுமாறி விழுந்து வி[illegible].

இன்று அதனை எதிர்பார்த்திருந்தேன்... அதனால்தான் முன்பே எச்சரிக்கையாக இருந்தேன்... இனி எப்பொழுதும் இப்

"இல்லை... என்னிடம் இப்படி அடி வாங்கிக் கொண்டு கொஞ்சமும் வெட்கமில்லாமல் நடந்து கொள்கிறாயே" என்றான்...

"ஓஹோ! அதுவா? அது நான் பெருமைப்பட வேண்டிய விஷயம்தானே அத்தான்..."

"என்ன பெருமைப்பட வேண்டிய விஷயமா? இதில் என்ன பெருமை கிழிக்கிறது?" என்று கேட்டான் திலீபன்...

கள் என்னை உங்கள் மனைவி என்ற உரிமையுடன் நடத்துகிறீர்களே... என் போன்ற அபலைகளுக்கு கணவனிடமிருந்து கிடைக்கும் உரிமை இது ஒன்றுதான அத்தான்... அந்த வகையில் இது நான் பெருமைப்பட வேண்டிய விஷயந்தானே"

இப்படிக் கூறி மீண்டும் பெருமூச்சொன்றை விட்டாள் தேன்மொழி!

திலீபனுக்கு என்ன பேசுவதென்றே புரியவில்லை... அவள் கையிலிருந்த தேநீரை வாங்கி மடக்... மடக்" என்று குடித்து விட்டு வெளியே சென்றான்...

[தொடரும்]

## முகம் புதைத்தாள்

— த. யுவராஜன் —

மடியிலே தலையது வைத்து
மலர்முகம் தினமது நோக்கின்
விடிவதே தெரிவதே இல்லை
விளக்கமும் சொல்வதற் கில்லை
அடியவள் விழிகளைப் பார்ப்பின்
அளிகளைப் போற்கரு வண்ணம்
கடியவள் ஆகாள் எனக்குக்
கருணைதான் அவளின் தோற்றம்

★

வழியிலே விழிகளை வைத்தென்
வரவையே நோக்கிடும் கண்ணாள்
எழிலிலே தோய்ந்தவள் என்றும்
என்னிலே இன்பங்கள் காண்பாள்
மொழியிலே கிளிகளை விஞ்ச
மொழிகிறாள் சுகங்களோ கோடி
வெளியிலே வருவதே இல்லை
வெண்ணிலா நாணுமென் றாமோ

★

இடையினைப் பார்க்கவென் றெண்ணி
எத்தனை முறைமுயன் றாலும்
தடையினைப் போட்டவள் கட்டுந்
தாலியின் அவசரங் கூறித்
தடையினை விலக்கிட இதுதான்
தக்கவ ழியெனச் சொன்னாள்
கொடையெனத் திருமணஞ் செய்தால்
கிடைக்குமோ? இன்பமும் தன்னால்

# நொரீகா பதவி இழந்ததற்கு

# பனாமா கால்வாய் காரணம்!

## 140 ஆண்டுகள் சிறையில் வாடும் அவல நிலையை எதிர் நோக்குகிறார்



நொரீகா

அமெரிக்காவின் தென் கோடியில் உள்ள நாடு பனாமா இது வட அமெரிக்காவுக்கும் தென் அமெரிக்காவுக்கும் மத்தியில் இருக்கிறது.

இந்த நாட்டில் இருக்கும் பனாமா கால்வாய், அட்லாண்டிக் கடலையும், பசிபிக் கடலையும் இணைக்கும் பாலமாக விளங்குகிறது. 5 மைல் நீளம் உள்ள இந்தக் கால்வாய் பனாமாவின் எல்லைக்குள் இருக்கிறது. ஆனால் 1979 ஆம் ஆண்டுக்கு முன்பு இது அமெரிக்காவின் வசம் இருந்தது.

பனாமா கால்வாயின் வழியாக கப்பல்கள் செல்ல முடியும், இதன் வழியாக சரக்குக் கப்பல்கள் சென்றால் போக்குவரத்துச் செலவில் கோடிக்கணக்கான ரூபாவை மிச்சப்படுத்தலாம்.

எனவே இந்தக் கால்வாயை சொந்தம் கொண்டாடுவதில் அமெரிக்காவுக்கும் பனாமாவுக்கும் இடையில் எப்போதும் பிரச்சினைகள் இருக்கும். ஓர் ஒப்பந்தத்தின் அடிப்படையில் அமெரிக்காவும், பனாமாவும் மாறி மாறி இந்தக் கால்வாயை உரிமை கொண்டாடி வருகின்றன.

தற்பொழுது, 1999ஆம் ஆண்டு வரையிலும் பனாமா கால்வாயை பனாமா நாட்டின் வசம் ஒப்

([illegible] ஆம் பக்கம் பார்க்க)

# சிந்தாமணி கேள்வி? பதில்

திரிஞானி

றெஜீனா, நதிரியா, பர்ஹான்
நிக்கவரெட்டிய.
கே— இசையமைப்பாளர்களான இளையராஜாவுக்கும எம எஸ் விஸ்வநாதனுக்கும இசைப் போட்டியொன்று வைத்தால் யாருக்கு வெற்றி?
ப— சே! என்ன கேள்வி கேட்டு விட்டீர்கள்? ஒப்பிடக் கூடியவர்களா இவர்கள்?

★

கு பிரபாகரன்
பன்விலை—
கே— உஙகளுக்கு வாலியைப் பிடிக்குமா? வைரமுத்துவைப் பிடிக்குமா?
ப— வாலியின் கவிதைகளை விட வைரம பாய்ந்தவை முத்துவின் கவிதைகள்!

★

ம கலாதேவி ம யோகேஸ்வரன்,
குலஹா.
கே— ஏன் சில பெண்கள் உடுப்பதைப் பார்த்து சில பெண்கள் பொறாமைப் படுகிறார்கள்?
ப— மானத்தை மறைக்கவா சில பெண்கள் உடுக்கிறார்கள்? மற்றவர் பொறாமைப் படட்டும என்று தானே உடுக்கிறார்கள்.

★

செல்வி நூர் சலீமா மொஹமட்,
நீர்கொழுமபு.
கே— தாஙகள் அடிக்கடி யாரை நினைத்துக் கொள்வீர்கள்?
ப— என் பகைவரை. அப்போது தானே நான் விழிப்பாக இருக்க முடியும.

★

பி ஞானப்பிரகாசம,
நுரைச்சோலை.
கே— "இத்யாதி" என்றால் என்ன சார்?
ப— இதைப் போல இன்னும பல என்று பொருள்.

★

செல்வி ஏ எச் உமமுல் முனாவ்ரா,
கொழுமபு — 2.
கே— நீஙகள் எப்படிப்பட்ட கனவுகளைக் காண்கிறீர்கள்? உஙகள் கனவில் அடிக்கடி வருபவர் யார்?
ப— நான் அடிக்கடி ஆகாயத்தில் பறப்பது போல் கனவு காண்பேன்! அப்போது என்னோடு கூடப் பறப்பவள் அவளேதான்!

★

எம டி பர்ஸானா தாஸிம.
கொட்டறாமுல்லை.
கே— பெண்களை மலருக்கு ஒப்பிடுவது போல் ஆண்களை எதற்கு ஒப்பிடலாம?
ப— முள்ளுக்கு!

★

செல்வி பெ சுமதி
கண்டி.
கே— வாழ்க்கையில் எதையாவது கண்டு வியப்படைந்தது

எஸ் எம மகேந்திரன்,
மாலிபொட பஜார்—
கே— உறவை ஏற்கும மனிதனுக்குப் பிரிவை மட்டும ஏன் ஏற்க முடியவில்லை?
ப— ஒன்றாதல் இயற்கை— பிரிதல் செயற்கை என்பதால்!

★

ஹின்னா பளீல்,
பேருவளை—
கே— விளமபரஙகளுக்கு அதிகமாகப் பெண்களை ஏன் பயன் படுத்துகிறார்கள்?
ப— ஆண்கள் அழகைப் பார்த்தால் பெண்கள் அலஙகாரத்தையும பார்ப்பார்கள் என்பதால்!

★

அகிலன்,
மருதானை—
கே— தலைவிதி என்றால் என்ன?



சத்தியராஜ்

ப— எப்படியான மனைவி வந்து சேருகிறாளோ அதற்குப் பெயர்தான் தலைவிதி!

★

எம ஐ கமால்தீன்,
எம ஐ ஏ சமட்,

வாழைச்சேனை — 5—
கே— அரசியல் வாதிகளை ஏன் உஙகளுக்குப் பிடிப்பதில்லை—
ப— அவர்களிடம "சின்சியரிட்டி" என்ற பண்பு அறவே இல்லாமையால்!

★

பெ தனபாக்யா,
டிக்கோயா—
கே— உஙகளுக்கு உங்கள் மனைவியிடம பிடித்த விஷயம் என்ன? பிடிக்காத விஷயம் என்ன?
ப— பிடித்த விஷயம மடம! பிடிக்காத விஷயம அடம!

★

என் பி பேகம றிஸ்வியா,
அலவத்துகொட.
கே— சிரிக்கும பெண்களை நமபாதே — அழும ஆண்களை நமபாதே என்று கூறப்படுவதற்கான காரணம என்ன?
ப— சிரிக்கும பெண் மயக்குவாள்! அழுகின்ற ஆணிடம ஆண்மை இருக்காது — அதனால் தான்!

★

ஐ என் எம வரீப்,
சீ எம எம நஸார்,
புத்தளம.
கே— சீதனக் கொடுமையை ஒழிப்பதற்காக வேண்டி பெண்களெல்லாம ஒன்று சேர்ந்து, நாஙகள் ஆண்களை மணம முடிக்க மாட்டோம என்று "ஸ்ரைக்" பண்ணினால் எப்படியிருக்கும?
ப— பெண்கள் ஒன்று சேருவதா? இதுவும நடக்குமா? அவர்கள் சேர்வதானால் ஆண்களோடு சேரத்தான் துடிப்பார்கள்!



இளையராஜா

★

பெரியசாமி சத்திவேல்,
தலவாக்கொல்லை.
கே— மனிதனின் இலட்சியம எப்படி இருக்க வேண்டும?
ப— அப்பழுக்கில்லாததாகவும நிறைவேறக் கூடியதாகவும இருக்க வேண்டும. நிறைவேற முடியாத இலட்சியத்துக்குப் பெயர் பகல் கனவு!

★

செல்வன் எம மகேந்திரன்,
அலவத்துகொட.
கே— ஒரு நடிகையின் வாழ்க்கையில் மறக்க முடியாத அனுபவம எதுவாக இருக்கும?
ப— ஒன்றுக்கு மேற்பட்ட முதலிரவுகளைச் சந்தித்த அனுபவம தான்!

★

கே முபைதீன்,
காஙகேயனோடை — 13.
கே— சத்யராஜைப் பற்றி இரண்டு வசனம?
ப— மிகவும உயர்ந்து விட்டார்! இல்லாவிட்டால் இன்னும அதிகம கதாநாயகிகள் பொருந்தியிருப்பார்கள்!

★

எம மர்சூக்,
எம எம ஜுனைஸ்,
எஸ் செல்லத்துரை,
காத்தான்குடி — 6.
கே— உஙகளுக்கு மிகவும பிடித்தமான விளையாட்டு என்ன?
ப— அந்த விளையாட்டுத் தான்!

★

செல்விகள் ஸனீமா டீன்,
ஸனீரா சமூன்,
திவுருமபொளை.

கே— உஙகள் மனத்தில் அடிக்கடி எழும கேள்வி எது?
ப— நான் யார் என்பதே!

★

கே அபூஹனிபா,
நஸீமா, ஏ ஹனிபா,
கந்தளாய் — 2.
கே— பூவிலும மென்மையான பெண்ணின் மனது — கல்லிலும கடினமாவது எப்போது?
ப— காதலனால் நிராகரிக்கப் படும போது!

★

ஏ யூகான் பீபீ,
அப்புத்தளை.
கே— பெண்கள் எதிலும பிடிவாத குணமுடையவர்களாக இருப்பது ஏன்?
ப— அவர்களுக்குப் பிடிக்கத் தெரிந்ததால்.

★

கே மஞ்சு,
அப்புத்தளை.
கே— உஙகளின் பெயருக்குப் பொருள் கூறுவீர்களா?



எம ஜி ஆர்

ப— கூறுவேனே! இறந்த காலம, நிகழ்காலம, எதிர் காலம ஆகிய முக்காலமும உணர்ந்த முனிவன் என்பது பொருள்!

★

ஆர் ஆறுமுகம விஜயகுமார்,
நுவரெலியா.
கே— ஒரு பொண்ணு நெனைச்சா எதையும செய்ய முடியுமா?
ப— தவறு. எதையும செய்ய முடியாது!

★

எஸ் சிவமலர்,
நீல்லமப.
கே— நீஙகள் விருமபி படிப்பது கமபராமாயணமா? அல்லது மகாபாரதமா?
ப— இரண்டும தான்! ஆனால் கமபனுக்கு முதலிடம!

★

ஜீ சுந்தர்ராஜ்,
கந்தப்பளை.
கே— கற்பில் சிறந்தவளை கண்ணகி என்றால் — கற்பில் சிறந்த ஆண்மகனை என்னவென்பது?
ப— ராமச்சந்திரன் எனலாம! எம ஜி ஆர் அல்லர்! அவருக்குக் கட்டிய தெருக் கோயிலில் கூட இரண்டு பெண் சிலைகள் இருக்கின்றனவாமே!


★

முகமமட் ஸுபர்.
அக்குறணை — 2
கே— "பெண் புத்தி பின் புத்தி" என்கிறார்களே. அது பின் புத்தி தானா?
ப— ஆம! PIN புத்தி தான்! எந்தக் கணவன் குத்துப் படாமல் இருக்கிறான்?

★

இர்பான் ஏ இஸ்மாயில்.
தர்ஹாநகர்.
கே— ஒரு குழந்தை பசியால் துடிக்கும போது உஙகளிடம ஒரு ரொட்டித் துண்டு இருந்தால் அதை நாய்க்குப் போடுவீர்களா? அல்லது குழந்தைக்குக் கொடுப்பீர்களா?
ப— என்ன செய்வேன் என்பது குழந்தையின் வயதைப் பொறுத்தது!


## உங்கள் இல்லத்தின் உயிர்நாடி...



செல்வி மே. சுமதி
கண்டி.

கே– வாழ்க்கையில் எதையாவது கண்டு வியப்படைந்தது உண்டா?

ப– உண்டு. வாழ்க்கையில் வழி தவறியவர்களை மீண்டும் மனிதராக்கும் அற்புதத்தை நிகழ்த்தி வரும் ஒரு மகா புருஷரை இந்தியாவில் நேரில் கண்டு வியப்படைந்தது உண்டு.

★

செல்வி கிருபைமலர் தில்லைநாதன்.
காரைநகர்.

கே– அடக்க முடியாத சிரிப்பை திமிர் என்று அடக்க என்ன செய்ய வேண்டும்?

ப– ஏன் அடக்க வேண்டும்? சிரிப்பது ஆரோக்கியத்துக்கு நல்லதல்லவா?

★

எம். எப் ஜெகரியா,
மினுவன்கொட–

கே– இலங்கையில் உங்களுக்கு மிகவும் பிடித்தமானதும் மிக அழகானதுமான ஊர் எது?

ப– எனக்குப் பிடித்தமான ஊர் யாழ்ப்பாணம். அது தந்தை நாடு என்பதால்– எனக்கு அழகான ஊர் மட்டக்களப்பு– அது தாய் நாடு என்பதால்– எனக்கு இனிமையான ஊர் திருகோணமலை அது என் நாடு என்பதால்–

★

ரிஸ்மியா பரிக்கார்,
மினுவாங்கொடை–

கே– பெண்கள் எவ்வளவு கற்றறிந்தவர்களாயிருந்தாலும். அவர்கள் சமையலறையைத் தானே நாட வேண்டியுள்ளது?

ப– அவர்களும் சமைகிறவர்களாதலால்!

★

ஸாகிர் ஸரீனா,
செல்வன் ரிஸ்வான்,
செல்வி ஸப்ரினா,

கே– கணவன் மனைவிக்கிடையே பிரச்சினை வருவதற்குக் காரணம் என்ன?

ப– எத்தனையோ உண்டே!

★





சற்று நேரம் நிம்மதியாகக் கைகால் நீட்டி இளைப்பாறவும் இனிய கனவுகளோடு இன்துயில் கொள்ளவும் இந்த உலகிலே உங்கள் படுக்கையறைக்கு நிகரான வேறு இடம் எதுவுமே இல்லை

சிங்கர் படுக்கையறைத் தளபாடங்கள் உங்கள் சௌகரியத்தையே முற்றிலும் கருத்திற்கொண்டு வடிவமைக்கப்பட்டிருப்பதன் காரணம் இதுவே சிங்கர் தளபாடங்கள் உங்களுக்குச் சொகுசும் இல்லத்திற்கு எழிலும் தருகின்றன

'5x6' அளவுள்ள இரட்டைப் படுக்கை. இரு பக்கவாட்டு மேசைகள். கண்ணாடி மேசை அதற்குரிய ஸ்டூல் என்பன அடங்கிய தொகுதி இது

சிங்கர் டியூலிப் படுக்கையறைத் தளபாடத் தொகுதி சிங்கரின் ஒரு நூற்றாண்டுகால அனுபவத்தின் உன்னத படைப்பாகும்



டியூலிப் படுக்கையறைத் தளபாடத் தொகுதி

விலை ரூ. 8,990/-

சிங்கரின் தவணைக் கொடுப்பனவு முறையிலும் கொள்வனவு செய்யலாம்.

சிங்கர் அதிமேன்மையின் நம்பிக்கை.

சிங்கர்*
மாசற்ற மேன்மை

சிங்கர் தளபாடங்கள் உங்கள் இல்லத்தை எழிலாக்கும்

SLT 5992

# ஆப்கானிஸ்தானில் ராணுவப் புரட்சி!

உள்ளூர் நாட்டு இராணுவங்களும் வெளிநாட்டு இராணுவங்களும் பலப் பரீட்சை நடத்தி சீரழிந்து போயிருக்கும் ஆப்கானிஸ்தானில் மீண்டும் ஒரு இராணுவப் புரட்சி நடந்திருக்கிறது.

ஆப்கான் அரசைக் கவிழ்க்க எடுக்கப்பட்ட இராணுவ சதி முயற்சியொன்று முறியடிக்கப்பட்டது. கடும் போக்குக் கொண்ட பாதுகாப்பு அமைச்சர் ஷா நவாஸ் டனாய் இராணுவ சதி முயற்சியை மேற்கொண்டதாகவும் அது வெற்றி பெறாததால் அவர் தப்பி ஓடி விட்டதாகவும் அறிவிக்கப்படுகிறது.

ஆப்கன் அரசைக் கவிழ்க்கும் முயற்சியில் கிளர்ச்சியாளர்களின் விமானங்கள் குண்டுத் தாக்குதல்களை நடத்தின. ஆப்கன் ஜனாதிபதி நஜிபுல்லாவின் மாளிகை மீது குண்டுத் தாக்குதல் நடத்தப்பட்டதாக அவர் கூறினார்.

இத்தாக்குதலை தனது நம்பிக்கைக்குப் பாத்திரமான துருப்புகள் செவ்வாய் இரவு முறியடித்ததாகவும் அவர் தெரிவித்தார்.

இராணுவ சதிப் புரட்சியை வழி நடத்திய அமைச்சர் டனாய் தப்பி ஓட்டமெடுத்துள்ளார். அவரை உயிரோடோ அல்லது சடலமாகவோ கொண்டு வர வேண்டுமென தாம் உத்தர விட்டிருப்பதாக நஜிபுல்லா கூறினார்.

சதி முயற்சி முறியடிப்பின் எதிரொலியாக படையினரும் பொதுமக்களில் பலரும் உயிரிழந்திருப்பதாக ஐ நா ஆப்கன் தூதுவர் தெரிவித்தார்.

நியூயோர்க்கில் பத்திரிகையாளர் மாநாடொன்று நடைபெற்றது. இந்த மாநாட்டில் தூதுவர் நூர் அகமட் நூர் உரையாற்றினார். அங்கு வைத்தே அவர் பலர் இறந்த செய்தியை வெளியிட்டார்.

நாட்டில் நிலைமை சீரடைந்து விட்டதாக காபூல் வானொலி அறிவித்ததாக இஸ்லாமாபாத் செய்தி ஒன்று கூறியது.

மாலை 7 மணி முதல் ஊரடங்குச் சட்டம் அமுல் செய்யப்பட்டுள்ளது.



நஜிபுல்லா

டாஸ் செய்தி ஸ்தாபனம் வெளியிட்ட செய்தியொன்றில் ஜனாதிபதி மாளிகை மீது குண்டுத் தாக்குதல் நடத்தப்பட்டதாகவும், வீதிகளில் கடும் சண்டை நடந்ததாகவும் தெரிவித்தது. விமானத் தாக்குதல் ஆரம்பமானவுடன் ஜனாதிபதி ஆதரவு துருப்புகள் விமானங்களில் எதிர்த் தாக்குதலை ஆரம்பித்ததாகவும் டாஸ் செய்தி கூறியது.

பார்ச்சாம், காலிக் போட்டிக் குழுக்களுக்கு இடையிலான நீண்ட கால பகைமை இந்தத் தாக்குதலுக்குக் காரணமெனவும் அறிவிக்கப்படுகிறது.

நஜிபுல்லாவை பதவி கவிழ்க்க பல தடவை டனாய் முயற்சி மேற்கொண்டிருக்கிறார் என சந்தேகிக்கப்படுகிறது.

9 ஆண்டு காலம் ஆப்கனிலிருந்த சுமார் 100,000 ரஷ்ய துருப்புகள் வெளியேறி ஒரு வருடமாகவில்லை. இதற்கிடையில் இங்கு சதி முயற்சி மேற்கொள்ளப்பட்டிருக்கிறது.

ஆப்கானிஸ்தானில் முஜாஹித்தீன்களினால் ஏற்பட்ட யுத்தம் 1000 தொழிற்சாலைகளையும் 2000 பாடசாலைகளையும் 350 பாலங்களையும் 130 மருத்துவ நிலையங்களையும் முற்று முழுதாக நாசமாக்கியுள்ளது என்று ஆப்கன் அரசின் உள்துறை அமைச்சின் அறிக்கையொன்று கூறுகிறது.

நாட்டின் போக்குவரத்துச் சாதனங்களுக்கும் பெரிய நஷ்டம் ஏற்பட்டுள்ளது. அதன் பெறுமதி 10,000 மில்லியன் டாலராகும்.

"ஸலாம" நிவாரண உதவித் திட்டத்தின் கீழ் பல நாடுகள் ஆப்கானிஸ்தானுக்கு உதவி

ஐ நா உதவியுடன் பெருமளவு தானியங்களை ஆப்கானிஸ்தானுக்கு வழங்க பிரான்ஸ் முன்வந்துள்ளது. ஆப்கானிஸ்தானுக்குப் பொறுப்பான ஐ நா பிரதிநிதி சத்ருத்தின் கான் இவ்வுதவிகள் மேலும் அதிகரிக்கப்பட வேண்டும் எனக் கூறியுள்ளார்.

"ஆப்கானிஸ்தானில் அமைதி ஏற்பட எடுக்கப்படும் எல்லா முயற்சிகளுக்கும் இந்தியா தனது ஆதரவை வழங்கும்" என்று புதுடில்லியில் நடைபெற்ற கருத்தரங்கொன்றில் பேசிய இந்திய வெளியுறவு அமைச்சர் குஜ்ரால் தெரிவித்தார்.

ஜெனீவா ஒப்பந்தங்கள் எப்படி அமுலாக்கப்பட்டு வருகின்றன என்பதையும் இந்தியா மிகவும் உன்னிப்பாக அவதானித்து வருகிறது. அணிசேரா இயக்கத்தின் ஒரு நாடு என்ற முறையில் ஆப்கானிஸ்தானைக் காண நாம் விரும்புகிறோம் எனவும் குஜ்ரால் தெரிவித்தார்.

பிராந்திய விவகாரங்களுக்குப் பொறுப்பான இந்திய நிலையத்தின் தலைவர் வி டி சோப்றா பேசுகையில் சோவியத் – அமெரிக்க உறவுகளில் சீரான நிலைமை தோன்றுவது ஆப்கன் பிரச்சினைக்குப் பெரிதும் துணை செய்யும். இது தொடர்பாக சமீபத்தில் பேக்கரும் ஷெவர்நாத்ஸேயும் மேற்கொண்ட பேச்சுவார்த்தைகள் இதற்கு ஒரு நல்ல முன்னோடியாகும் எனவும் சோப்றா தெரிவித்தார்.

## பூலோக சஞ்சாரம்

ஆப்கன் தூதுவர் அஹமட் சர்வர், ஜனாதிபதி நஜிபுல்லாஹ் முன் வைத்த திட்டத்தின் கீழ் அமைதியை நிலை நிறுத்த பல வசதிகள் உள்ளன என்று தெரிவித்தார்.

ஜெனீவா ஒப்பந்தங்களை பாகிஸ்தான் தொடர்ந்து மீறி வருகிறது. இதுவே ஆப்கானிஸ்தானில் அமைதிக்குக் குந்தகம் விளைவிக்கிறது என்று இந்திய பாதுகாப்ப நிலையத்தைச் சேர்ந்த ஜே சிங் தெரிவித்தார்.

ஆப்கானிஸ்தானில் இருந்த சோவியத் துருப்புக்கள் வாபஸ்

இஸ்லாமிய நாடுகளை இப்பிராந்தியத்தில் ஒன்றிணைப்பதன் மூலம் கமயூனிஸத்திற்கு எதிராகப் போராட முடியும் எனவும் ஆலோசனை வழங்கியிருந்தார்.

கடந்த வருடம் பாகிஸ்தான் நடத்திய ராணுவ ஒத்திகையில் 200,000 இராணுவ வீரர்கள் பங்கெடுத்தனர்.

அமெரிக்க ஆயுதங்களை கொள்வனவு செய்வதன் மூலம் பாகிஸ்தானின் பாதுகாப்பை உறுதி செய்ய முடியும் என இராணுவ தளபதி ஜெனரல் மிர்ஸா அஸ்லாம பேக் குறிப்பிட்டுள்ளார்.

ஜம்மு காஷ்மீர் பிராந்தியத்தில் தீவிரவாதிகளுக்கு உதவும் பொருட்டு பாகிஸ்தான் துருப்புக்களை அனுப்புவதாகவும் செய்திகள் கூறுகின்றன.

இவ்வேளையில் ஆப்கானிஸ்தானில் இராணுவப் புரட்சி மேற்கொள்ளப்பட்டிருப்பது பரபரப்பைக் தந்துள்ளது.

இதேநேரத்தில் அமெரிக்காவிடமிருந்து அதிக இராணுவ தளவாடங்களைப் பாகிஸ்தான்கொள்வனவு செய்திருக்கிறது. இஸட்-775 ரக அமெரிக்க எதிர்த்தாக்குதல் இராணுவ வாகனங்கள் 20 அங்கு வந்து சேர்ந்துள்ளன.

இஸ்லாமாபாத்துக்கான இராணுவ உதவி என்ற திட்டத்தின் அடிப்படையிலேயே இவை வழங்கப்பட்டன என்று பெண்டகன் பேச்சாளர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

இதே நேரம் பாகிஸ்தானின் கடற்படை வலுவை அதிகரிக்க வாஷிங்டன் அதி நவீன ஆயுதங்களையும் ஏனைய இராணுவ தளவாடங்களையும் விநியோகிக்கவுள்ளது என்று அப் பேச்சாளர் தெரிவித்தார். இது தொடர்பான ஒப்பந்தம் ஜனவரி மாதம் கைச்சாத்திடப்பட்டது.

எப்-16 ரக சண்டை விமானங்களையும் அணு ஆயுதங்களைக் கொண்ட நவீன யுத்த விமானங்களையும் அமெரிக்காவிடம் இருந்து சமீப காலமவரை பாகிஸ்தான் பெற்று வந்தது.

பிரெஞ்சு தயாரிப்பான மிராஜ் 2000, ஓரியோன் ஆர் – 3வி, எஸ்–130 யுத்த சரக்கு விமானங்களையும் பாகிஸ்தான் கொள்வனவு செய்யவுள்ளது. பாகிஸ்தான் வசம 6 அணுகுண்டுகள் உள்ளன எனவும் தெரிய

அரசியல் அவதானிகள் கூறுகின்றனர்.

அமெரிக்கா தனித்து நிற்கும் நாடு என்றும், மூலப் பொருள்களை இறக்குமதி செய்யாமல் அதனால் நிலைத்திருக்க முடியாது என்றும எனவேதான் அயல் நாடுகளில் இராணுவ நடமாட்டம் என்பது அதற்கு தேவைப்படுகிறது என்றும அமெரிக்கத் தலைவர்கள் கூறி வருகிறார்கள்.

தனக்குத் தேவைப்படும பொருளாதார மூல வளங்களை எந்த நாடுகளிலிருந்து இறக்குமதி செய்கிறதோ அந்த நாடுகளில் மட்டுமே அமெரிக்கா தனது துருப்புக்களை நிறுத்தி வைத்திருக்கவில்லை.

அயல் நாடுகளில் உள்ள அமெரிக்கப் படைகளில் மூன்றில் இரு பகுதி மேற்கு ஐரோப்பாவில் வைக்கப்பட்டுள்ளன. மூன்றில் ஒரு பகுதி சோவியத் யூனியனை ஒட்டி கிழக்கு ஆசியாவில் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளன.

இன்றைய நிலையில் "சோவியத் அச்சுறுத்தல்" கட்டுக்கதையாகி விட்டது. மேலும் இன்றைய அணு யுகத்தில் அந்நியத் துருப்புக்கள் தங்கள் பிரதேசங்களில் இருப்பதால் உருவாகக் கூடிய ஆபத்தை மக்கள் நன்குணர்ந்துள்ளனர்.

செக்கோஸ்லோவேக்கியாவிலிருந்தும ஹங்கேரியிலிருந்தும சோவியத் படைகளை வாபஸ் பெறுவது பற்றி ஏற்கனவே முடிவு செய்யப்பட்டு விட்டது.

போலந்திலிருந்தும தனது படைகளை விலக்கிக் கொள்வது பற்றிய பேச்சுவார்த்தைகளைத் துவக்குவதற்கு சோவியத் யூனியன் தயாராக இருக்கிறது.

அணு ஆயுதங்களே இல்லாத நிலையில் மட்டுமல்லாமல் அந்நிய இராணுவ நடமாட்டமும இல்லாத நிலையில் 2000 ஆம ஆண்டில் அடியெடுத்து வைக்க வேண்டும். சோவியத் யூனியனது இந்த விருப்பத்துக்கு அமெரிக்கா செவிசாய்க்கும என்று எதிர்பார்ப்போம.

— இவ்வாறு "பிராவ்தா" எழுதியிருக்கிறது. (ம)


## டுபாய், ஓமான், பஹ்ரெயின், குவைட் நாடுகளில் வேலைவாய்ப்பு

முஸ்லிம வீட்டுப் பணிப்பெண்களுக்கு
எவ்வித கட்டணமும இன்றி

வயது– 22 வயது முதல்
சமபளம்– 4250 ரூபா முதல்
சேவைக் காலத்திற்குள் பூரண பாதுகாப்புக்கு உத்தரவாதமளிக்கப்படும்–

**யசோதா எண்டர்பிரைசஸ்**

ஆட்பலப் பிரிவு,
455, கூட்டுறவு கட்டிடம, 4 ஆம மாடி,
காலி வீதி, கொழும்பு—03–
தொலைபேசி– 502868
தொழில் அங்கீகார/லைஸன்ஸ் இல– ஏ எல்/647/11/89

## சவூதி–குவைட்–டுபாய்

★ வீட்டுப் பணிப்பெண்கள்
★ டெய்லர்ஸ் (ஆண்/பெண்)
★ சமையற்காரர்

## எருமை மாட்டு கொம்பு

எருமை மாட்டு கொமபு தொகையாக் வாஙகப்படும– தொடர்பு கொள்ளவும–
இல 1– லொரிஸ் ரோட்–
பமபலப்பிட்டிய–
கொழுமபு–4

## தொழிற்சாலை மேற்பார்வையாளர் பதவி வெற்றிடம
(புத்தளம பாலாவி தொழிற்சாலை)

செயின்ட் அன்தனீஸ் ரூபிங்ஸ் (தனியார்) நிறுவனத்தின் பாலாவி தொழிற்சாலைக்கு தொழிற்சாலை பராமரிப்பையும, உற்பத்தியையும கவனிக்க மேற்பார்வையாளர் ஒருவர் தேவைப்படுகிறார்– இவர் 30—40 வயதுக்குட்பட்டவராக இருக்க வேண்டும– விண்ணப்பதாரர் புத்தளத்தில் வசிக்க வேண்டும–

மேற்படி விண்ணப்பதாரர் மக்கானிக்கல் தொழில் நுட்பத்தில் (உற்பத்தித்துறை) தேசிய டிப்ளோமா பெற்றவராகவும், மின்சாரத் துறையில் தகுதி பெற்றவராகவும அல்லது மக்கானிக்கல்/மின்சாரத் துறை சமபந்தப்பட்ட மேற்படி பதவிக்கு ஒப்பான தொழிலில் மூன்று வருட கால அனுபவம பெற்றவராகவும இருக்க வேண்டும–

★ டெய்லர்ஸ் (ஆண்/பெண்)

★ சமையற்காரர்

கட்வுச்சீட்டு— 6 புகைப்படங்கள் சகிதம வரவும

**NOOZKIYA**

(MANPOWER RECRUITMENT SSRVICES)

94/2, Stace Road,
Grandpass Colombo 11
Labour Licence: 528 App No: 528/1/90—2/90

## சவூதி அரேபியா

★ வீட்டுப் பணிப்பெண்கள்

★ வீட்டு டிரைவர்கள்

[5 நாட்களில் பயணம]

சார்ஜா — அபுதாபி — டுபாய்
குவைட் — பஹ்ரேயின்

[21 நாட்களில் பயணம]

★ ஜுக்கி மெசின் ஒபரேட்டர்ஸ்
★ வீட்டுப் பணிப்பெண்கள்
★ வீட்டு டிரைவர்கள்
★ டெய்லர்ஸ்

கடவுச்சீட்டு— 6 படங்கள் சகிதம நேரில் வரவும

**M. K. M. ENTERPRISE**

12.D—Prince of Wales Avenue
Colombo — 14
Labour & Approval 596/11/89

பெறுமதி 10,000 மில்லியன் டால ராகும.

"ஸலாம" நிவாரண உதவித் திட்டத்தின் கீழ் பல நாடுகள் ஆப்கானிஸ்தானுக்கு உதவி வழங்க ஆரமபித்துள்ளன. கடந்த அக்டோபர் மாதம சர்வ தேச உதவிகளுடன் முதல் ரயில் வண்டி பின்லாந்கில் இருந்த ஆப் கானிஸ்தான் — சோவியத் எல்லை நகரான டெர்மோவுக்கு வந்து சேர்ந்தத.

சிறுவர்களுக்கான உணவு, உடை, மருந்துப் பொருட்கள் தானிய வகை என்பனவற்றை இந்தப் புகையிரதம எடுத்து வந் தத. வத்திக்கான, நோர்வே, பெல்ஜியம, சோவியத் யூனியன். இத்தாலி ஆகிய நாடுகள் இந்த உதவியில் பஙகெடுத்துக் கொண் டன. ஐ நா சபையும இதில் பெருமளவில் பஙகெடுத்துக் கொண்டுள்ளத.

தானில் அமைதிக்குக் குந்தகம விளைவிக்கிறது என்று இந்திய பாதுகாப்ப நிலையத்தைச் சேர் ந்த ஜே சிங தெரிவித்தார்.

ஆப்கானிஸ்தானில் இருந்த சோவியத் துருப்புக்கள் வாபஸ் பெற்றால் இந்தியாவை எதிர்க்க பாகிஸ்தானுக்கு மிகவும இலே சாக அமையும என பாகிஸ்தான் இரகசிய சேவையின் முன்னாள் தலைவர் ஹமீத் குல் அன்றைய ஜனாதிபதி ஸியா—உல்—ஹக் கிற்கு அறிவித்திருந்தார்.

மேற்படி தகவலை விஷய மறிந்த ஆப்கன் அரசாஙக இரக சிய சேவை வட்டாரஙகள், தெரி வித்துள்ளன.

பாகிஸ்தான் இரகசிய சேவை களும ஏமஜ கட்சி அணி கெரிஞ் லாக்களுக்கிடையே இருந்த இர கசிய தொடர்புகளையும ஆப்கன் அரசு அறிய வந்துள்ளது எனவும ஆப்கன் அரசாஙகப் பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார்.

3ஸி, எஸ்—130 யுத்த சரக்கு விமா னஙகளையும பாகிஸ்தான் கொள்வனவு செய்யவுள்ளத. பாகிஸ்தான் வசம 6 அணுகுண்டு கள் உள்ளன எனவும தெரிய வந்துள்ளத.

ஆப்கானிஸ்தானிலும, இந்தி யாவிலும நிலை கொண்டுள்ள வெளிநாட்டு ஆயுதஙகளின் அச் சுறுத்தல் பாகிஸ்தானுக்கு உள்ள தாக இஸ்லாமாபாத் செய்திகள் கூறுகின்றன.

## அந்நிய இராணுவ நடமாட்டம்

2000 ஆம ஆண்டுக்குள் இதர நாடுகளின் பிரதேசஙகளில் உள்ள அந்நிய இராணுவ நடமாட்டத் துக்கு முடிவு கட்ட வேண்டும என்று சோவியத் யூனியன் தெரி வித்த யோசனையை அமெரிக்கா ஒதுக்கித் தள்ளி வருகிறது என்று

# பனாமா கால்...

(10ஆம் பக்கத் தொடர்ச்சி)

படைக்க வேண்டிய கட்டாயத் தில் அமெரிக்கா இருக்கிறது.

ஆனால், பனாமாவின் அதிபர் மானுவல் நொரீகாவிடம கால் வாயை விட்டுக் கொடுக்க அமெரிக்க அதிபர் ஜோர்ஜ் புஷ் ஷுக்கு மனம வரவில்லை.

ஏனென்றால், நொரீகாவுக் கும, அமெரிக்க அரசுக்கும இடையில் வலுவான பிரச்சினை களும, தகராறுகளும இருந்து வந்தன.

அமெரிக்காவில் போதை மருந்துப் பொருட்களை கடத்தி வந்து விற்பதற்கு நொரீகா உடந்தையாக இருந்தார் என்று அமெரிக்கா குற்றம சாட்டியது.

நொரீகா, கொலமபியா நாட்டின் போதை மருந்து கடத்தல்காரர்களுடன் சேர்ந்து கொண்டு, அமெரிக்காவுக்கு போதைப் பொருட்களைக் கடத்தி கோடி கோடியாக சம பாதித்தார் என்று அமெரிக்கா கூறியது.

இது சமபந்தமாக நொரீகா வுடன் பேச்சுவார்த்தை நடத்தி, அவர் போதை மருந்து கடத்து வதை தடை செய்ய வேண்டும என்று அமெரிக்க அரசாஙகம விருமபியது. ஆனால் நொரீகா, அமெரிக்காவுடன் பேச்சு வார்த்தை நடத்த மறுத்து விட் டார்.

பின்னர் அமெரிக்கா, நொரீ காவை எச்சரிக்க ஆரமபித்தது. அதற்கும அவர் மசியவில்லை, மாறாக, நொரீகா, அமெரிக் காவை கடுமையாக தாக்கிப் பேசி வந்தார்.

எனவே, இறுதிக் கட்டமாக, நொரீகாவை கைது செய்து, விசாரிப்பது என்று அமெரிக்கா தீர்மானித்தது.

நொரீகா, ரகசியமாகத் தப்பிச் சென்று வத்திக்கான் தூதரகத்துக்குள் தஞ்சம புகுந் தார்.

10 நாட்களுக்குப் பின் நொரீகா, அமெரிக்காவிடம சரண் அடைந்தார்.

ஒருவர் சரண் அடைந்து விட்டால் அவருக்கு மரண தண் டனை விதிக்கக் கூடாது என்ற நிபந்தனையின் அடிப்படையில் நொரீகாவுக்கு நிச்சயமாக மரண தண்டனை வழஙகப்பட மாட்டாது என்று அமெரிக்கா அறிவித்து உள்ளது.

(ம—10)

மேற்படி விண்ணப்பதாரர் மக்கானிக்கல் தொழில் நுட்பத்தில் (உற்பத்தித்துறை) தேசிய டிப்ளோமா பெற்றவ ராகவும, மின்சாரத் துறையில் தகுதி பெற்றவராகவும அல் லது மக்கானிக்கல்/மின்சாரத் துறை சமபந்தப்பட்ட மேற்படி பதவிக்கு ஒப்பான தொழிலில் மூன்று வருட கால அனுபவம பெற்றவராகவும இருக்க வேண்டும—

விண்ணப்பதாரர்கள் தமது தகமை மற்றும அனுபவங் கள் சமபந்தமான முழு விபரஙகளையும குறிப்பிட்டு கீழ்க் கண்ட முகவரிக்கு விண்ணப்பஙகளை அனுப்ப வேண்டும—

தொழிற்சாலை முகாமையாளர்—
செயின்ட் அன்தனீஸ் ருபிஙஸ்
(பிரைவெட்) லிமிட்டட்—
பாலாவி— புத்தளம—

விளமபரப்படுத்தப்பட்ட பத்து தினஙகளுக்குள் விண் ணப்பஙகள் இம முகவரிக்கு அனுப்பி வைக்கப்பட வேண் டும—

## சவூதி—டுபாய்—அபுதாபி—குவைட் — ஓமான் —

## வெகு விரைவில் பயணம்

சவூதி:— வீட்டுப் பணிப்பெண்கள் ஒரு கிழமையில் இலவச பயணம வயது எல்லை 30 — 40 இடையில

★ ஹோஸ்பிடல் கிளீனர்ஸ் (பெண்)
— 30 வயதிற்கு மேல் —

குவைட்
டுபாய்
அபுதாபி
ஓமான்

பாஸ்போர்ட், 6 பாஸ்போர்ட் அளவு புகைப்படம 2 போஸ் கார்ட் அளவு புகைப்படத்துடன் நேரில் வரவும— வயது— 22—35 க்கும இடையில்

**AMEEN ENTERPRISES**

511—Prince of Wales Avenue
Colombo — 14.
L—App AL 625/14/15/17/18/23

# கவரும் கானம்

## கொஞ்ச நேரம் கொஞ்ச வாங்க

வாத்தியாரே சின்ன வாத்தியாரே... வாத்தியாரே சின்ன வாத்தியாரே...

எங்க மேல கோபமென்ன வாத்தியாரே... எங்க மேல கோபமென்ன வாத்தியாரே...

நல்லதும் கெட்டதும் பட்டுத்தான் தெரியுது... நியாயமும் தர்மமும் இப்பதான் புரியுது...

ஊரே உங்க பக்கம்... நீங்க



எங்க பக்கம்... ஊரே உங்க பக்கம்... நீங்க எங்க பக்கம் (வாத்தியாரே)

மாமான்னு கொஞ்சிடுங்க... வா வான்னு கெஞ்சிடுங்க... மாமான்னு கொஞ்சிடுங்க... வா வான்னு கெஞ்சிடுங்க...

வெய்யில் காஞ்சு கடலுத் தண்ணி குறைஞ்சு போகுமா... ரத்தத்தோட ரத்தம நாங்க இணைஞ்சு போவமா...

ஓயாமலே போராடுவோம் வா வா நீ... எந்நாளும ஏழைக்கு உன்னை போல தெய்வ மில்லை...

(வாத்தியாரே)

வந்தாத்தான் சோறு தின்போம்... இல்லாட்டி ஏங்கி நிற்போம... வந்தாத்தான் சோறு தின்போம... இல்லாட்டி ஏங்கி நிற்போம...

சிரித்து வாழ நீங்கதானே வழியைச் சொன்னது... விலகி நிற்க எப்படிங்கு மனசு வந்தது...

கண்ணோடுதான் கண்ணாகவே... நாம வாழ்வோம்... தாலாட்டும தாய் போல கொஞ்ச நேரம் கொஞ்ச வாங்க... (வாத்தியாரே)

★

இப்பாடலை இயற்றியவர் கவிஞர் வாலி — இசையமைத்தவர்கள் சங்கர்...கணேஷ் — பின்னணி பாடியவர் ஜானகி கோஷ்டியினர் — பாடல் காட்சியில் நடித்தவர்கள் பாக்கியராஜ்... மீனாட்சி சேஷாத்திரி... மற்றும சிறுவர் சிறுமியர் — படம "என் ரத்தத்தின் ரத்தமே"—

இப்பாடல் வரிகளை விருமபியவர்கள் கிருலப்பனையைச் சேர்ந்த டி கவிதா * கே சுமதி * எம ப்ரியசாந்தி * எம நிரோஷன் — உடுதெனியவைச் சேர்ந்த நாருல் ஷிபா ரஷீத் * ஆர் எம ரிபாத் * ரியால் * ரிகாஸ் * ஹாயீஸ் — குருநாகல் ஜுஹாரா ரபீக் — கொழுமபு 12 ஆதிலா மொஹிதீன் — மானஸ்ஸன கலைக்குமாரி * காமிலா — மாத்தளை நிககொள்ளையைச் சேர்ந்த சிபா * றவ்சியா * சகீலா * சாஹிரா * சியானா * பசீனா * முஹீதா * பளீலுன்னிஸா * ஹசீனா—

# ஒலி ஒளி உருவம்

ரூபவாஹினி RUPAVAHINI

# தொண்டாவும் வேண்டுகிறார்

கடந்த 25—2—90 ஞாயிற்றுக்கிழமை இப்பகுதியில் "ஞாயிறு இரண்டு மணி நேரம தமிழ் ஒளிபரப்பு தேவை" எனும தலைப்பில் புடைவைக் கைத்தொழில் கிராமத் தொழில்துறை அமைச்சர் திரு எஸ் தொண்டமானின் அந்தரங்கச் செயலர் திரு பா திருநாவுக்கரசுவின் கோரிக்கைகளைப் பிரசுரித்திருந்தோம!

இது சமபந்தமாக தனது அமைச்சர் திரு தொண்டமான் ஜனாதிபதி பிரேமதாசாவுக்கும ஏற்கனவே கடிதம எழுதியிருந்ததையும அவர் அதில் குறிப்பிட்டிருந்தார்!

அதே கருத்துக்களை மீண்டும தகவல் ராஜாங்க அமைச்சர் திரு ஏ ஜே ரணசிங்கவுக்கு அனுப்பியுள்ள கடிதத்திலும அமைச்சர் தொண்டமான் வலியுறுத்தியுள்ளதை எமது வாசகர்களுக்காக இங்கே தருகிறோம!

மீண்டும மீண்டும வேண்டும் தொண்டாவின் வேண்டுகோள்கள் வெகு விரைவில் — ஏன் அடுத்த ஞாயிறே நிறைவேறினாலும ஆச்சரியப்படுவதற்கில்லை!

ஏனென்றால் நியாயமான அவரது கோரிக்கைகளை ஜனாதிபதி பிரேமதாசவும தகவல் ராஜாங்க அமைச்சர் ரணசிங்கவும் நிச்சயம் நிறைவேற்றி வைப்பார்களென்றே நமது தமிழ் ரசிகர்களும நினைக்கி

யாகும தமிழ்த் திரைப்படத்தை மாதத்தில் ஒரு ஞாயிற்றுக்கிழமையில் பிற்பகல் ஒரு மணிக்கு ஆரமபிக்கலாம என்று ஏனைய மூன்று ஞாயிற்றுக்கிழமைகளிலும தரமான பல்வேறு



தொண்டமான்

அம்சங்களைக் கொண்ட தமிழ் நிகழ்ச்சிகளை ஒளிபரப்ப முடியும எனறும திரு தொண்டமான் இக் கடிதத்தில் யோசனை தெரிவித்துள்ளார்—

பிற்பகல் ஒரு மணி முதல் மூன்று மணி வரை தமிழ் நிகழ்ச்சிகளை ஒளிபரப்புவதால் ரூபவாஹினியின் ஏனைய வழமையான நிகழ்ச்சிகளுக்கு குந்தகம ஏற்படாது—

ஏனெனில் இத் தமிழ் நிகழ்ச்சிகளுக்கான விளமபரங்களைத் தன்னால் பெற்றுத் தர இயலும என எனது அந்தரங்கச் செயலாளர் திரு பா திருநாவுக்கரசு உறுதியளித்துள்ளார்— ஏற்கனவே பல விளமபரதாரர்களை கைவசம அவர் வைத்துள்ளார் என்றே நான் கருதுகிறேன்—

இந் நிகழ்ச்சிகளுக்கான விளமபரங்களை ரூபவாஹினி பெற்றுக் கொள்ளும வரை விளமபரதாரர்களை எனது செயலாளர் பெற்றுத் தருவார்—

இப்படி திரு தொண்டமான் இக் கடிதத்தில் தெரிவித்துள்ளார்—

தயாரிப்பு: சஞ்ஜயன்

## தவளைக்கு பாம்பு பயமா?

கடந்த வியாழன் (8—3—90) இரவு வாஹினி வழங்கிய "லைப் ஒன் ஏர்த்" ஆங்கில விவரணத் தொடரில் இம்முறை "இன்வேஷன் ஒவ் த லான்ட்" எனும தலைப்பில் தவளைகளைப் பற்றித் தவறாது நாம அறிந்து கொள்ள வேண்டிய எவ்வளவோ விஷயங்களை எல்லாம கண்ணிமைக்காமல் கண்டுகளிக்க முடிந்தது!

பாமபுக்குணவாகும தவளைளைப் பற்றித்தான் நாம கேள்விப்பட்டிருக்கிறோம— ஆனால் பாமபையே எதிர்த்து விரட்டும தவளையையும அன்று காண முடிந்தது! ஆம — தனது உருவத்தைப் பெரிதாக உருவகித்துக் காட்டிப் பாம்பைப் பின்வாங்க வைக்கிறது!

# ஒளித்தென்றல் ஒளி மங்குவதேன்

இதுவரை வாஹினி ரசிகர்களைக் களிப்பிலாழ்த்தி வந்த "ஒளித்தென்றல்" இசை நிகழ்ச்சி இம்முறை (8—3—90) "ஒளி" மங்கியதாகவே இருந்ததுடன் "தென்றல்" தழுவிடும நிலையிலில்லாத கலை நிகழ்ச்சியாகவே அமைந்தது—

ஏனைய "ஒளித்தென்றல்" நிகழ்ச்சிகளுடன் ஒப்பிடும போது எம எஸ் செல்வராஜா வின் இசையமைப்பு இமமுறை எடு

யும நினைவில் நிற்கவில்லை! ஆனாலும "டீச்சர்" வேடம வெகு பொருத்தமாகவே இருந்தது!

செ குணரத்தினம இயற்றி பீ கே சேகர் பாடிய "இதயம் என்னும கழனியிலே" என்ற பாட்டுத்தான் ஓரளவு கேட்டு ரசிக்கக் கூடியதாக இருந்தது!

இடமபெற்ற ஆறு பாடல்களில் குறைந்து இரு பாடல்களும

# நாற்பத்தைந்தா நம்பவே முடியாது!

"டினஸ்டி" தொலைக்காட்சித் தொடரில் கிறிஸ்டல் கறிங்டனாகத் தோன்றும நடிகை லின்டா எவன்ஸ் தனது 45 ஆவது வயதில் குழந்தை ஒன்றை தத்து எடுத்து வளர்க்க முடிவு செய்திருக்கிறார்!



லின்டா எவன்ஸ்

லின்டா எவன்சுக்கு இப்போது 45 வயதாகிறது— உலகப் புகழ்பெற்ற அதே சமயம் செல்வம மிக்க நடிகைகளில் இவரும ஒருவர்! பல்வேறு செல்வங்களை இவர் அனுபவித்து பார்த்து விட்டாலும் பிள்ளைச் செல்வம் மட்டும இவருக்கு எட்டாக் கனியாக அமைந்து விட்டது!

லின்டா இரண்டு தடவைகள் திருமணம் செய்து கொண்டவர்! காதலர்களுடன் ஒன்றாக வாழ்ந்துமிருக்கிறார்! ஆனால் குழந்தைச் செல்வம் மட்டும் இவருக்குக் கிடைக்கவில்லை—

லின்டா தன் 24 ஆவது வயதில் பெரும செல்வந்தரும படத் தயாரிப்பாளருமான ஜோன் டெரெக்கைத் (போ டெரெக்கின் கணவர்) திருமணம செய்து கொண்டார்!

இத்திருமணம் எட்டாண்டுகள் நீடித்தது— பின்னர் முறிந்தது! இதன் பின்னர் ஸ்டான் ஹெர்மன் என்பவரைத் திருமணம செய்து கொண்டார்— மிகப் பெரும பணக்காரரான இவர் பரிசுகளை லிண்டா மீது அள்ளிச் சொரிந்த போதும கணவனின் அன்பை மட்டும தரவில்லை— மூன்றாண்டுகள் நீடித்த இந்த உறவும் முறிவடைந்தது!

இவ்விரண்டு திருமணங்களின் ஊடாகவும குழந்தைப்பாக்கியம கிட்டாத லின்டா தன் 17 ஆவது வயதில் கருத்தரித்து கருக்கலைப்பும செய்து கொண்டவர்!

இப்போது உலகப் பணக்காரர்கள் வசிக்கும பெவர்லி ஹில்ஸ் பகுதியில் 51 வயது ரிச்சர்ட் கோஹான் என்ற காதலனோடு ஒன்றாக வசித்து வருகிறார் லின்டா!

25—02—90 ஆம திகதியன்று ரூபவாஹினியில் ஒளிபரப்பான செவன டிக்கெட் மாபெரும சீட்டிழுப்பின் பெறுபேறுகள்—

| | | |
|---|---|---|
| 1 | 01001797 | — 129 |
| 2 | 01001000 | — 103 |
| 3 | 01001998 | — 128 |
| 4 | 01001384 | — 323 |
| 5 | 01000208 | — 117 |

ஒரு லட்சம ரூபா வீதம ஐந்து லட்சாதிபதிகள்

உங்கள் வெற்றிக்குரிய டிக்கெட்டினை 541, ஸ்ரீ சங்கராஜ மாவத்தையில் அமைந்துள்ள செவன செயலகத்தில் சமர்ப்பித்து பணத்தைப் பெற்றுக் கொள்ளுங்கள்—

Year 2000
யாவருக்கும புகலிடம்
Shelter For All

ஏனைய "ஒளித்தென்றல்" நிகழ்ச்சிகளுடன் ஒப்பிடும் போது எம் எஸ் செல்வராஜா வின் இசையமைப்பு இம்முறை எடு படவில்லை என்றே கூறலாம்!

ஆரம்பத்தில் கணேஷ்வரனும் விஜயரட்ணமும் பாடிய ஊஞ்சலாட்டல் பாடல் கூட இம் முறை உவகை தர மறுத்து விட்டதே! வீடியோ கமெராவுக்குப் போஸ் கொடுக்கும் செயற்கை யாகவே பாடல் பாவனைகள் இருந்தன!

எண்களை உச்சரித்துப் பண் பாடிய பெண் பாடகி நிலாமதி

கூடியதாக இருந்தது!

இடம்பெற்ற ஆறு பாடல் களில் கடைசி இரு பாடல்களும் மறுஒளிபரப்புக்களாகின!

ஒளித் தென்றல் இப்படியே "ஒளி" மங்கிப் போய் விடாமல் "தென்றல்" அடித்து மீண்டும் அனைவரையும் மயக்கிட வேண்டுகிறோம்!

ஆனாலும் கடந்த வெள்ளி (9–3–90) மாலை ஒளிபரப்பான "உதயகீதம்" நிகழ்ச்சி இதற்கு எதிர்மாறாக செல்வராஜாவின் இசையமைப்பில் இனிமையாகவே இருந்தது!

வல் ராஜாங்க அமைச்சர் ரணசிங்கவும் நிச்சயம் நிறைவேற்றி வைப்பார்களென்றே நமது தமிழ் ரசிகர்களும் நினைக்கிறார்கள்! இதோ தொண்டாவின் அக்கடிதம்...

ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையும் பிற்பகல் ஒரு மணியில் இருந்து மூன்று மணி வரை ரூபவாஹினியில் தமிழ் நிகழ்ச்சிகள் ஒளிபரப்பப்பட வேண்டும்! இதற்கான நடவடிக்கைகளை தகவல் துறை அமைச்சு மேற்கொள்ள வேண்டும்–

வழக்கமாக மாதம் ஒருமுறை இரவு பத்து மணிக்கு ஒளிபரப்

சிகளை ஒளிபரப்புவதால் ரூபவாஹினியின் ஏனைய வழமையான நிகழ்ச்சிகளுக்கு குந்தகம் ஏற்படாது–

மேலும் இந்த ஒளிபரப்பு நடைபெறும் காலம் வர்த்தக ரீதியாக முக்கியத்துவம் பெற்றதல்ல! இத் தமிழ் ஒளிபரப்பைத் தொடர்ந்து நடத்துவதற்கு போதிய விளம்பரதாரர்களைப் [illegible] பெறுவதில் சிரமம் எதிர்நோக்கப்படுவதாக கருதத் தேவையில்லை–

தைப் பெரிதாக உருவகித்துக் காட்டிப் பாம்பைப் பின்வாங்க வைக்கிறது!

முன்பொருமுறை டிவியில் ஒளிபரப்பான பாம்பை விழுங்கிய தவளையைப் பற்றியும் இப்பகுதியில் நாம் எழுதியிருந்தது வாசகர்கள் அறிந்ததே!

தவளைகளில்தான் எத்தனை விதம் – எத்தனை வர்ணங்கள்! அதன் வாழ்க்கை முறை ஒவ்வொன்றும் "க்ளோஸ் அப்" பில் அபாரம்!


# சி. ஐ. எஸ். கண்டிக் கிளை

இன்று 11—03—90 ஞாயிற்றுக்கிழமை காலை 10–00 மணிக்கு ஜனாதிபதி சட்டத்தரணி ஜனாப் எம் எம் பாயிஸ் முஸ்தபா அவர்களால் திறந்து வைக்கப்படும்–

இங்கு

★ இஸ்லாமிய வீடியோ ஓடியோ நாடாக்கள்

★ இஸ்லாமிய புத்தகங்கள் சஞ்சிகைகள்

★ சிறுவர்களுக்கான புத்தகங்கள்

★ ஸ்டிக்கர்கள்

★ பெண்களுக்கான ஹிஜாப்கள்

கிடைக்கும்


**இஸ்லாமிய கல்வி நிலையம்**

மரிக்கார் நிறுவனம்
58– யட்டிநுவர வீதி–
கண்டி–

தலைமை காரியாலயம்—

**சி. ஐ. எஸ்.**

15/ஏ– ரோஹினி ரோட்–
வெள்ளவத்தை–
தொ– இல்– 01–586660





நாட்டுக் கூத்துக்கொரு நடிகமணி என விளங்கிய காலஞ்சென்ற பழம்பெரும் கலைஞர் வி வி வைரமுத்து பாரிஸிலுள்ள "இலங்கைக் கலையக"த்தினராலும் அண்மையில் நினைவு கூரப்பட்டார்! வைரமுத்துவின் பாணியிலே பாடி அரிச்சந்திரன் மயான காண்டத்தை நடித்துக் காட்டிய கிரகரி தங்கராஜாவையே இங்கு காண்கிறீர்கள்! அமைச்சராக நடித்தவர் பெஞ்சமின் இமானுவல்– இந்தக் கலையகத்தினரின் மற்றொரு "கலையமுத"த்தில் கலந்து கொள்ளப் பாரீஸுக்கு அழைக்கப்பட்டிருந்தவர்தான் வானொலி தொலைக்காட்சி மேடை திரைப்பட நடிகரான கே எஸ் பாலச்சந்திரன் என்பது குறிப்பிடத்தக்கது!

## ரூபவாஹினியின் தமிழ் நிகழ்ச்சிகள்

| | | | |
|---|---|---|---|
| ஞாயிறு – மஜ்லிசுலிஸ்லாம் | 5–30 | புதன் – கலந்துரையாடல் | 5–30 |
| பொன்மாலைப் பொழுது | 6–55 | உரை நிகழ்ச்சி | 6–15 |
| திங்கள்– வண்ணச்சோலை | 5–30 | வியாழன் – தரிசனம் | 6–55 |
| தமிழ்ப் பாடல்கள் | 6–15 | வெள்ளி – ஒலி ஒளி | 6–55 |
| தமிழ் நாடகம் | 6–55 | தமிழ்த் திரைப்படம் | 10–00 |
| செவ்வாய் – கல்வி நிகழ்ச்சி | 4–30 | சனி — சங்கமம் | 5–30 |
| கலையரங்கம் | 6–55 | தமிழ்ப் பாடல்கள் | 6–15 |

## பிறந்த தின வாழ்த்து



பாத்திமா நஸுஹா

ஏ ஆர் ஹிபதுல் கரீம் தம்பதிகளின் செல்வப் புதல்வி பாத்திமா நஸுஹா தனது முதலாவது பிறந்த தினத்தை 7–3–90 இல் கொண்டாடினர்–

பாத்திமா நஸுஹாவை செல்வங்கள் அனைத்தும் பெற்று அன்னை பாத்திமா நாயகி வழியில் நீடுழி வாழ டடா, மம்மி, பஸ்லுர் றஹ்மான் நானா, உம்மா வாப்பா, வாப்பும்மா மற்றும் குடும்பத்தினர் அனைவரும் வாழ்த்துக் கூறியுள்ளார்கள்–

வி இ 032235

# வட்டத்துக்கு வெளியே!

—எஸ். ராஜா



"லேபர்" வார்டில் என் மனைவியைக் கிடத்திய போது, சத்தியமாக நான் கலங்கி விட்டேன்!

கண்ட இடங்களில் வியர்வை வழிய ஆரம்பித்தது!

உயிர் நண்பன் தீபக் அருகில் வந்தான்!

"டேய்... டேய் கதிர்! என்னடா இது? ஏண்டா அழறே?"

மெல்ல விசும்பினேன்!

"டேய்...! யூ ஆர் எ டாக்டர் அதை மறந்துடாதடா! எத்தனை பிரசவம் பார்த்து இருப்பே! பயப்படறே"

"அதில்லை தீபக்! வந்து...!

"நீ ரொம்ப "டென்ஷன்"லை இருக்கே! நாங்க பார்த்துக்கு றோம்! பதட்டப்படாம வெளியே நில்லு"

என்னால் மறுக்க முடிய வில்லை மெதுவாக வெளியே வந்தேன்—

வராண்டாவில் என் அம்மா ஏதோ முணுமுணுத்துக் கொண்டு இருந்தாள்! நிச்சயம "ராம ராமா அல்லது சிவ சிவா"வாக இருக்கும!

"ஐயோ! என் செல்லத்துக்கு எதுவும் நேரக் கூடாது! என் மனைவியும வேண்டும்... குழந்தையும் வேண்டும்...! இது வும் ஏமாற்றி விட்டால்... சேச்சே! என்ன கற்பனை!"

கற்பனையின் அநியாய பயத்தை மாற்ற மெதுவாக எனது "க்ளினிக்"கை விட்டு வெளியே வந்தேன்!

மழை லேசாக தூறிக் கொண்டிருந்தது!

எங்கோ தேய்ந்து போன ரெக்கார்டிலிருந்து "போனால் போகட்டும போடா" பாடல் ஈனமாக கேட்டது!

தெருவில் நாய் ஒன்று ஓ என அழுதது!

எனக்கு வயிற்றைக் கலக்கியது! ஏதோ ஒரு அசம்பாவிதம நிகழ இருப்பதற்கான முன் எச்சரிக்கையா இவை?

மீண்டும உள்ளே வந்தேன்! வார்டில் என் மனைவி அலறும ஒலி கேட்டது!

செத்து விட்டேன்!

அப்போது அவன் வந்தான்!

எனக்கு அவனைப் பார்க்க வெட்கமாய் இருந்தது! குனிந்து கொண்டேன்!

அவன் என்னிடம வந்தான்!

"என்ன டாக்டர் பிரசவம ஆயிடுச்சா?"

"இ... இல்லேப்பா...!

ஏன் டாக்டர் பயப்படறீங்க? நேத்திக்கு என் மனைவிக்கும இதே நிலைதான் இருந்தது! அப்ப நான் இது மாதிரி இருந்தேன்! நீங்கதானே என் மனைவியைக் காப்பாத்தினீங்க!"

சடாரென அவன் கையைப் பிடித்தேன்!

"ஏன் டாக்டர்?"

என்னை மன்னிச்சுடுப்பா! உணர்ச்சிகளை உணர மறந்துட்டேன்பா! நேற்று உன்கிட்ட என்னமா சிடுசிடுத்தேன்! உன் நிலைமையை உணர்ந்தேனா? உன்னிடம மட்டுமா? எத்தனை பேரிடம சிடுசிடுத்திருப்பேன்! உள்ளே அலறும மனைவியின் அலறலை மட்டும கேட்டு, வெளியே துடித்து நிற்கும கணவன்மார்களிடம என்னமாய் சிடு சிடுப்பேன்...!

"உணர்ச்சிவசப் படாதீங்க சார்!"

"என்ன மனது இது? பிறருக்கு ஏதாவது ஒன்று ஆனால் கவலைப் படாமல் இருக்கும... அதே தனக்கென்றால்...? எல்லாம ஒரு வட்டத்துக்குள்தான்! அந்த வட்டத்தை விட்டு வெளியே வந்தால் மனித ஜீவன்கள் படும அதே அவஸ்தைகள் நமக்கும!" திடீரென தத்துவம பேசினேன்!

ரொம்ப நேரம அவன் எனக்கு ஆறுதல் சொன்னான்! இதமாக இருந்தது!

"சாரி கதிர்! எவ்வளவோ முயற்சி செய்தோம! ஆபரேஷன் செய்துதான் குழந்தையை எடுக்கணும!"

அழ ஆரம்பித்தேன்!

"டேய்... ஐயோ! உன்னோட என்னடா வம்பா போச்சு! மறுபடியும சொல்றேன்... நீ டாக்டர்டா...!"

"இப்ப மனுஷன்டா! ஒரு மனைவிக்குக் கணவன்டா! அப்பா ஆகப்போகும நேரத்தை எதிர்பார்த்துக் காத்துக் கிடக்கும ஒரு ஆறறிவு ஜீவன்டா!" கண்டபடி பேசினேன்!

என்னை ஒரு மாதிரியாகப் பார்த்தான் தீபக்!

"ஓ கே! ஓ கே! இப்ப அதெல்லாம எதுக்கு? நீ பதறாம இரு! உன் மனைவி உன்னைப் பார்க்கணுமா! பார்த்துட்டு வந்து... முடிப்பதற்குள் ஓடினேன்!

கண்கள் உள்ளுக்குள் போய், சோகமாக இருந்தாள்! கஷ்டப் பட்டுச் சிரித்தாள்!

அவள் கையைப் பற்றினேன்! மெதுவாக அவள் தலையை வருடினேன்!

ஆயிரம செய்திகளை மவுனத்திலேயே பேசி விட்டோம!

ஆபரேஷன் தியேட்டர் வாசலிலேயே இருந்தேன்!

பயத்தில் என் வாய், நகங்களை வெட்டித் தள்ளிக் கொண்டிருந்தது—

ஐயோ! என் மனைவியை இந்நேரம கிழித்து இருப்பார்களே!

சடாரென இருள் சூழ்ந்தது!

பிரமை பிடித்தவன் போல் நின்றேன்!

"இறைவா! என்றுமில்லாமல் இன்று "கரன்ட்" போய்விட்டதே? உன் வாழ்வில் இருள்தான் என்பதை இப்படிச் சொல்கிறாயோ?"

தபதபவென ஆபரேஷன் உடையுடன் நர்ஸ் ஓடினாள்! ஜெனரேட்டரை இயக்கி விட்டுப் பாய்ந்தாள்!

பேச முடியாமல் நின்றேன்!

எனது நர்சிடமே, என் மனைவியைப் பற்றிக் கேட்க பயம... ஐயோ!"

மணி 12–35

ஆபரேஷன் தியேட்டரிலிருந்து குழந்தை ஒலி கேட்டது!

"இறைவா! என் காதில் தேன் பொழிந்தாய்! நிச்சயமாய் இது ஆண் குழந்தைதான்... மகிழ்ச்சி ஒரு புறமிருக்க என் மனைவி பற்றிய கவலை மறு புறம...!

பத்து நிமிடம கழித்து தீபக் வெளியே வந்தான்! என்னைப் பார்த்தான்!

"ஆண் குழந்தை பிறந்திருக்கு! மூச்சு ட்ரபிள்! ஆக்சிஜன் வச்சிருக்கோம!" என்றான்

"இறைவா! இன்று என்னை சோதித்தே கொன்று விடுவதென முடிவு செய்து விட்டாயா?"

தூரத்தே என் தாய் ரொம்ப புலம்பிக் கொண்டு இருந்தாள்!

கிடக்—

மீண்டும வந்தான் குழந்தையோடு!

"கதிர்! இந்தா உன் குழந்தை"

இனிமேல் கவலையில்லை! உன் மனைவியும இதோ வந்து விடுவாள்...!

கண் கலங்கிற்று இது மகிழ்ச்சியினால்!

என் அம்மா ஓடி வந்து குழந்தையைக் கவ்விக் கொண்டாள்!

நீண்ட நேரம கழித்து கண் விழித்தாள்!

குழந்தையையும, என்னையும குழந்தை உங்களை மாதிரியே இருக்குதுங்க!"

## சின்னஞ் சிறுகதை

எவ்வளவு இனிய வார்த்தை! மிதந்தேன்!

"இல்லையில்லை! உன்னுடைய அழகும என்னுடைய அறிவும கலந்து இருக்கு!" மகிழ்ச்சியில் உளறினேன்!

இருவரும சிரித்தோம!

அந்த பிஞ்சுக் குழந்தையை வெறித்துப் பார்த்தபடி முணுமுணுத்தேன்!

இனி சத்தியமாய் யாரிடமும சிடுசிடுக்க மாட்டேன்—

(த–10)

# நடிகர் ரேகனின் சினிமா வாழ்க்கை



"பெட் டைம போர் பான் சோ" படத்தில் ரேகனுடன் நடிகை டயானா— நடுவில் ஒரு குரங்கு— (ம—10)

1952 ஆம ஆண்டு மற்றொரு நடிகையான "நான்சி டேவிஸை" மணந்தார்— அவர் தனது கணவரின் மண வாழ்விலும அரசியல் வாழ்க்கையிலும மிகவும உறு துணையாக விளங்கி வந்தார்—

ரேகன் ஜனாதிபதியாக தேர்ந்தெடுக்கப்பட்ட பிறகு ஈரானில் பணயக் கைதிகளாக இருந்தவர்களை உடனடியாக விடுவிக்க நடவடிக்கை எடுத்தார்— மேலும "ஸ்டார் வார்ஸ்" என்று சொல்லக் கூடிய "நட்சத்திர போர் முறை" திட்டங்களுக்கு ஆதரவளித்ததோடு பல ஆயிரம கோடி ரூபாய்களை அதன் ஆய்வுக்கு செலவிட்டார்—

அதிலும நாட்டின் பாதுகாப்புக்காக அதிக நிதியை ஒதுக்கினார். பல துணிச்சலான நடவடிக்கைகளை மேற்கொண்டார்— அடல்

"பெட் டைம பேரர் பான் சோ" படத்தில் றேகனுடன் நடிகை டயானா– நடுவில் ஒரு குரங்கு– (ம—10)

# பின்னாளில் ஜனாதிபதியாவதற்கு அவர் அத்திவாரமிட்ட 27 வருடங்கள்

ஹாலிவுட் பல திறமைமிக்க திரைப்படத் துறையினரை உலகுக்கு அளித்த பெருமிதமும், சிறப்பினையும் கொண்டுள்ளது– எனினும தான் அளித்த நடிகரால் தன்னையே சிறப்பித்துக் கொண்டதோடு உலகின் உயர் பதவி வகித்த நடிகரை உருவாக்கிய பெருமையையும ஒருவர் மூலம அடைந்தது அவர்தான் பிற்காலம அமெரிக்க ஜனாதிபதியாக தேர்ந்தெடுக்கப்பட்ட "ரோனால்டு றேகன்" ஆவார்–

றேகன் 1911 ஆம ஆண்டு பெப்ரவரி 6 ஆம திகதி "டாமபிகோ"வில் (அமெரிக்காவில்) பிறந்தார்– தன்னுடைய இளமை படிப்பை இனிதாக தொடங்கியவர் கல்லூரி படிப்பை "யூரிக்கா கல்லூரி"யில் முடித்தார்–

கல்லூரி படிப்பு முடிந்த கையோடு தன்னுடைய பணியை "டேஸ் மொய்ன்ஸ்" (ஐவர)வில் விளையாட்டு துறை நிலையத்தில் பணியாற்றினார்– அதிலும குறிப்பாக பேஸ்பால் விளையாட்டு பற்றி சுவையாக அறிவிப்பதில் இவர் மிகவும கைதேர்ந்தவர்– "சிகாகோ கப்" போட்டியில் பிரதான விளையாட்டு அறிவிப்பாளராக இவர் இருந்ததோடு சிறந்த விமர்சகராகவும விளங்கினரார்,

றேகன் ஹாலிவுட்டில் 1930க்கு மேல் குடியேறினார்– அதிலும "வார்னர் பிரதர்ஸ்" நிறுவனத்தின் மூலம முதல் முறையாக ஒப்பந்தம செய்து கொண்டு திரையுலகில் அடியெடுத்து வைத்தார்–

இவருடைய முதல் படமாக 1937 ல் "லவ் இஸ் ஒன் த ஏர்" படம வெளிவந்தது–

பெருமபாலும காதல் படஙகளிலும மேற்கத்திய கௌபோய் படஙகளிலும றேகன் நடித்தார்– அதிலும இவருக்கு மிக சிறப்பாக அமைந்த படஙகள் "சாமஉட்ஸ்" தயாரிப்பான "கிஙஸ்ரோ" (1942) "வின்செண்ட் ஷெர்மனின்" தயாரிப்பான "தி ஹாஸ்டி ஹாஸ்ட் 1950 லும வெளிவந்தன–

றேகன் 1937 முதல் 1964வரை 27 வருடஙகள் 50க்கும மேற்பட்ட படஙகளில் நடித்துள்ளார் இவரது படஙகளில் பெருமபாலும சமூக குற்றஙகளை தட்டிக் கேட்கும வீர இளைஞராகவும ஏழைகளுக்கு உதவும ஏழை பஙகாளனாகவும கதா பாத்திரஙகள் அமைந்தன–

இவருடைய பெருமபாலான பாத்திரஙகள் மேலோட்டமாக அமைந்தனவே தவிர மிக ஆழமாக அமையவில்லை–

இதுவரை இவர் நடித்த ஒரு படமகூட "ஆஸ்கார்" சிறந்த நடிகருக்காக முன்மொழியவோ தேர்ந்தெடுக்கவோ படவில்லை–

இவர் நடித்த படஙகளில் குறிப்பிடத்தக்கவை லவ் இஸ் ஆன் த ஏர் சார்ஜென்ட் மர்பி தௌவ்பாய் பிரம புருக்ளின்" "பாய்ஸ் மீட் கேர்ளஸ்" ஆண்" ஏஞ்சல்ஸ் பிரம டெக்ஸஸ்" "மர்டர் இதை ஏர்" "கிஙஸ்ரோ "நைட் அன் டு நைட் "திகேர்ள் பிரெம ஜோன்ஸ் பீச்" தி ஹாஸ்ட்" "பெட்டைம பார் பான்சோ" "தி வின்னிங டீம" "பிரிஸ்னர் ஆப்வார்" "டென்னிஸ் பார்ட்னர்" ஆகியவையாகும இவருடைய கடைசி படமாக "தி கில்லர்ஸ்" 1964ல் வெளிவந்தது–



ஜனாதிபதியான பின் றேகன் தமது மனைவி நான்ஸியுடன் (ம—சி)

இயல்பாக நல்ல குணஙகளைக் கொண்டவராக விளஙகிய றேகன் குடிப்பழக்கம் புகை பிடிக்கும பழக்கம அற்றவராக விளஙகியது இவரின் தனிச் சிறப்பு–

இரண்டாவது உலக யுத்தம தொடஙகிய காலத்தில் றேகன் அமெரிக்க விமானப் படையின் கேப்டனாகப் பணியாற்றினார் அப்போது யுத்த சமபந்தமான படஙகளின் தொகுப்புகளை தயாரித்து அளித்து வந்தார் யுத்தத்திற்குப் பிறகு திரும்பவும சிவிலியன் வாழ்க்கைக்கு திருமபினார்–

இவர் நடித்த "பெட் டைம பார் பான்சோ" படத்தில் "புரபஸர் பீட்டர் பாய்டு" பாத்திரத்தில் இவர் சிறப்பாக நடித்தார்– ஒரு "சிமபன்சி" குரஙகை யூனிவர்சிட்டி மூலம பெற்று தனது இல்லத்துக்கு எடுத்து சென்று குழந்தை போல் வளர்க்கும போது அதனால் ஏற்படும இடைஞ்சல்களை பற்றி வெகு அருமையாக சித்திரித்திருந்தார் டைரக்டர் "பிரெடரிக் டி கொர்டுவா"

றேகன் நடித்துக் கொண்டிருக்கும போதே "நடிகர் சஙகத்தின் தலைவராக " (ஸ்கிரின் ஆக்டர்ஸ் கில்ட்) 1947 முதல் 1952 வரை இருந்தார் 1959 ஆம ஆண்டும அதே பதவிக்கு இவர் தேர்ந்தெடுக்கப்பட்டார்– எனினும் அரசியலில் ஹீரோவாக 1962 ல் தான் உருவானார்–

1964 ஆம ஆண்டு ஜனாதிபதி தேர்தலில் குடியரசு கட்சியின் பேரி கோல்ட் வாட்டர்"ரை ஆதரித்தார் (எனினும அப்போது "லின்டன் ஜான்சன் ஜனநாயக கட்சி வெற்றி பெற்றார்) பிறகு தீவிரமாக அரசியலில் ஈடுபட்டதன் விளைவு 1966 ஆம ஆண்டு கலிபோர்னியாவின் கவர்னராக தேர்தெடுக்கப்பட்டார் தன்னுடைய செல்வாக்கினால் றேகன் எட்டு வருடஙகள் கவர்னராக இருந்தார்–

1976 ஆம ஆண்டு அமெரிக்க ஜனாதிபதி தேர்தலில் குடியரசு கட்சியின் சார்பில் "ஜெரால்ட் போர்டுடன் போட்டியிட்டு றேகன் தோற்றார்– இருந்தபோதும குடியரசு கட்சி எனினும் 1980 ஆம் ஆண்டு தேர்தலில் றேகன் பெரும வெற்றி பெற்று 1988 வரை எட்டு ஆண்டுகள் அமெரிக்க ஜனாதிபதி பதவியை வகித்தார்–

1940 இல் ஹாலிவுட்டின் புகழ்பெற்ற நடிகையான "ஜானே வைமனை" முதலாவதாக மணந்தார்– (வைமனுக்கு இவர் இரண்டாவது கணவர்) இவருக்கு ஒரே மகள் "மௌரீன் கன்" டி வியில் பாடக நடிகையாக புகழ்பெற்று விளஙகுகிறார்– 1948 இல் ஜானே வைமனை இவர் விவாகரத்து செய்தார்–

பல துணிச்சலான நடவடிக்கைகளை மேற்கொண்டார்– அயல் நாட்டு கொள்கைகள் மீது அதிக ஆர்வம காட்டி வந்தார்–

குறிப்பாக சோவியத்துடன் அணு ஆயுத குறைப்பு, மற்றும நடுத்தர ஏவுகணைகளை அழிக்கும சில சமாதான திட்டஙகளை உருவாக்குவதில் முழு ஒத்துழைப்பும, பேராதரவும அளித்து செயல்பட்டார்–

1988 ஆம ஆண்டு இறுதியில் ஜனாதிபதி பதவியிலிருந்து ஓய்வு பெற்ற றேகன் இன்றும நல்ல செல்வாக்குள்ள தலைவராகவும நடிகராகவும உலக மக்கள் முழுவதும மிகவும் அறிந்த மனிதராகவும விளங்கி வருகிறார்,

(ம—10)

## வசந்தங்கள் பாடிவரும்

— ரீ. எல். தாவூத் —

வெள்ளை ஒளியை அள்ளி வழஙகும
வெள்ளி நிலாவே பாடு! — இஙகே
குள்ள உளமுடன் கொடுமைகள் செய்யும
கள்வர் நிலை கண்டு பாடு!

★

எண்ணிலா மாந்தர் வீணே அழியும
இடுக்கண் நிலை கண்டு பாடு! — அன்றேல்
வன்முறை நீஙகி வளமே ஓஙக
வசந்த கீதஙகள் பாடு!

★

இனஙகள் ஒன்றாய் இன்புற்று வாழ இஙகு
இறையை வேண்டிப் பாடு! — இருக்கும
தனவான் ஏழைக் கிரஙகி வழஙகத்
தயவுடன் முன் சென்று பாடு!

★

பாவலர் பாக்களில் ஏழைகள் வாழ்ந்திடும
பாதைகள் உண்டென்று பாடு! — இஙகே
பாவமே புரிந்திடும பாதகர் மாண்டு
பண்பு(ள்)ளோர் பிறந்திடப் பாடு!

# மலையக மாருதம்



தயாரிப்பு: கே. தமிழ்மாறன்

## தொண்டர் ஆசிரியர் நியமனம் மீண்டும் இழுபறி நிலையில்

### நிரந்தரமாக்கப்படும் காலஎல்லை நீடிப்பு

மலையகப் பாடசாலை தொண்டர் ஆசிரியர்களின் நிரந்தர நியமனம் மீண்டும் இழுபறியாகி விட்டது—

தொண்டர்கள் எல்லோரும செல்லச்சாமியுடன் தொடர்பு கொண்டோம—

"அதிகாரிகள் தொண்டர் ஆசிரியர்களையும சேர்த்துக் கொள்ளத் தவறி விட்டனர்—

தொரு தலைப்பிலும "மலையக மாருதம்" செய்திக் கட்டுரை வெளியிட்டிருந்தது—

அவ்வேளை 217 தொண்டர் ஆசிரியர்கள் சுமார் ஆறு – ஏழு வருட சேவைகளை கொண்டவர்களாக இருந்தனர்—

இந்த தெரிவிற்கு விண்ணப்பித்தவர்களில் 995 பேர் தெரிவு செய்யப்பட்டிருக்கின்றனர்— இவர்களுக்கான பயிற்சிகள் இம் மாதம் 15 ஆம திகதி அவ்வப் பகுதி கல்விப் பிரதேசங்களுக்கூடாக நடைபெறும—

இந்த தெரிவில் தொண்டர் ஆசிரியர்கள் "அம்போ" என கைவிடப்பட்டுள்ளனர்— ஒருவர் தானும இத்தெரிவில் எடுபடவில்லை என்று சொல்லப்படுகிறது—

இவர்கள் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் தலைமை அலுவலகத்திற்கும கல்வி அமைச்சுக்கும படை எடுத்த வருகின்றனர்—

இவர்களுக்கு ஆறுதல் அளிப்பதாக மீண்டும தொண்டர் ஆசிரியர்களுக்கென பிரத்தியேகமாக விண்ணப்பம கோரப்பட்டுள்ளது—

1990 ஜனவரி 22 வர்த்தமானி இலக்கம 599 இல் "அரசாங்க பாடசாலைகளில் தொண்டர் ஆசிரியர்களை பயி

வயதெல்லையிலிருந்து குறைக்கப்பட்டு மதிக்கப்படும—

உதாரணமாக 1989–12–31 ஆம் திகதி 40 வயதை பூர்த்தி செய்துள்ள விண்ணப்பதாரி ஒருவர் குறைந்தபட்சம 5 வருடங்கள் தொடர்ந்து பணியாற்றி இருப்பாராயின் வயது 35 வருடங்கள் என மதிக்கப்படும—

விண்ணப்பதாரர்கள் கல்வி தொழிற் தகைமைகள் அடிப்படையில் (01) – சாதாரண (02) – தொழில் முறைக்குரிய (03) – விசேட நெறிகளுக்கு வகுக்கப்படுவர்—

சாதாரண ஆசிரியர் நெறியினைச் சேர்பவர்களுக்கு ஆரம்ப மற்றும விஞ்ஞான கல்வித் தகைமைகள் இருக்க வேண்டும—

ஆரமபம்— ஜீ சி ஈ உயர் தரத்தில் யாதேனும் 3 பாடங்களில் ஒரே தவணையில் சித்தி பெற்றிருக்க வேண்டும—

விஞ்ஞான/கணிதம— க பொ த உயர்தரத்தில் 3 விஞ்ஞான பாடங்களில் ஒரே தவணையில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும—

விசேட தகைமைகள் பெற்றிருப்பின் உயர்தர சித்தி இல்லாதிருப்பினும் கல்வி அமைச்சினால் ஏற்றுக் கொள்ளப்பட்ட கொள்கைக்கிணங்க ஜீ சீ ஈ சாதாரண தரத்தில் சித்தி பெற்றுள்ளவர்களும விண்ணப்பிக்கலாம—

* (1) நுண்கலை – (2) மனையியல் – (3) விவசாயம் (4) தொழில்நுட்பப் பாடங்கள் தொழில் முறைக்குரிய நெறிக

## கரும் பனி சொரியும்

—எஸ். எஸ். தேவசிகாமணி—

தலைப்பாகை இறுகக் கட்டி
தடதடக்கும குளிர் போக்க
விலையடக்க "பீடி" பற்றி
விரைகின்றார் பிரட்டுக்களம
மலைபடுத்த முகிற் கூட்டம
மனித நட மாட்டம கண்டு
குலைநடுக்கம கொண்டன போல்
குவிந்து மெல்ல நழுகுது காண்!

★

ஈரப் பனித் துளிகள்
ஆரம போல் முத்தடுக்க
சோரம போய் புல்லினங்கள்
சேர்ந்து வழி படுத்திருக்க
தூரத்தே கணக்கப் பிள்ளை
தரை கொடுத்த "செக்ரோல்" துண்டு
வாராந்த வேலை கொண்டு
வருகின்றார் விடுவிடென்று

★

அணிவகுத்த முண்டாஸ் தலை
அடுத்தடுத்து நடை பயில
பணி செய்தும நாள்தோறும
பஞ்சமன்றி வேறறியா

## முஸ்லிம் இளைஞர்கள் அரசியலில் பங்கேற்கலாமா?

"முஸ்லிம் இளைஞர்கள் சமகால அரசியலில் பங்கேற்கலாமா? சமுதாய மட்டத்தில் இது சாதகமாகுமா? அன்றி பாதகமாகுமா?"

இப்படியொரு கேள்விக்கு "முஸ்லிம இளைஞர்கள் வந்தும வராததுமாக ஆரமபத்தில் அரசியலில் பங்கேற்பது அவ்வளவு பொருத்தமுடையதாக இல்லை" என பதில் அளிக்கப்பட்டது—

"முஸ்லிம இளைஞர்கள் ஆரம்பத்தில் தங்களுக்கென ஒரு ஸ்திரமான வாழ்க்கையை அமைத்துக் கொள்ள வேண்டும படிப்பு – தொழில் என்று ஒரு இலக்கினை அடைந்து விட்ட பின் அரசியல் பங்களிப்பு பற்றி சிந்திக்கலாம" என்று பதில் சொல்லப்பட்ட அதே பேச்சாளரால் தொடர்ந்து ஆலோசனையும கூறப்பட்டது—

அந்தப் பேச்சாளர் யார் தெரியுமா?

நீண்டகாலமாக பொலீஸ் துறையில் உயர் பதவிகளை அலங்கரித்தவரும சில காலம சென்னையில் இலங்கை ஹைகமிஷன் சிறப் பதிகாரியாகப் பணியாற்றியவரும நடந்து முடிந்த பொதுத் தேர்தலில் திகாமடுல்ல தொகுதியில் ஐக்கிய தேசிய கட்சியின் வேட்பாளராகத் தேர்தல் களத்தில் குதித்தவருமான பொலீஸ் அத்தியட்சகர் ஜனாப் எம அப்




துல் மஜீத்தான் அவர்!

அகில இலங்கை முஸ்லிம லீக் வாலிப முன்னணிகளின் சம்மேளனம முஸ்லிம சமுதாயத்திற்குப் பயன்தரவல்ல தலைப்புக்களில் அரசியல் பிரமுகர்களையும சமூகப் பெரியார்களையும் அழைத்து கடந்த காலங்களில் சிறப்புச் சொற்பொழிவுகளை ஆற்றும சிறப்புக் கூட்டங்களை அதன் தலைமையக மண்டபத்தில் தொடர்ச்சியாக நடத்தி வந்ததை பலர் அறிவர்—

சில மாதங்களாக நின்று விட்ட இச்சேவையை இவ்வரு

எரியும பிரச்சினைகள் எல்லாப் புறங்களிலும ஏராளமாகவும தாராளமாகவும எரிந்து கொண்டிருக்கும ஒரு இக்கட்டான காலப் பிரிவில் பொலீஸ் துறையைச் சேர்ந்த – அதுவும அரசு தரப்பு இரகசியங்களை புதையலாகப் பூட்டி வைத்து காக்க வேண்டிய ஒரு பொறுப்பு வாய்ந்த பொலீஸ் அத்தியட்சகர் ஒரு சமுதாயத்தின் வாலிபப் பேரணியின் அரசியல் பங்களிப்புகள் பற்றியும அதன் சிறந்த தலைமைத்துவத்திற்கான வழி நடத்தல் குறித்தும பேசுவதென்பது ஒரு கூர்வாளின் மீது நடக்கும கொடிய பயங்கரமல்லவா?

பெப்ரவரி 7ஆம திகதி புதன் கிழமை பொன்மாலைப் பொழுதில் மஃரிப் தொழுகையை அடுத்த சமமேளனத்தின் தலைவர் ஜனாப் பரீத் சின்ன லெவ்வை தலைமையில் நடந்தேறிய பிரஸ்தாப கூட்டத்தில் இந்த கொடிய பயங்கர சங்கடத்தை தன் பேச்சின் முன்னுரையாக விளக்கினார்—

சிறப்புச் சொற்பொழிவாளர் அன்று சிந்திய கருத்துக்கள் இன்றைய நம சமுதாயத்திற்கு – குறிப்பாக நம இளைய சமுதாய இஸ்லாமிய இதயங்களுக்கு மிகவும பயன்தரவல்லன என்பது முஸாபிர் பிடித்த மனத்தராசின் தீர்ப்பு— அதனால் இவ்வாரம முஸ்லிம இளைஞர்களின் சிறந்த தலைமைத்துவத்திற்கான வழி நடத்தலை நோக்கிச் செல்லும அரசியல் பங்களிப்புகள் மீது முஸாபிர் வெளிச்சமிட விழைவு கொள்கிறார்—

இஸ்லாமிய தலைமைத்துவம பற்றி முஸ்லிம சமுதாயத்தின் சகல மட்டங்களிலும ஒருவித ஆர்வம அலைமோதும இவ்வேளை பொறுப்புமிக்க அந்த பொலீஸ் அத்தியட்சகர் என்ன சொல்கின்றார் எனப் பார்ப்போமா?

"இனப் பிரச்சினையும அது

முன் வைத்து எவரையும தாக்காமல் மிகவும நிதானமாக வார்த்தைகளை அளந்து அறிந்து வெகு சாமர்த்தியமாகப் பேசி சபையோரைக் கவர்ந்த ஜனாப்மஜீத் என்ன பேசினார் தெரியுமா?

இரண்டு நாட்களுக்குப் பின் "அமமா உங்களுக்கு போன் வந்திருக்கு" என்று பியோன் சுந்தரம சொன்னதும ஷோபனா பாடத்திற்குரிய பயிற்சியை செய்யும் படி பிள்ளைகளுக்குக் கூறி விட்டு அதிபரின் அறை நோக்கி நடந்தாள்

"ஹலோ ஷோபனா!"

"யெஸ் ஸ்பீக்கிங"

"நான் அருண் — அவசரப் பட்டு போனை கீழே வச்சிடாதேங்கோ. நான் உங்ககிட்ட சில விஷயங்கள் பேசணும. ப்ளீஸ் வாரீங்களா?

என்ன செய்வதென்று புரியாமல் வகுப்பை நோக்கி நடந்தவள் ஸ்கூல் விட்டதும நேராக "டிரைவ்–இன்"னை அடைந்தாள். இரண்டு கூல் ரிங உடன் அருண் இருப்பதைக் கண்டவள், அவனது மேசையை நோக்கி நடக்க ஆரமபித்தாள்.

"என்ன விஷயம? சீக்கிரம சொல்லுங்கோ... நான் போகணும" என்றாள் ஷோபனா.

"ஓகே... ஓகே... நான் விஷயத்திற்கு வாறன்.முதலில் இந்தப் பெட்டியைத் திறந்து பாருங்கோ".

"என்ன இது?" என்று கேட்டாள் ஷோபனா. "திறந்துதான் பாருங்கோவன்" என்றான் அருண்.

"பெட்டியைத் திறந்தவள், "இது உங்களுக்கு எப்படி!?" என்று ஆச்சரியத்துடன் இருக்கையை விட்டு எழுந்தாள்.

"உங்களுக்கு இவை எப்படிக் கிடைத்தது?"

"அன்றைக்குப் போகிற அவசரத்தில் அடைவு துண்டைக் கீழே விழுந்திட்டீங்க... நல்ல நேரம அது என் கைக்குக் கிடைத்தது. எனக்கும நன்கு தெரிந்த அந்த அடைவு கடைக்காரனிடம விவரங்களை எல்லாம சொல்லி நகைகள் எல்லாவற்றையும எடுத்து விட்டேன். இனியாவது என்னை ஏற்பீங்களா? அது மட்டுமல்ல உங்ககிட்ட ஒரு சதமும சீதனமாக எடுப்பதில்லை என்று உங்களை முதன் முதலாகப் பார்த்த போதே முடிவு செய்து விட்டேன். என்னுடன் அடைவு

(24 ஆம பக்கம பார்க்க)

# முஸ்லிம் இளைஞர்கள்...

(15ஆம் பக்கத் தொடர்ச்சி)

நபிகள் நாயகம (ஸல்) அவர்கள் நடைமுறை சாத்தியமான வாழ்வுக்கு எல்லாத் துறைகளிலும முன்மாதிரியாக வாழ்ந்தவொரு வள்ளலார்— சமுதாயத் தொண்டராகவும அரசியல் தலைவராகவும் வாழ்ந்து காட்டிய வழிகாட்டி நம் நபி– இந்த நபியை நம வாலிபர்கள் சரிவர பின்பற்ற வேண்டும–

"நமது நபி என்ன செய்தார்கள்? தன் சமுதாய மக்களுக்கு ஆரமப காலத்திலேயே சமுதாய பொது சேவை செய்வதற்காக புறப்பட்டார்கள்– அதிலே அல்–அமீன் நம்பிக்கையின் நாயகர் என்ற பட்டமும பெற்றார்கள்– அவர்களை நாடி எல்லாப் பதவிகளும் தலைமைத்துவங்களும் வர இந்த சமூக சேவையே காரணமாயிற்று–

முஸ்லிம இளைஞர்கள் அரசியல் பங்களிப்புக்கள் பற்றி சிந்திக்கும முன் தான் சார்ந்த சமுதாயத்தின் தன்னைச் சூழவுள்ள அக்குமபத்தது முஸ்லிமகளின் தேவைகள் குறித்து சிந்திக்க வேண்டும்– அவற்றை பூர்த்தியடையச் செய்வதற்கு தான் செய்ய வேண்டிய கடமை என்னவென்று சிந்தித்துத் தெளிந்து அதன்படி நடக்க வேண்டும்–

"தலைமைத்துவம உருவாகுகின்றதா? உருவாக்கப்படுகின்றதா? என்பது சர்வதேச மட்டத்திலும இன்னும தீர்ப்பு வழங்க முடியாத வாதப் பிரதிவாதங்களாகவே தொடர்ந்து வருகிறது– ஆனால் இஸ்லாம கூறிய வழியில் இறைநபி காட்டிய ஒளியில் ஒவ்வொரு முஸ்லிமும வாழ்ந்து நடத்தும்–

வந்தால் சிறந்த தலைமைத்துவம் சமூகத்தை வலிய வந்து வழி

இவ்வாறு ஜனாப் எம ஏ மரீத் அழகாகப் பேசி முடித்தார்– தொடர்ந்து சபையோரால் சில வினாக்கள் தொடுக்கப்பட்டன– அவற்றுக்கு பேச்சாளர் எப்படியோ பதிலளித்து சமாளித்தார்–

ஆனால் கேள்வியும பதிலும முஸாபிருக்கு பிடிக்கவில்லை– எப்போதும் இப்படியான கருத்துரையைத் தொடர்ந்து எழுப்பப்படும வினாக்கள் பேச்சோடு தொடர்புடையனவாய் இருக்க வேண்டும அதை விடுத்து வழிதப்பிய கேள்விகளை முன் வைத்தால் ஒரு பொறுப்புள்ள அதிகாரி நறுக்கு தெறித்தாற் போல் சட்டென எப்படி பதில் சொல்ல முடியும? பேச்சாளர் என்ன "சிந்து"வின் திரிஞானியா?

உர்தூ கவிஞர் அல்லாமா இக்பால் "பாலை பாருங்கள்– பாலை தரும பாத்திரத்தை பார்க்காதீர்கள்" என்று கூறியது போல சன்மார்க்க இதயங்கள் பொலீஸ் அத்தியட்சகரை மறந்து விட்டு அவர் கூறிய கருத்துக்களை அசை போடுவது நலம– சிந்தித்து – தெளிந்து செயல் புரிவோம– சாதக பாதக கருத்துக்களை முஸாபிர் மூலம கலந்துரையாடி கரை சேர நிறைவழி காண்போம– சிந்திப்போம வாருங்கள்–

# தொண்டர்...

(15ஆம் பக்கத் தொடர்ச்சி)

* விளையாட்டும உடற்கல்வியும– ஜீ சி ஈ சாதாரண தரத்தில் 6 பாடங்களில் சித்தி பெற்றிருப்பதோடு விளையாட்டுத்துறையில் தேசிய மட்ட போட்டிகளில் 1 – 2 அல்லது 3 ஆவது இடமொன்றைப் பெற்றிருக்க வேண்டும்–

* தோட்டப் பாடசாலை– தமிழ்மொழி – கணிதம உட்பட 6 பாடங்களில் இரண்டுக்கு மேற்படாத தவணையில் ஜீ சி ஈ சாதாரண தரப் பரீட்சையில் சித்தி பெற்றிருக்க வேண்டும–

தொண்டர் ஆசிரியர்கள் 1000 ரூபா கொடுப்பனவு அடிப்படையில் பயிலுனர் ஆசிரியர்களாக தற்காலிகமாக நியமிக்கப்படுவர்–

நான்கு வருட காலத்துக்குள் கல்வி அமைச்சு தீர்மானிக்கும பாடவிதானத்துக்கமைய நடத்தப்படும் பயிற்சிகளிலும பரீட்சைகளிலும சித்தி பெற்றால் வெற்றிடங்கள் ஏற்படுவதற்கேற்ப நிரந்தர ஊழியர் எண்ணிக்கையில் சேர்த்துக் கொள்ளப்படுவர்–

இதனால் இவர்கள் விரக்தி நிலைக்கே தள்ளப்படுகின்றனர்– மலையக தொண்டர் ஆசிரியர்களுக்கென்றே முன்னர் வயது 35 ஆக அதிகரிக்கப்பட்டது– எனினும அவர்கள் புறக்கணிக்கப்பட்டுள்ளனர்–

இவர்கள் விடயத்தில் கல்வி அமைச்சு முன்னுரிமை அளித்து விமோசனம் வழங்குவது அவசியமும அவசரமுமாகும–

(த—ந)

## மாயக் கண்ணாடி

(19 ஆம பக்கத் தொடர்ச்சி)

மாயக் கண்ணாடியின் சொந்தக்காரியான இளவரசிதான் அக் கப்பலில் அலஙகரமாய் அமர்ந்திருந்தாள், குபேரத் தீவின் அரசர் அவளை அடையாளம கண்டு கொண்டார், தக்க மரியாதையுடன் முகமன் கூறி வரவேற்றார், தன் தீவிற்கு வந்து விருந்துண்டு செல்ல அன்புடன் அழைத்தார் இளவரசியை,

மன்னிக்க வேண்டும அரசே. நான் எஙகும இறங்கும் நிலையில் இப்போதில்லை, என் மாயக் கண்ணாடி களவாடப்பட்டு விட்டது– அத்துடன் என் அழகிய வைர மோதிரமும காணவில்லை, அந்த மோதிரம யாரிடமுள்ளதோ அவரே என் கணவர் ஆவார்,

அவரைத்தான் நான் மணக்க வேண்டும. அவரைத் தேடிக் கண்டு பிடிக்கும வரை எனக்கு எந்த விருந்துமில்லை எவ்வித ஓய்வுமில்லை, என திண்ணமாய்க் கூறினாள் இளவரசி.

"அவ்விதமென்ல் கவலையே வேண்டாம இளவரசி. இதோ உஙகள் வைர மோதிரம என்று தன் விரலில் அணிந்திருந்த மோதிரத்தைக் கழற்றி இளவரசியிடம அளித்தார்,

"ஓ நான் மிகவும பாக்கியசாலி, இத்துணை இளமையும எழிலும செல்வமும படைத்த நீங்கள் தான் என் கணவர், என்றெண்ணும போது என் உள்ளமும, அஙகமும் பூரிக்கின்றன, இனி அந்த மாயக் கண்ணாடியைப் பற்றிக் கவலை இல்லை, எனக்கு நீஙகள் கிடைத்தால் போதும, என மன மகிழ்ச்சியுடன் கூறி குபேரத் தீவின் அரசரை கட்டித் தழுவிக் கொண்டாள் இளவரசி,


குபேரத் தீவில் அவர்களது திருமணம வெகு கோலாகலமாக நடந்தது– அனைவரும இன்ப வெள்ளத்தில் மூழ்கி ஆனந்தக் கடலில் மிதந்தனர்.

தன்னை ஏமாற்றிய தனது இரு சகோதரர்கள் ஆட்சி செய்யும நாட்டின் மீது படை எடுத்த குபேரத்தீவு அரசர் அவர்களை அடிபணிய வைத்து தனது தந்தைக்கும உண்மையை உணர்த்தினார்,

தன்னமபிக்கையாலும, விடா முயற்சியாலும, கடின உழைப்பாலும உதவாக் கரையெனக் கருதப்பட்ட இளவரசர் குபேரத் தீவின் அரசராகி இனிது வாழ்ந்தார்.

(த)

# வீட்டிலே வளரும் சிங்கக் குட்டி





— ஏ. எஸ். புல்கி. —

[புத்தளம நிருபர்]

கானகத்துக்கு அரசன் சிங்கம் அப்படிப்பட்ட ஒரு காட்டு ராஜா புத்தளத்தில் வீட்டுப் பிராணியாக வளர்கிறது.

புத்தளம் நகரிலிருந்து கொழும்புப் பாதையில் 15ஆம மைலுக்கருகில் உள்ளது "நவண்டங்குளம்" என்னும் கிராமம். அங்கு "கல்ச்சர் பிரைவேட் லிமிட்டட்" என்னும் கம்பனியின் இறால் வளர்ப்புப் பண்ணை இருக்கிறது.

தெஹிவளை மிருகக் காட்சி சாலையிலிருந்து இந்த ஆண் சிங்கக் குட்டியை தத்தெடுத்தார் மேற்படி நிறுவனத்தின் அதிபர்

பிறந்து சில நாட்களே ஆன சிங்கக் குட்டியை வளர்க்கும பொறுப்பு டி எம குணதிலக்கவிடம ஒப்படைக்கப்பட்டது.

இந்தக் குட்டியின் தாய் ஆபிரிக்கா தேசத்தை சேர்ந்தது. தெஹிவளை மிருகக் காட்சி சாலையில் இருக்கின்றது.

இரண்டு வருடங்கள் சிங்கக் குட்டியை பராமரித்து வளர்த்த பின்பு மீண்டும மிருகக்காட்சி சாலைக்கே ஒப்படைக்க வேண்டும என்ற நிபந்தனையின் பேரில் இந்த சிங்கக் குட்டி ஒப்படைக்கப்பட்டிருக்கிறது.

சிங்கக் குட்டிக்கு "ரொக்கி" என்று பெயர் சூட்டப்பட்டுள்ளது

அதற்கு குணதிலக்காதான் உணவு வழங்க வேண்டும. குளிப்பாட்டி விட வேண்டும. அதனோடு விளையாடவும் வேண்டும.

ரொக்கியின் பிடரி மயிர் தற்போதுதான் வளர ஆரமபித்துள்ளது. இது முற்றாக வளர்ந்து முழுமையான சிங்கமாக மாற குறைந்தது இரண்டு வருடங்கள் பிடிக்குமாம்.

தினமும 4 கிலோ மாட்டிறைச்சி அல்லது 2 பெரிய கோழிகளை விழுங்கி ஏப்பம விடுகின்றது ரொக்கி. அத்துடன் தினமும விட்டமின் வில்லைகளும கொடுக்கப்படுகின்றன.

மாதா மாதம் பூச்சி மருந்தகளும மூன்று மாதத்துக்கு ஒரு முறை தொற்றுநோய்கள் ஏற்படா வண்ணம ஊசி மருந்தும ஏற்றப்படுகின்றது.

ஒரு நாள் விட்டு ஒருநாள் ரொக்கியை குளத்துக்கு அழைத்து சென்று நீந்தி விளையாட விட வேண்டும. குளத்தில் குளிப்பதென்றால் ரொக்கிக்கு அலாதி இன்பம.

பண்ணையில் தொழில் புரியும ஊழியர்களுடனும சிறுவர்களுடனும ரொக்கி மிகவும அன்பாகவே பழகுகின்றது.

ஆனால் ஆடு — மாடுகளைக் கண்டால் அதன் பிறவிக் குணத்தைக் காட்டவே செய்கின்றது.

"ரொக்கியுடன் வெகு அன்பாகப் பழகி விட்டேன். 2 வருடங்களின் பின் திருமபவும மிருகக்காட்சிசாலையில் அதை ஒப்படைக்க வேண்டும என்ற நிபந்தனை எனக்கு மனக் கவலையைத் தருகிறது" என்று கண்ணீர் மலகக் கூறினார் குணதிலக்கா.

(ம—241)

சிங்கக் குட்டி ரொக்கியைக் குதூகலமாக வளர்க்கிறார் குணதிலக்க.

(ம)

## இலங்கை வரலாற்றுச் சங்கம்

வரலாற்றுக் கல்வியை விருத்தி செய்ய சரித்திரவியலாளர்களை ஒன்றிணைக்கும சங்கம ஒன்றை உருவாக்க வேண்டும என்ற தேவை உணரப்பட்டுள்ளது.

பாடசாலை மட்டத்தில் வரலாறு கற்றல் கைவிடப்பட்டதன் விளைவாக பல்கலைக்கழக மட்டத்திலும வரலாறு பயிலும மாணவர்களின் தொகை குறைகின்ற காரணத்தால் இது விசேடமாக முக்கியத்துவம வாய்ந்தது.

கொழும்பு பல்கலைக்கழக வரலாற்றுப் பிரிவில் அண்மையில் நடைபெற்ற ஆரமப கூட்டம ஒன்றில் சரித்திரவியலாளர் குழுவினர் இலங்கை வரலாற்றுச் சங்கம ஒன்றை ஏற்படுத்தினர்

இச்சங்கம வரலாற்று ஆராய்ச்சியை மேமபடுத்தல், சரித்திரவியலாளரிடையே நெருங்கிய தொடர்புகளை விருத்தி செய்தல் வரலாறு கற்பதற்கான விருப்பத்தை ஊக்குவித்தல் ஆகிய நோக்கங்களைப் பிரதானமாகக் கொண்டுள்ளது.

இலங்கை வரலாற்றுச் சங்கத்தின் ஆலோசனைச் சபைத் தலைவர் பேராசிரியர் கே டபிள்யூ குணவர்த்தன, செயலாளர் பேராசிரியர் ஜி பீ வீ சோமரட்ன, பொருளாளர் பேராசிரியர் திலக் ஹெட்டியாராச்சி, பதிப்பாசிரியர் பேராசிரியர் டபிள்யூ ஐ சிறிவீர. 7 பேர் அடங்கிய செயற்குழுவும தெரிவு செய்யப்பட்டது.

(ம)

## நரபலி தந்தால் தேர்தலில் வெற்றி



# தேர்தலில் வெற்றி

மனித இரத்தத்தை அருந்தி மனித மாமிசத்தை புசிப்பவர்கள் இப்போதும ஆபிரிக்காவின் சில பாகஙகளில் வாழ்ந்து வருகிறார்கள், இமமக்களுக்கு மந்திர தந்திரம, பில்லி சூனியம என்பவற்றில் நமபிக்கை மிக அதிகம,

மேற்கு ஆபிரிக்காவின் பல பகுதிகளில் வாழும மக்கள் ஜு ஜு மந்திரதந்திரஙகளில் அசைக்க முடியாத நமபிக்கை வைத்திருக்கின்றனர். சமீபத்தில் கூட சில ஆபிரிக்கர்கள் ஒரு சிறுமியைக் கொன்று பாதி உடலைச் சமைத்துச் சாப்பிட்டார்கள்,

உள்ளூர் தேர்தலில் போட்டியிடும தமது வேட்பாளர் வெற்றியீட்ட வேண்டும என்பதற்காக ஜு ஜு மந்திர விதிகளின்படி இந்த நரபலி அரஙகேறியதாம.

இததொடர்பாக ஒன்பது பேரை பொலீஸார் கைது செய்துள்ளனர், இந்தியாவிலேயே இப்படியான சமபவஙகள் நடைபெறும போது ஆபிரிக்காவைக் கேட்பானேன்!

(த-032)

# டெலிவிஷன்

11—3—1990

## ரூபவாஹினி

3600 ஜிலெட் வேல்ட் ஸ்போட்ஸ் ஸ்பெஷல்
4-00 "ராசர"
5-00 புத்துஹர
5-30 மஜ்லஸுல் இஸ்லாம
6-00 முமமணிகளுக்கு அஞ்சலி
6-15 பியுஷர் அட்ரக்ஷன்ஸ்
6-30 செய்திகள் - தமிழ்
6-55 பொன்மாலைப் பொழுது
7-25 ஸ்மோல் வொண்டர்
8-00 செய்திகள் - சிஙகளம
8-30 நந்தன விந்தன
9-00 "செவன விமன"
9-30 செய்திகள் - ஆஙகிலம
10-00 உலக கிண்ண கிரிக்கெட் (இலஙகை - அவுஸ்திரேலியா பெப் 1990)
10-50 ஒளிபரப்பு முடிவு

## ஐ. டி. என்.

11-00 "வோல்ட்ரன்"
11-30 "என்ட்ரி லிப்ரிரீ
12-00 வண்ணப்பூக்கள்
12-30 விச்சித்திர கீத்த
1-00 முத்துச்சரம
1-30 நீந்தத் தெரியாத மீன்கள் - நாடகம
1-45 ஒளிபரப்பு முடிவு

சேவை — II

5-00 புட்போல் மேட் இன் ஜெர்மனி
6-00 முமமணிகளுக்கு அஞ்சலி
6-15 கப்டன் குக்ஸ் டிரவலஸ்
6-30 ரசமியுரு
7-00 "சுப பிரார்த்தனா"
7-30 வெரயிட்டி பெயார்
8-00 "சனிதா வாசனா"
8-30 செய்திகளும கருத்துகளும
9-00 சுவிரச மிஹிர
9-30 "டெரிக்"
10-00 செய்திகள் - ஆஙகிலம
10-20 டெரிக் - தொடர்ச்சி
10-45 ஒளிபரப்பு முடிவு


BUNTY மின்ட்! BUNTY பைன் அப்பிள்!
BUNTY மங்கோ! BUNTY பனனா!

கையும் பையும் நிறைய பரிசுகளை அள்ளிக்கொண்டு வருகிறார்கள் இந்த இனிய நண்பர்கள்!

சோனி வோக்மன்கள், கொடாக்கேமராக்கள், 1000 சூப்பர் BUNTY பைகள்! நான்கு மாதாந்த சீட்டிழுப்புகள் ஒவ்வொன்றிலும் நீங்கள் இந்தப் பரிசுகளை வெல்ல முடியும். BUNTY பரிசுப் போட்டியில் இந்த பெறுமதி மிக்க பரிசுகளை நீங்கள் வெல்வது எப்படி? இதோ அதற்கான வழி!







BUNTY பரிசுப் போட்டி

20 BUNTY உறைகள் அனுப்பப்பட்டுள்ளன

பெயர்: ______

முகவரி: ______

அண்மையில் உள்ள

பெரியநகரம்: ______

விற்பனையாளர்கள் பெயர் முகவரி: ______

(BUNTY வாங்கப்பட்ட இடம்)

நான் இத்துடன் 20 BUNTY உறைகளை இணைத்து அனுப்பியுள்ளேன்.

ஒப்பம்



விதிகள்

20 BUNTY உறைகளைச் சேர்த்து, இத்துடன் இணைக்கப்பட்டுள்ள கூப்பனுடன் வைத்து அனுப்பவும்.

மேற்சொன்ன விதத்தில் எத்தனை கூப்பன்களையும் (20 உறைகளுடன்) நீங்கள் அனுப்பமுடியும். ஆனால், அவை வெவ்வேறு கடித உறைகளில் வைத்து அனுப்பப்படுதல் வேண்டும்.

இந்தப் போட்டியில் நீதிபதிகளின் முடிவு இறுதியானது. கடிதப்போக்குவரத்து எதுவும் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

20 BUNTY உறைகளைக் கொண்ட உங்கள் கூப்பனை கீழேயுள்ள முகவரிக்கு அனுப்பி வைக்கவும்!

BUNTY பரிசுப் போட்டி,
த.பெ. இல. 1225, கொழும்பு.

கூப்பன்கள் அனுப்புவதற்கான கடைசி திகதி 30 ஜுன் 1990.

எட்ஜு குரூப் மற்றும் கிரான்ட் பொஸல் இன்டர்நசனல் ஆகிய நிறுவனங்களைச் சேர்ந்த ஊழியர்களும், அவர்களது நெருங்கிய குடும்ப உறுப்பினர்களும் இப்போட்டியில் பங்குபற்ற தகைமையற்றவர்களாவர்.

வெற்றி பெறுபவர்களின் பெயர்கள் 1990 ம் ஆண்டு ஏப்ரல், மே, ஜுன், ஜுலை ஆகிய மாதங்களில் டெய்லி நிவ்ஸ், தினமின மற்றும் தமிழ் பத்திரிகைகளில் வெளியிடப்படும்.

சின்னஞ் சிறுசுகளின் இனிய நண்பன் BUNTY

MOTHER & CHILD




# சிடு சிடுப்புக் குணத்துடன் குழந்தைகள் வளரலாமா?

## பெற்றோர் அவதானமாக இருக்கவேண்டும்



முல்லைப் பூவின் சிரிப்பு
என் உதட்டில் தவழுவது
ஏன் என்று சொல்வா?
அள்ள அள்ளக் குறையாத
அன்பை அள்ளித் தரும்
அம்மா எதிரில் நிற்பது தான்!
— ருபேந்திரன்

"மழலைகள்" என்றால் இப்பாருலகில் மகிழாதோர் இல்லை. இம்மழலைகள் எந்நேரமும் மகிழ்ச்சியோடும் ஆரோக்கியத்தோடும் இருக்கும் வகையில் பார்த்துக் கொள்ள வேண்டும்.

ஒரு ஆடவனுக்கும் ஒரு பெண்ணுக்கும் உள்ள அன்பு விகந்து விட்டதை வெளிப்படுத்தும் சின்னமாக திகழும் ஒரு குழந்தை அப் பெற்றோரின் நடத்தைகளை ஒட்டியே வாழப் பழகிக் கொள்கிறான்.

இந்த வகையில் நீண்ட ஆயுளுடன் வாழ மன மகிழ்வும் ஒரு கோளாக மிளிர்கின்றது. எனவே தான் பெற்றோர், "ஐந்தில் வளையாதது ஐம்பதில் வளையுமா?" என்ற பழமொழிக்கொப்ப மிகவும் சிறு பராயந்தொட்டே அக்குழந்தைகளை மகிழ்வுடன் காணப் பழக்கப்படுத்திக் கொள்ள வேண்டும்.

வளர ஆரம்பிக்கும் போது சில குழந்தைகள் சிடுசிடுப்புடன் காணப்படுகின்றன. நாளடைவில் சிடுசிடுத்தல் என்பது அவனோடு பழக்கமான ஒன்றாக ஒட்டி விடுகின்றது.

இவ்வாறே இவர்கள் பெரியவர்களான பின்னரும் விளங்குகின்றனர்.

சிடுசிடுப்பான குழந்தை — சிடுசிடுப்பான ஆடவன் பெண் இதுதான் உண்மை. எனவே பெற்றோர் இதைக் கவனித்து அவர்களது நிலைமைகளுக்கு ஏற்ப அவர்களது தேவைகளை ஓரளவு நிறைவேற்றி வைப்பதனால் சில சந்தர்ப்பங்களில் வெற்றி கிட்டலாம் அல்லவா?

சில குழந்தைகள் எப்போதும் சந்தோஷமாக இருக்கப் பழகிக் கொள்வார்கள். இதற்குப் பெற்றோர் எதையும் சகிக்கும் மனப்பான்மையுடன் இருக்கும் வழக்கமதான் என்றாலும் சந்தேகமில்லை!

இவர்களைப் பிறர் தொந்தரவு பண்ணினாலும் கூட அவர்கள் சிரித்துக் கொண்டேயிருப்பர்.

இப்பழக்கம் மிகவும் வரவேற்கத்தக்கது. சிரிப்பதனால் முகத்தசைகள் வலுவடைகின்றன. இதனால் முகம் பொலிவுடன் திகழும்... அதேவேளை கவர்ச்சிகரமாகவும் காணப்படும்.

பொதுவாகக் குழந்தைகள் கண்ணாடியின் பிரதி பிம்பம் எனலாம். ஆம்! அவர்கள் தங்களது வெள்ளை உள்ளம் படைத்த பிஞ்சு உள்ளத்தில் செய்கைகளின் பிரதிபலிப்புக்களை அப்படியே தெட்டத் தெளிவாகக் காட்டுவர்.

எனவேதான் அவர்களைப் பயிராக இருக்கும் போது நல்ல அறுவடையைப் பெறும் விதத்தில் பெற்றோர் தம் செல்வக் குழந்தைகளிடத்தில் மகிழ்ச்சிகரமான மனப் பக்குவத்தை விதைக்க வேண்டும்.

இவ்வகையில் நேசமனப்பான்மையும் தோழமையும் உன்னத பெரும்படைப்புக்களாக விளங்குகின்றன.

தத்தம் வீடுகளில் வெறுப்போடு எந்நேரமும் சிடுசிடுப்போடு இருக்கும் ஆடவர்களும் பெண்டிர்களும் தங்களது மகவுகளின் மகிழ்ச்சிக்குப் பங்கம் விளைவிக்கின்றனர்.

மகிழ்ச்சியான சூழலில் வளர்க்கப்படும் சிறு குழந்தை வளர்ந்து பெரியவனான பின்பும் அவ்வகையில் அவன் அனைவரையும் தன் ஆளுமையினால் நன் மதிப்பைப் பெறும் வண்ணம் கவர்ந்து கொள்கிறான் என்பதில் ஐயமே கிடையாது.

பொதுநோக்கில் மழலைகளின் முழு மகிழ்ச்சியும் பெற்றோரின் தோழமையிலேயே தங்கியுள்ளது.

இதை உணராத சில பெற்றோர் தொழில் நிமித்தம் காரணமாக காலையில் போய் மாலையில் வந்து தங்கள் பிஞ்சு உள்ளங்களின் மகிழ்ச்சியைக் கருதாது வேலைக் களைப்பை போக்கும் வகையில் நித்திரை செய்கின்றனர்.

இங்கு அப் பிஞ்சு உள்ளங்கள் பெற்றோரின் அன்பைப் பெற ஏக்கம் இருக்கும் போது கூட பெற்றோருக்கு நேரம் கிடைப்பதில்லை.

இதனால் அவ்வுள்ளங்களின் மகிழ்ச்சிக்குத் தடை ஏற்பட்டு மனம் உடைந்து விடுகிறது.

எனினும் அக்குழந்தைகளுக்கு நிலையான அன்பையும் மகிழ்ச்சியையும் பெறும் வகையில் பெற்றோர் உறவினர்களிடம் விட்டு விட்டுச் சென்றாலும் தவறில்லை.

---

# சீதனம் கேட்டு

## அன்பு மனைவியை

# வருத்தினால்

## தப்ப முடியாது!

வரதட்சணையாக மனைவியிடம் பங்களா கேட்ட கணவனுக்கு தமிழ்நாட்டில் ஒரு ஆண்டு ஜெயில் தண்டனை விதிக்கப்பட்டது. கொடுங்கையூரைச் சேர்ந்த கோதண்ட நாயக்கரின் மகள் வத்சலா (வயது 22)வுக்கும் வருக்கும் 10-2-88இல் திருமணம் நடந்தது. திருமணத்தின் போது 15 பவுன் நகை போட்டார்கள். சோலைவாயல் என்ற கிராமத்தில் 2 கிரவுண்ட் நிலமும் பெண் பெயருக்கு எழுதி வைக்கப்பட்டது.

3 நாட்கள் கூட கணவன் மனைவியாக குடும்பம் நடத்தவில்லை. அதற்குள் வரதட்சணை கொடுமை தாண்டவமாடத் தொடங்கியது. கணவன், மாமனார், மாமியார் மைத்துனர் ஆகியோர் சேர்ந்து ஒவ்வொருவராக கொடுமைப்படுத்தினார்கள். பெற்றோரிடம் பணம் வாங்கி வரும்படி மிரட்டினார்கள்.

ஒரு நாள் மனோகரன் தன் மனைவியிடம் "உன் பெயரில் உள்ள நிலத்தை விற்று பணமாகக் கொண்டு வா, அண்ணா நகரில் பங்களா வாங்க வேண்டும்" என்று கூறி வற்புறுத்தினார். மனைவி மறுக்கவே, சித்திரவதைக்கு உள்ளானார். அதைத் தொடர்ந்தே பெற்றோர் வீட்டுக்கு அவர் வந்துவிட்டார்.

இது குறித்து பொலீஸில் புகார் செய்யப்பட்டது. வரதட்சணை ஒழிப்பு உதவி கமிஷனர் துரைராஜ் வத்சலாவின் கணவன் மனோகரன், மாமனார், மாமியார் மைத்துனர் ஆகிய 4 பேரைக் கைது செய்து வழக்கு தொடர்ந்தார்.

இந்த வழக்கை எழும்பூர் மெட்ரோபாலிட்டன் மாஜிஸ்திரேட் ராஜகோபால் விசாரித்தார். மனோகரனுக்கு ஒரு ஆண்டு கடுங்காவல் தண்டனை விதித்து தீர்ப்பு கூறினார். மற்ற 3 பேரும் விடுதலை செய்யப்பட்டனர்.

---

# வீண் கதைகள் வேண்டாம்

பெண்களில் எல்லாப் பெண்களும் ஒரே மாதிரி இருப்பதில்லை, ஒருவருக்கொருவர் வேறுபட்ட குண இயல்புகளை உடையவர்களாகவே உள்ளனர்,

பெண்களில் பெரும்பாலானோர் தேவையற்ற விஷயங்களில் எல்லாம் தலையிட்டு பெண்ணினத்தின் பெருமையை இழக்க முற்படுகின்றனர்,

வீணான கதைகளை உருவாக்கி வீண் வதந்திகளைப் பரப்புவதில் சில பெண்கள் முன்னணியில் நிற்பதை நாம் அன்றாடம் வாழ்வில் காணக் கூடியதாக உள்ளது.

இச்செய்கை தவறானது மட்டுமன்றி மிகவும் ஆபத்தான விளைவை ஏற்படுத்தக் கூடிய செயலுமாகும்.

ஒருவர் எம்மை நம்பி எம்மிடம் வேறு ஒருவரைப் பற்றி அவரிடம் கூற வேண்டாம் என்று ஏதாவது கதைத்தால் அதை நாம் உரியவரிடம் உரைப்பது சரியல்ல,

நாம் இவ்வாறு செயல் பட்டால் நல்ல உறவுடன் வாழ்ந்த குடும்பங்கள் பிளவு படவும் வழியுண்டு, இப்படிப்பட்ட பெண்களின் கதைகளைக் கேட்டு அடுத்தவர்கள் உடனே ஆட்டம் போடக் கூடாது.

தீர விசாரித்து உண்மை எதுவென அறிந்த பின்பே செயலாற்றுதல் முக்கியம்,

பெண்கள் இருக்கும் இடத்தில் பேச்சுக்கள் இருக்கும் என்றார் ஒரு பெரியார்.

இக்கூற்றின் படி பெண்கள் இருக்குமிடத்தில் பேச்சுக்கள் இருக்கத்தான் வேண்டும், ஆனால் அவைகள் எமக்கு சம்பந்தமில்லாத வீணான பிரச்சினைகளுக்கு வழிவகுக்கக் கூடியனவாக இல்லாமல் அதற்கு மாறாக எமது அறிவுத் திறன் வளர்ச்சிக்கு எமது வாழ்க்கைக்கு துணைபுரியக் கூடியக் கூடிய நல்ல கருத்து நிறைந்த கதைகளாக இருக்க வேண்டும்,

அடுத்தவரின் உணர்வுகளுக்கும் மதிப்பளித்தல் வேண்டும். அடுத்தவரின் உணர்வுகளுக்கு மதிப்புக் கொடுக்காது அவர்களின் சுதந்திரத்திற்கு தடையாக நாம் செயல்படக் கூடாது.

எனவே பெண்களாகிய நாம் வீணாக கதைகளை உருவாக்கி உரைப்பதையும்,

புறங் கூறுவதையும், தவிர்த்து அடுத்தவரின் உணர்வுகளுக்கு மதிப்பளிக்கும் பண்புடையவர்களாக வாழ்ந்து பெண்ணினத்தின் பெருமையை பேணிப் பாதுகாப்போமாக,

(த).

---

# பலாத் காரத்துக்கு

அதற்கு மாறாக எமது அறிவுத்

# முகத்தின் அழகு பேண தெரியுமா?

புருவம் முகத்தில் முக்கியமான பங்கு வகிக்கிறது, ஆனால் நிறைய பேர் இதை சுத்தமாக மறந்து விடுகின்றனர்,

எப்படியெனில், புருவம சீரமைக்கும போது ஒரேயடியாக அடர்த்தியாக அல்லது ஒரேயடியாக மெல்லியதாக சரியான ஒழுங்கில்லாத, சீரற்றதாக புருவம் நேர்த்தியாக இருப்பின் அதுவே கண்களுக்கு ஒரு எடுத்துக் காட்டக்கூடியதாகவும முக நேர்த்திக்கு உறுதுணையாக விளங்குகிறது,

புருவம அதன் இயற்கை வடிவத்திலேயே சீரமைத்து புருவ முடிக்கு அடர்த்திக் குறைவான நிறத்தில் ஐப்ரோ பென்சிலால் அழுத்தி வரையாமல் இலேசாக ஓவியம வரைவது போல் தீட்டினால், நேர்த்தியான இயற்கையான வடிவத்தில் நிறத்தில் புருவம அமையும

முகத்திற்கு பௌடர் போடும போது பவுண்டேஷன் நிறத்தை விட குறைந்த நிறமுடைய பௌடர் உபயோகிக்க வேண்டும,

பௌடர் மிகவும மிருதுவாகவும இலேசான தாகவும இருக்க வேண்டும,

வேண்டும, பௌடர் முகத்தின் முடிகளில் ஒட்டிக் கொள்ளும் தன்மை உடையதாகவும பள பளப்பு மிக்கதாகவும் இருக்கக் கூடாது, அதிகப்படியான பௌடரை பஞ்சு மூலம ஒத்தியெடுத்து விட வேண்டும,

ரூஜ் உபயோகிக்கும நோக்கமே நாம நல்ல ஆரோக்கியத்துடன் உள்ளது போல காட்சி அளிக்கவே, கன்னக்கதுப்புகளின் மேல் மேல் நோக்கி பிரஷ் மூலம சமமாகத் தடவினால் ஆப்பிள் கன்னம போன்ற தோற்றம தரும, கன்னம பூராவும தடவக்கூடாது,

கண்களே முகத்திற்கு உயிரோட்டம தருபவை- எனவே கண்கள் பெரியதோ, சிறியதோ நல்ல ஆரோக்கியமான அழகான கண்கள் முகத்திற்குப் புத்துணர்வைத் தருமாறு மையெழுத வேண்டும, மையெழுதும போது கண்களின் அமைப்பைப் பொறுத்து வரைய வேண்டும, ஐஷெடோ உபயோகிக்கும போது நமது ஆடையின் நிறத்திற்கு ஏற்றவாறு அமையவேண்டும, பகலில் அடர்த்தி குறைவாக உபயோகிக்க வேண்டும,

மஸ்காரா போடுவது கண் இமைகளின் முடிகள் நீளமாகவும அடர்த்தியாகவும தெரியவே, சுத்தமான பிரஷ் கொண்டு மஸ்காரா தடவ வேண்டும, இமை முடிகள் ஒன்றோடு ஒன்று ஒட்டிக் கொள்ளாமல் இயற்கைத் தோற்றத்தோடு உள்ளது போல் மஸ்காரா போட வேண்டும்,

லிப்ஸ்டிக் நிறம முகம பிரகாசமானதாகக் காட்டக்கூடியதாக இருக்க வேண்டும, மிகவும் வெளிறிய உலர்ந்த நிறம தவிர்க்கப்பட வேண்டும, நல்ல ஆழ்ந்த பளபளப்பான நிறமுடைய லிப்ஸ்டிக்கைத் தேர்ந்தெடுக்க வேண்டும,

லிப்ஸ்டிக் போடும போது பிரஷ்கொண்டு வெளிக்கோட்டை வரைந்து லிப்ஸ்டிக் போட்டால் நேர்த்தியான உதட்டமைப்போடு லிப்ஸ்டிக்கின் அளவும் சீராகப் பரவி அமையும, லிப் கிளாஸ் போடுவதால் உதட்டின் ஈரப்பசை பாதுகாக்கப்பட்டு உதட்டின் அமைப்பும தூக்கலாகத் தெரியும,

சிறிது ஐஸ் கொண்டு லிப்ஸ்டிக்கின் மேல் வைத்தால் லிப்ஸ்டிக் நீண்ட நேரம அழியாமல் இருக்கும,

(ம-10)

நிலையான அன்பையும மகிழ்ச்சியையும் பெறும வகையில் பெற்றோர் உறவினர்களிடம விட்டு விட்டுச் சென்றாலும தவறில்லை-

ஆனால் வேலைக்காரர்களிடம் விட்டுச் சென்றால் அவர்களுக்கு முழு மனநிறைவு கிடைத்து மகிழ்ச்சி கிடைக்கும என்று நாம எப்படி நமபிக்கை கொள்வது?

ஆகவே மொட்டுக்கள் புஷ்பித்துப் பூக்களாக மலர்ந்து மணம் பரப்புவது போல சிறு பராயத்திலேயே மகிழ்ச்சி எனும மகிமை மிகு விதையை அவர்களது உள்ளமெனும நிலத்தில் விதைத்து வளர்ந்து பெரியவனாகி இப்பூவுலகில் வாழும வரை அறுவடை செய்யக் கூடிய வகையில் அதனைப் பூரணமாகப் பெற வழி செய்ய வேண்டும-

[ம—10]

அவரிடம கூற வேண்டாம என்று ஏதாவது கதைத்தால் அதை நாம உரியவரிடம உரைப்பது சரியல்ல,

நாம இவ்வாறு செயல் பட்டால் புறம கூறிய பாவத்துக்குரியவராக ஆவது மட்டுமன்றி நம்பிக்கைக்கு மோசடி செய்பவராகவும ஆகிவிடுகின்றோம,

எனவே பெண்கள் இவ்வாறும புறம கூறும பழக்கத்தைத் தவிர்த்தல் வேண்டும,

பெண்கள் வேறு யாரைப் பற்றியும துருவித் துருவி ஆராய முற்படக் கூடாது, சில பெண்கள் சில விஷயங்களை இட்டுக் கட்டி கட்டுக் கதையாக கூறும பழக்கமுள்ளவராக உள்ளனர்,

இவ்வாறு பெண்கள் கதைகளை இட்டுக் கட்டி கூறும போது அங்கே வீணான பிரச்சினை ஏற்படுகின்றது,

இதனால் பரஸ்பர நல்லுறவு

# சமையற் கலை

## இறைச்சி போண்டா

**தேவையான பொருட்க்ள்**

கடலை மாவு - கால் கிலோ

நன்றாகக் கொத்திய இறைச்சி கால் கிலோ-

வெஙகாயம - 2

பச்சை மிளகாய் - 10

க எண்ணெய் கால் கிலோ

கொத்தமல்லித்தழை - சிறிய கொத்து

மார்ஜரீன் - 50 கிராம

மிளகாய்ப்பொடி - 1 தேக்கரண்டி

தேவையான அளவு உப்பு

**செய்முறை —**

கறியை சுத்தம செய்து வைக்கவும. மிளகாய், கொத்தமல்லி வெஙகாயம இவற்றை பொடியாக நறுக்கி வைக்கவும. ஒரு பெரிய பாத்திரத்தில் கடலை மாவு, மிளகாய்த் தூள் நறுக்கி வைத்த பொருட்கள், தேவையான உப்பு, அவற்றுடன் கழுவி வைத்த கறி, கால் கோப்பை நீரையும சேர்த்து கெட்டியாக உருண்டை பதத்திற்கு பிசைந்து வைக்கவும.

வாணலியில் மார்ஜரீனை ஊற்றி நன்றாக காய்ந்ததும பெரிய உருண்டைகளாகப் பிடித்துப் போடவும.

பொன்னிறமாக வெந்ததும எடுத்து விடவும- இதுவே இறைச்சி போண்டா- மாலை சிற்றுண்டிக்கு மிகவும ஏற்றது-டிக்கு மிகவும ஏற்றது.

(ம-10)

# பலாத்காரத்துக்கு பலியாகும் பெண்களில் ஏற்றத்தாழ்வு உண்டா?

துருக்கிய சட்டத்தின் கீழ் விபசாரியொருத்தியை பலாத்காரம செய்தால் அந்நாட்டு நீதிமன்றம குறைந்த தண்டனையையே குற்றவாளிக்கு வழஙகும- ஆனால் குடும்பம பெண்ணை மானபங்கப்படுத்தினால் மூன்று மடஙகு அதிக தண்டனை வழஙகப்படுகிறது-

துருக்கியில் ஒரு பெண சட்டபூர்வமாக லைசென்ஸ் வாஙகி விபசாரத்தைத் தொழிலாகக் கொள்ள முடியும அரசாஙகம பணத்தையும் அறவிட்டு விட்டு பாதுகாப்பில் மட்டும பாரபட்சம காட்டலாமா என்று விபசாரிகள் கேள்வி எழுப்பி வருகிறார்கள்-

ஒரு விபசாரி வேலை நேரத்தில் விபசாரிதான் ஆனால் வேலை முடிந்து வீட்டுக்குப் போனதும குடுமபப் பெண் தானே! வேலை நேரத்தின் பின்னர் ஒரு விபசாரி காமுகன் ஒருவனால் பலாத்காரப்படுத்தப்பட்டால் எந்தச் சட்டத்தின் கீழ் தண்டனை வழஙகுவது? இப்படி சாதாரண பெண்ணையும் விபசாரியையும பிரித்து வெவ்வேறு தண்டனை வழஙகுவது மனித உரிமைகளை மீறும் ஒரு நடவடிக்கை அல்லவா?

இப்படியெல்லாம துருக்கிய விபசாரிகள் கேள்வியெழுப்பி நீதி கேட்டுவருகிறார்கள்- பத்திரிகைகள், அரசியல்வாதிகள். சமூகசேவகர்கள் எல்லாம விபசாரிகளுக்கு இவ்விடயத்தில் ஆதரவு காட்டியே வந்தாலும 1924 ஆம ஆண்டு அமுலுக்கு வந்த இச் சட்டத்தை மாற்றி கற்பழிப்புக்கு ஒரே மாதிரியான தண்டனை வழஙக அரசாஙகம பிடிவாதமாக மறுத்து வருகிறது-

விபசாரத்துக்கு ஊக்கமளிக்கக் கூடாது என்பதினால் இப்படி விபசாரிகளுக்கு பாரபட்சம காட்டும வகையில் அரசு சட்டமியற்றியிருக்கலாம என்று கூறப்படுகிறது-

துருக்கிய தலைநகரான இஸ்தான்புல்லில் சுமார் ஆயிரம விபசாரிகள் லைசன்ஸ் உரிமையுடன் தொழில் பார்த்து வருகிறார்கள்- லைசென்ஸ் பெறாதவர்களின் தொகை இதைவிட மும்மடஙகாக இருக்கலாமாம்!

(ம-032)



# மனையும் மங்கையும்

## மனைவியின் சிறிய ஆசைகளையாவது பூர்த்தி செய்தாலே போதும்!

### வைர நகைக்குப் பதில் இமிட்டேஷனை வாங்கிக் கொடுத்தாலும் மனம் குளிரும்

— க. பங்கஜவல்லி —

திருமணம் என்பது முன்பின் அறிமுகமல்லாத ஓர் ஆணும் பெண்ணும் ஒரே குறிக்கோளுடன் வாழ்வில் ஒன்றிணையும் ஒரு சடங்காகும்.

எத்தனையோ பொருத்தங்கள் பார்த்துத்தான் பெற்றோர் திருமணத்தை நிச்சயிக்கின்றனர். மனப்பொருத்தம், எல்லாவற்றையும் விட மிக முக்கியமானது.

கணவனும் மனைவியும் மனமொத்து இல்லறம் நடத்தினால் மற்றப் பொருத்தங்கள் இயல்பாகவே வந்தமையும். பெண்ணின் கழுத்தில் தாலி ஏறிய நிமிடத்திலிருந்து அதைக் கட்டியவனும் சுமப்பவளும் தங்கள் கடந்த காலத்தை மறந்துவிட வேண்டும்.

மணமான தம்பதியர் கூடியவரை இருபக்கத்து உறவினரையும் தவிர்த்துத் தனிக் குடித்தனம் தொடங்குவதுதான் நல்லது. எச்சந்தர்ப்பத்திலும் ஒருவரின் உறவினரை அடுத்தவர் மட்டந் தட்டக் கூடாது.

"உன் பரம்பரைப் புத்தியைக் காட்டாதேடி" என்று கணவனோ "உங்க அப்பன் குணம்தானே உங்களுக்கும் வரும்" என்று மனைவியோ பேசுவது அழகல்ல. இப்படியான பேச்சுகள் பின்னால் விபரீதமான விளைவுகளைத்

அதைப் புரிந்து கொள்வாள். சில பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகளுக்கு முன்பாகவே சண்டை பிடிப்பர். பிள்ளைகளின் மனநிலையை இது எவ்வளவு தூரம் பாதிக்கும் என்பதை அவர்கள் உணருவதில்லை.

தங்கள் முன் சண்டை பிடிக்கும் பெற்றோரைப் பிள்ளைகள் மதிக்க மாட்டார்கள். அவர்கள் மேல் பிள்ளைகள் வைத்திருக்கும் மரியாதையும் கெட்டுப் போகும்.

மாமி – மருமகள் சண்டை பிடிக்கும் போது கணவனின் பாடு படு திண்டாட்டமாகி விடும். ஒரு பக்கம் தன்னைப் பாலூட்டிச் சீராட்டி வளர்த்த தாய், மறு பக்கம் தன் குழந்தைகளுக்குப் பாலூட்டிச் சீராட்டும் மனைவி.

அன்னை மேல் கொண்ட பாசம் காரணமாக அல்லது அவளைத் திருப்திப்படுத்துவதற்காக முன்பின் யோசியாமல் மனைவியைத் திட்டக் கூடாது. இரு பக்க நியாயங்களையும் கேட்டுத் தெளிந்த பின் தவறு எவர் பக்கமோ அவரைக் கண்டிக்க வேண்டும்.

அத்துடன் இவ்வாறான தவறுகள் இனிமேல் எழாவண்ணம் பார்த்துக் கொள்ள வேண்டியது ஆணின் கடமை.

சில பெண்களுக்குக் கணவன் எவ்வளவு சம்பாதிக்கிறான், வரவுக்கேற்றபடி செலவைத் திட்ட

அண்டை அயலில் கடன்படுவர். இலகுவில் கடனாளியாகி விடலாம். பட்ட கடனை அடைக்கப் படாதபாடுபட வேண்டும். தவிரவும் மனைவி கடன் வாங்குவது கணவனுக்கு ஓர் இழுக்கு. மனைவி படிப்பறிவு இல்லாதவளாக இருந்தாலும் குடும்ப வரவு செலவில் அவசியம் பரிச்சயம் உள்ளவளாயிருத்தல் வேண்டும்.

இது சம்பந்தமாகக் கணவனின் உதவியை அவள் கேட்கலாம். இதன் மூலம் கணவனுக்குப் பொறுப்புணர்ச்சி வரும். அனாவசிய செலவுகளை அவன் நிறுத்துவான், அல்லது குறைத்துக் கொள்வான்.

மனைவியின் கோரிக்கைகள் எல்லாவற்றையும் நிறைவேற்றக்கூடிய நிலையில் கணவன் இல்லாதிருக்கலாம். ஆயினும் தன் சக்திக்குட்பட்ட வரையில் அவளுடைய சிறிய ஆசைகளையாவது அவசியம் பூர்த்தி செய்ய வேண்டும்.

பட்டுச்சேலை வாங்க வசதியில்லாவிட்டால் சாதாரண சேலையாவது வாங்கிக் கொடுக்க வேண்டும்.

"வசதி கிடைக்கும் போது வைரத் தோடு வாங்கித் தருவ

வொருவருக்குமே தனிப்பட்ட ரசனைகளும் ருசிகளும் இருப்பது இயற்கை. இதைப் புரிந்து கொண்டு கணவன் மனைவி இருவரும் ஒருவருக்கொருவர் புரிந்துணர்வுடன் விட்டுக் கொடுத்து வாழ வேண்டும்.

ஒருவர் ரசனையை மற்றவர் மேல் திணிக்கக் கூடாது. மனைவியின் சுதந்திரத்தில் கணவன் அனாவசியமாகத் தலையீடு செய்யக் கூடாது.

"அடுத்த வீட்டு துரைராசாவைப் பாருங்கள். அவரும் உங்களைப் போல்தான் உத்தியோகம் பார்க்கிறார். எவ்வளவு வசதியாயிருக்கிறார்! நீங்களும் இருக்கிறீர்களே! பிழைக்கத் தெரியாத மனுசன் நீங்க!"

"நேற்று நம வீட்டுக்கு வந்தானே ராஜன். அவனுடைய மனைவி வசந்தியைப் பார்த்தாயா? என்ன நளினம் நாகரீகம்! கணவனுடன் என்னமா ஒட்டி உரசினாப்பல போனா! நீயும் இருக்கியே. சுத்தப் பட்டிக்காடு!"

இப்படிப் பிறருடன் ஒப்பிட்டுப் பேசும் பழக்கத்தை விட்டுவிட வேண்டும். எல்லோரும் துரைராசாவாகவோ வசந்தியாகவோ முடியாது! உங்கள் தனித்துவம் கெடாமல் நீங்கள் வாழ வேண்டும். பிறரைக் கொப்பியடிக்காதீர்கள்.

கணவனும் மனைவியும் தனிமையில் மனம் விட்டுப் பேச ஒரு மணி நேரத்தை ஒதுக்க வேண்டும். படுக்கைக்குப் போகும் நேரம் உகந்தது. பிள்ளைகளின் தொந்தரவு இராது. அன்றைய அலுவலக வீட்டு நிகழ்ச்சிகளை அலசுவதுடன் மறுநாள் செய்ய வேண்டிய காரியங்களையும் அப்போது திட்டமிட்டுக் கொள்ளலாம்.

கணவனிடம் தனக்குப் பிடிக்காத குணங்களை மனைவியும் மனைவியிடம் தனக்குப் பிடிக்காத விஷயங்களைக் கணவனும் பக்குவமாக எடுத்துக் கூற இது நல்ல நேரம்.

கணவன் களைப்புடன் அலுவலகத்திலிருந்து திரும்புவார். சீவிச் சிங்காரித்தபடி அவன் வரவை எதிர்பார்த்திருக்கும் மனைவி ஓடிப் போய் அவன் கையைப் பிடித்துக் கொண்டு "வர்றீங்களா எங்காவது வெளியில் போய் வருவோம?" என்று ஆசையுடன் கேட்பாள்.

கணவன் சள்ளென்று சீறி விழுந்தால் அப்பேதை எவ்வளவு மனம் உடைந்து போவாள். அலுவலகம் போகும் கணவனுக்கு வெளி உலகைக் காணும் சந்தர்ப்பம் ஏராளம்.

ஆனால் மனைவி? சமைத்தல் கழுவுதல் – கூட்டிப் பெருக்குதல் என்று அவளுடைய வாழ்க்கை வீடு என்ற சிறிய வட்டத்திற்குள்ளேயே கழிகிறது.

மாலை நேரங்களில் கணவனுடன் கொஞ்சம் வெளி உலகைக் காண அவள் விரும்புவது புரிந்து கொள்ளக் கூடியதே!

மனைவி புதிதாக ஏதாவது பலகாரம் செய்தால் அது சுமாராகவே இருந்தாலும் "அடடே ரொம்ப நல்லாயிருக்கே" என்று பாராட்ட வேண்டும்.

கணவன் சாதாரண சேலை வாங்கி வந்தாலும் "ரொம்ப நல்லாயிருக்குங்க. உங்க செலக்ஷன் எப்பவுமே நல்லாத்தான் இருக்கும்" என்று புகழ வேண்டும்.

அதைவிடுத்து "ப்பூ! இவ்வளவுதானா!" என்று உதட்டை நெளித்தால் அவன் மனம் சலித்துப் போவான்.

சந்தர்ப்பம் கிடைக்கும் போதெல்லாம் கனிவான பார்வை – நளினமான கெஞ்சல் அன்பான கொஞ்சல்களை ஒருவருக்கொருவர் பரிமாறிக் கொள்ள வேண்டும். இவற்றால் கிடைக்கும் இன்பம் தாம்பத்திய விருட்சத்திற்கு இடப்படும் நல்ல பசளையாகும்.

மனைவி நோயுற்றால் அவளுக்கு வெந்நீர் வைத்துக் கொடுத்தல் – வேளைக்கு மருந்தும் உணவும் ஊட்டி விடுதல் போன்ற சின்னப் பணிவிடைகள் செய்யக் கணவன் தயங்கக் கூடாது.

இவ்வாறு செய்வதால் அவனுடைய "கௌரவம்" ஒன்றும் குறைந்து விடாது. ஆயுள் பூராவும் கணவனுக்குச் சமைத்தும் அழுக்குத் துணிகள் கழுவியும் பணிவிடைகள் செய்யும் மனைவிக்கு இப்படிச் சிறு உதவிகளாவது செய்யாவிட்டால் எப்படி?

(த)

# வெறும் மேல் பூச்சு உடல் அழகு தராது

இப்படியான பேச்சுகள் பின்னால் விபரீதமான விளைவுகளைத் தரும்–

உறவினர், நண்பர்கள் முன்பாக மனைவியைத் திட்டக்கூடாது– அவளுடைய தன்மான உணர்ச்சிக்கு அது பலத்த அடியாகி விடும்– தனிமையில் மனைவியைக் கண்டிக்கலாம், அவள்

சில பெண்களுக்குக் கணவன் எவ்வளவு சம்பாதிக்கிறான், வரவுக்கேற்றபடி செலவைத் திட்டமிடுவது எப்படி என்பது பற்றி எதுவும் தெரியாது. கணவன் கொண்டு வந்து கொடுப்பதை பேசாமல் கை நீட்டி வாங்குவர்.

பணம் போதாவிட்டால்

"வசதி கிடைக்கும் போது வைரத் தோடு வாங்கித் தருகிறேன்" என்ற சாதாரண கூற்மலொன்றை வாங்கிக் கொடுத்தாலும் வைரத் தோடு கிடைத்து விட்டது போலவே அவள் மகிழ்ந்து போவாள்–

மனித இனத்தில் பிறந்த ஒவ்

வாழ்க்கை இயந்திர மயமாகிக் கொண்டு வருகிறது. எங்கும் எதிலும் அவசரம். காலையில் எழுந்தது முதல் இரவு படுக்கப் போகும் வரை ஒரே டென்ஷன்.

சில நேரங்களில் இனம் புரியாத கோபம், சலிப்பு, பல நேரங்களில் அலுப்பு. இந்த நிலையை நாமே சற்று மாற்றிக் கொள்ள முயற்சித்தால் என்ன? நம்மில் உறைந்திருக்கும் ரசிப்புத் தன்மையையும், கலையுணர்வையும் சற்றே நடைமுறைக்கு கொண்டு வரலாம் அல்லவா? எப்படி சாத்தியம் என்கிறீர்களா...?

மனம் வைத்தால் சாதிக்க முடியாதது ஒன்றுமேயில்லை. நாம் செய்கின்ற எந்த வேலையிலும் மனமுவந்து ஈடுபட வேண்டும். கற்றுக் கொள்கிற எந்த பாடத்தையும் சந்தோஷத்துடன் கற்றுக் கொண்டால் அதிக நாள் மனதில் நிற்கும்.

மனம் நினைத்தாலும் பல நேரங்களில் உடல் இடம் கொடுப்பதில்லை! நம்மில் மிகப் பலருக்கு அழகாய் இருக்க வேண்டுமென்ற ஆசை. ஆனால் அதற்கான பயிற்சிகள் தெரியாமலிருக்கலாம்.

சிலர் வெறும் மேக்அப்பும், விலை உயர்ந்த ஆடை ஆபரணங்களும்தான் அழகு என்ற எண்ணத்தில் இருக்கலாம்.

அழகு என்பது வெறும் மேல் பூச்சு அல்ல; அது எண்ணங்களின் தூய்மையினாலும், அழகான புன்சிரிப்பினாலும், சிறந்த செயல் திறத்தினாலும் ஏற்படுவது. உள்ளுறுப்புக்களின் ஆரோக்கியம்தான் அழகின் அஸ்திவாரம். சிலர் அழகாயிருப்பார்கள் திருமணம் ஆகும்வரை. இரண்டு பிள்ளைகள் பெற்ற பின் "இனி நமக்கென்ன கவலை" என அலட்சியமாய் இருந்து விடுவார்கள்.

ஆபத்து அங்கேதான் ஆரம்பமாகிறது என்பதை நாம் சற்றே அலட்சியப்படுத்தி விடுகிறோம். எனவே எப்போதும், எந்த வயதிலும் "ட்ரிம்"மாய், கவர்ச்சியாய் இருப்பது "நம்மவர்களை" காந்தமாய் நம்முடன் இணைய வைத்திருக்கும் ரகசியம் ஆகும்.

நிறத்தைப் பற்றியோ அல்லது சொந்தப் பிரச்சினைகள் பற்றியோ சதா சிந்தித்துக் கொண்டு முகத்தை வாடவிடக் கூடாது. பிரச்சினை இல்லாத மனிதன் இந்த உலகில் ஏது?

ஆகவே "சிரித்த முகம்" ஒன்று தான் எந்தப் பிரச்சினையையும் சமாளிக்கக் கூடிய முதல் படி. சுறுசுறுப்பாய் வேலை செய்ய உடல் எடை ஒத்துழைக்கவில்லை.

முதலில் நம் உயரத்திற்கேற்ற எடை இருக்கிறோமா என்பதை சரி பார்த்துக் கொள்ளுங்கள். தீவிரமான பயிற்சிகள் மூலம் சுலபமாக நம் எடையை குறிப்பிட்ட அளவிற்கு கொண்டு வரலாம்.

சிலருக்கு யோகாசனம் பயிலும் விருப்பம் இருக்கலாம். ஆனால் ஆசனங்களை வசதியாக செய்யக் கூடிய அளவிற்கு தொடைப் பகுதியிலும் இடையிலும் சதைகள் இடம் தராது.

ஆக முதலில் சற்றே எடையை குறைத்து உடலை சீராக்கிக் கொள்வோம்.

(ம–10)


## உடல் அழகைப் பேண பெண்களுக்கு ஒரு நடனம்



இடுப்பில் வளையம் ஒன்றை வைத்து ஆடும் "கூலாகூப்" நடனத்திற்கு ஒரு காலத்தில் நல்ல மதிப்பு இருந்தது, ஆயினும் இன்று அந்த மோகம் நம் மத்தியில் மங்கி விட்டது– ஆனால் ரஷ்ய அழகி எரினா டெஷ்கோ. பெண்களின் இடை அழகைப் பேண இது ஒரு நல்ல உடற்பயிற்சி என்கிறார், இலங்கையில் கலை நிகழ்ச்சி நடத்தி வந்திருந்த இவர் 50 வளையங்களை உடலில் தாங்கி ஆடிக் காட்டினார்.

(ம)

***



## குழந்தைகளை தண்டவாளத்தில் படுக்க வைத்து கொன்ற தாய்

தண்டவாளத்தில் படுக்க வைத்த 3 குழந்தைகள் கொல்லப்பட்டனர். குழந்தைகளின் தாயின் நிலை கவலைக்கிடமாக இருந்தது.

ராமேஸ்வரத்தில் இருந்து மதுரைக்கு பாஞ்சர் ரயில் ஒன்று வந்து கொண்டு இருந்தது– அந்த ரயில் அதிகாலை 4–30 மணி அளவில் திருப்புவனம் வந்தது, அங்கு இருந்து மதுரை புறப்பட்டது.

திருப்புவனம் பி மூர் சி டேப்போக்கு பின் பக்கம் ரயிலில் தண்டவாளத்தில் சுமார் 30 வயது மதிக்கத்தக்க ஒரு பெண் தன் 4 குழந்தைகளுடன் நடந்து வந்து கொண்டு இருந்தார்,

ரயில் அருகே வந்ததும் திடீரென வரிசையாக 4 குழந்தைகளையும் தண்டவாளத்தில் படுக்க வைத்து தானும் படுத்துக் கொண்டார் தாய்.

குழந்தைகள் தப்பிச் செல்ல முடியாதபடி அவர்களைக் கட்டிப் பிடித்துக் கொண்டார், அது காலை நேரம் என்பதால் ரயில் என்ஜின் டிரைவருக்கு எதுவும் தெரியவில்லை, 3 குழந்தைகள் பலியாகின.

(ம–10)

சிந்தாமணி

தின வெளியீடு "தினபதி" ஞாயிறு வெளியீடு "சிந்தாமணி"

சிந்தாமணி CHINTAMANI

## மக்கள் மத்தியிலும் உச்சி மாநாடுகள்

உலக அரங்கில் இன்று அரசியல் தலைவர்கள் உச்சி மாநாடு நடத்துவது சம்பிரதாயமாகி விட்டது. இன்று மக்கள் மத்தியிலும் உச்சி மாநாடுகள் நடைபெறுகின்றன. அதுவும் நல்ல விஷயம். பல்வேறு நாட்டு மக்கள் ஒருவரை ஒருவர் சந்தித்து மனந் திறந்து பேசினால் புரிந்துணர்தல் ஏற்படும். இது உலக சமாதானத்தைப் பலப்படுத்தும்.

அண்மையில் அமெரிக்காவைச் சேர்ந்த சோவியத் – அமெரிக்க சர்ப்பாஷணைக்கான கேந்திரமும் சோவியத் சமாதானக் கமிட்டியும் உச்சிமாநாடு ஒன்றை நடத்தின.

இது வாஷிங்டனில் நடைபெற்றது. பல்வேறு சமூகப் பிரிவுகளைச் சேர்ந்த மக்கள் கலந்து கொண்டனர்.

தென்றிக் போரோவிக் சோவியத் சார்பிலும் – ராமா வர்ணன் அமெரிக்க சார்பிலும் உரையாற்றினர். இச் சந்திப்பை பிஷப் ஜோனாதன் ஆசீர்வதித்தார்.

சம்பாஷணை ஒரு வார காலம் நடைபெற்றது. உயரின வாழ்க்கைச் சூழல் உட்பட சமய கலாசாரத் துறைகளில் ஒத்துழைப்பது பற்றி ஆராய்ந்தனர்.

உலகை எதிர்நோக்கும் பிரச்சினைகளுக்கு சாதாரண மக்கள் மட்டத்தில் தொடர்புகள் ஏற்படாமல் பரிகாரம் கிடையாது என்று பங்குபற்றியவர்கள் கூறித் தெரிவித்துள்ளனர். (ம—சி)

# ஜெயலலிதா தப்பியது எப்படி?

கார் விபத்தில் சிக்கி காயம் அடைந்த ஜெயலலிதா இப்போது குணமடைந்து வருகிறார்.

தனது 42 ஆவது பிறந்தநாள் விழாவைக் கொண்டாடுவதற்காக ஜெயலலிதா பாண்டிச்சேரி தேர்தல் பிரசாரத்தை முடித்துக் கொண்டு காரில் சென்னை திரும்பினார்.

அதிகாலை அவரது கார் சென்னை மீனம்பாக்கம் விமான நிலையம் அருகே வந்த போது விபத்தில் சிக்கியது. ஜெயலலிதா கார் மீது எதிரே வந்த லாரி பயங்கரமாக மோதியது! இதில் ஜெயலலிதாவின் கார் அப்பளம் போல நொருங்கியது!

காரில் இருந்த ஜெயலலிதா, அவரது தோழி சசிகலா, டிரைவர் அண்ணாதுரை ஆகிய 3 பேரும் காயமடைந்தனர்.

ஜெயலலிதாவின் இடது பக்க நெற்றியில் காயம் ஏற்பட்டு இரத்தம் வழிந்தது. சசிகலாவின் கண் அருகே கண்ணாடித் துண்டுகள் பாய்ந்தன. டிரைவர் அண்ணாதுரையின் கால்களில் பலத்த அடி பட்டது!

3 பேரும் சென்னை மைலாப்பூரில் உள்ள தேவகி ஆஸ்பத்திரிக்கு கொண்டு செல்லப்பட்டனர். அங்கு அவர்களுக்கு டாக்டர்கள் குழுவினர் சிகிச்சை அளிக்கிறார்கள்.

நெற்றியில் காயமடைந்த ஜெயலலிதாவுக்கு பிளாஸ்டிக் சர்ஜரி நடத்தப்பட்டது. விபத்தின் காரணமாக ஜெயலலிதா அதிர்ச்சியடைந்து காணப்பட்டார்.

ஜெயலலிதாவின் தோழி சசிகலாவுக்கு கண் அருகே பாய்ந்திருந்த கண்ணாடிகளை அகற்ற ஆபரேஷன் நடத்தப்பட்டது.

ஜெயலலிதா காருக்கு முன்னால் இரண்டு கார்களிலும் பின்னால் மூன்று கார்களிலும் தொண்டர்களும் சில அ தி மு க பிரமுகர்களும் வந்தனர்.

அதிகாலை 4–30 மணியளவில் கார் மீனம்பாக்கம் விமான நிலையம் அருகே வந்த போது லாரியின் காரும் லாரியும் எதிர் எதிர் திசையில் வந்து கொண்டிருந்தன. திடீரென லாரி வலதுபுறம் திரும்பி ஜெயலலிதா வந்து கொண்டிருந்த கண்டசா கார் மீது "டமார்" என்று சத்தத்துடன் பயங்கரமாக மோதியது! மோதிய வேகத்தில் கார் அப்பளமாக நொருங்கியது. டிரைவர் அண்ணாதுரையின் கால்கள் சிதைந்தது! அவரது முகம், மார்பு பகுதியில் பயங்கர அடிபட்டது. மோதிய வேகத்தில் முன் சீட் மீது ஜெயலலிதா மோதினார். உடைந்த கண்ணாடிகள் ஜெயலலிதா முகத்தில் பாய்ந்தன.

1972 ஆம் ஆண்டு தேர்தல் பிரசாரத்திற்காக எம் ஜி ஆர் ஆவடி அருகே சென்று கொண்டிருந்த போது இதே போல ஒரு நிகழ்ச்சி நடந்தது! அதே போல இப்போதும் நடந்துள்ளது!

அ தி மு க தலைவர்களை ஏற்றி வந்த கார்களின் மீது மோதாமல் மூன்றாவதாக வந்த ஜெயலலிதா காரின் மீது மோதியுள்ளார். லாரி டிரைவரின் வாக்குமூலத்தில் "என் மீது தவறில்லை. நான் ஒழுங்காக ஓட்டிச் சென்றேன்" என்று கூறியிருந்தாலும் ஜெயலலிதா காரை வேகமாக மோதி பலத்த சேதம் ஏற்படுத்திய பின் இடதுபக்கம் திரும்பிச் சென்று நிறுத்தி விட்டு பொலீஸில் சரணடைந்து விட்டார்!

லாரி டிரைவர் அஜாக்கிரதையாக ஓட்டியிருந்தால் ஒன்றோடொன்று மோதிய வேகத்தில் மோதியபடியே நின்று கொண்டிருக்குமே தவிர, மோதிய வேகத்தில் டிரைவர் லாரியை இடது பக்கம் திருப்பி நிறுத்தியிருக்க வேண்டியதில்லை!

ஏற்பட்ட விபத்தில் லாரி டிரைவருக்கு எந்தவித காயமும் ஏற்படவில்லை! டிரைவர் தெளிவான நிலைமையிலேயே இருந்திருக்கிறார். லாரி டிரைவர் குடித்து விட்டு ஓட்டவில்லை என்று பொலீஸ் தரப்பில் கூறப்படுகிறது.

பொலீஸ் நிலையத்தில் வைக்கப்பட்டிருந்த லாரி டிரைவர் நிலையத்திலிருந்து தப்பிவிட்டதாகக் கூறப்பட்டது. ஆனால் தீர விசாரித்த போது மாடு எதுவும் குறுக்கே பாயவில்லை எனத் தெரியவந்தது.



விபத்துக் காயங்களுடன் ஆஸ்பத்திரியில் ஜெயலலிதா

"மாடு எதுவும் குறுக்கே பாயவில்லை. லாரி டிரைவரின் கவனக் குறைவால் தான் விபத்து நடந்தது" என்று பொலீஸார் தெரிவித்தனர்.

### முத்துசாமி தகவல்

ஜெயலலிதாவின் உடல் நிலை பற்றி அ தி மு க கொள்கை பரப்பு செயலாளர் முத்துசாமி நிருபர்களுக்கு பேட்டி அளித்தார்.

நடந்திருப்பது சாதாரண விபத்தல்ல! ஒரு பெரிய தலைவர் விபத்தில் சிக்கியிருக்கிறார்!

விபத்து நடந்தது பற்றி பொலீஸில் அம்மா படுத்துக் கொண்டே வந்தார்கள்.

அவர்கள் உட்கார்ந்து வந்திருந்தால் நிச்சயமாக அவர்களது 2 கால்களையும் எடுக்க வேண்டிய நிலை வந்திருக்கும்! அம்மாவின் இடது பக்க கண், கன்னம் ஆகியவற்றில் பலத்த அடி ஏற்பட்டுள்ளது.

அவர்களது பல்லில் அடிபட்டு ஊனில் சதை முறிவு ஏற்பட்டுள்ளது. 2 கண்களையும் திறக்க முடியாமல் அவதிப்படுகிறார். இடது கண்ணில்தான் பலத்த அடி!

இவை தவிர வலது கை, இடது கை முட்டியிலும் அடிபட்டுள்ளது. இதனால் கைகளை அசைக்க முடியவில்லை!

இரண்டு கால் முட்டிகளிலும் அவருக்கு ஊசி மூலம் மருந்து செலுத்திக் கொண்டே இருந்தார்கள்!

அவர் நடந்து கொண்டோ, உட்கார்ந்து கொண்டோ செல்ல முடியாத நிலையில் இருந்தார்! வேறு வழியில்லாமல் டாக்டர்களின் வேண்டுகோளை ஏற்று பிரசாரத்தை ரத்து செய்து விட்டு காரில் பின் சீட்டில் படுத்துக் கொண்டே சென்னை வந்தார்!

இவ்வாறு முத்துசாமி கூறினார்.

### குற்றச்சாட்டு

அ தி மு க மூத்த இணை பொதுச் செயலாளர் எஸ் டி சோமசுந்தரம் கூறியதாவது—

ஜெயலலிதா காருக்கு ஏற்பட்ட விபத்து திட்டமிட்ட சதியாகும்! ஏற்கனவே அரசியல் ரீதியாக அவரை வீழ்த்த முயன்று தோற்றுப் போனவர்கள் திட்டமிட்டு இத்தகைய சதியில் ஈடுபட்டு இருக்கிறார்கள்.

முதலில் லாரி டிரைவர், ஒரு மாடு குறுக்கே போனதால் திருக்க லாரியை திருப்பியதாக பொலீஸார் கூறினார்கள். ஆனால் பொலீஸ் சூப்பிரண்டு அறிக்கையில் மாடு பற்றிய தகவலே இல்லை.

— இவ்வாறு எஸ் டி சோமசுந்தரம் கூறியுள்ளார்.

### வாழப்பாடி கண்டனம்

தமிழக இந்திரா காங்கிரஸ் தலைவர் வாழப்பாடி ராமமூர்த்தி சென்னையில் நிருபர்களுக்கு பேட்டி அளித்தார். அவர் கூறியதாவது—

— இவ்வாறு திரு ராமமூர்த்தி கூறினார்.

### கருணாநிதி கோபம்

ஜெயலலிதா கார்விபத்து பற்றி அவதூறாக புகார் கூறிய வாழப்பாடி ராமமூர்த்தி மீது நடவடிக்கை எடுக்கப்படும் என்று முதல் அமைச்சர் கருணாநிதி கூறினார்.

ஒரு விபத்து நடந்து விட்டால் ஆளும் அரசு நடத்தும் கட்சி மீதும் அபவாதமும் அவதூறுகளும் பரப்புகிறவர்கள் மீது சட்டப்படி நடவடிக்கை எடுக்கப்படும். பத்திரிகையாக இருந்தாலும் சட்டப்படி அரசு நடவடிக்கை மேற்கொள்வது தவிர்க்க முடியாதது.

பொய்ச் செய்திகளை பரப்பினால் சட்டம் தன் கடமையைச் செய்யும். இதைக் கட்டுப்படுத்துவதற்காக இருக்கும் அதிகாரிகள் இப்படி பொய்ச் செய்தி பரப்புகிறவர்கள் மீதும் பத்திரிகைகள் மீதும் சட்டப்படி நடவடிக்கை எடுப்பார்கள்.

இவ்வாறு கருணாநிதி கூறினார்.

### ஆற்காடு ஆவேசம்

ஜெயலலிதா கார் விபத்தில் சிக்கியதற்கு தி மு க மீது பழி சுமத்துவதா? என்று அமைச்சர் ஆற்காடு வீராசாமி கண்டனம் தெரிவித்தார்.

அமைச்சர் வெளியிட்டுள்ள அறிக்கை ஒன்றில் கூறியிருப்பதாவது—

ஜெயலலிதா சென்ற கார் மீது லொறி மோதி அவர் விபத்துக்குள்ளானது வருந்தத்தக்கது.

ஆனால் அன்றாடம் ஆயிரக்கணக்கான விபத்துக்கள் நடந்து கொண்டிருக்கும் நம் நாட்டில் ஜெயலலிதா சென்ற கார் விபத்துக்குள்ளானதும் ஒன்றே.

கழகத் தலைவர் கலைஞர் அவர்களின் வாழ் நாளில் ஐந்து முறைக்கு மேல் கார் விபத்துக்குள்ளாகி இருக்கிறார். 1953 இல் கார்விபத்துக்குள்ளாகி சன்

தானே காங்கிரஸ் கட்சி தலைவர் வாழப்பாடி "தன்னைப் போல் பிறரையும் நினை" என்ற முறையில் ஜெயலலிதா கார் விபத்துக்கு கழகத்தின் மீது களங்கம் கற்பிக்க முயற்சிப்பதை நாட்டு மக்கள் நன்கு புரிந்து கொள்வார்கள்.

இவ்வாறு அமைச்சர் ஆற்காடு வீராசாமி கூறியிருக்கிறார்.

### ஜெயலலிதா சிந்திய இரத்தம்

கார் விபத்தில் ஜெயலலிதா சிந்திய ரத்தம் சும்மா விடாது என்று தி மு க வுக்கு ஆர் எம் வீரப்பன் எச்சரிக்கை விடுத்தார்.

புரட்சித் தலைவி ஜெயலலிதா சென்ற கார் மீது லாரி மோதியது நம் நெஞ்சில் நெருப்பு வைத்தது போல் இருக்கிறது.

அப்பளம் போல் நொருங்கிய காரில் இருந்த புரட்சி தலைவி அதிர்ஷ்டவசமாக தப்பி இருக்கிறார். புரட்சி தலைவரின் சக்தி எங்கள் மக்களின் தலைவியை காப்பாற்றி இருக்கிறது.

பாரத போரில் அர்ஜுனனை வீழ்த்த கர்ணன் அம்பு விடும் போது கண்ணன் தேரை பூமியில் அழுத்தி விடுகிறான். இதனால் தலைக்கு வந்த அம்பு அர்ஜுனன் கிரீடத்தை தட்டிக் கொண்டு கையோடு போய் விடுகிறது. அது போல் புரட்சி தலைவியின் உயிருக்கு வந்த அபத்து புரட்சி தலைவர் எம் ஜி ஆர் சக்தியால் சிறு காயத்தோடு போய் விட்டது.

அமைச்சர் ஆற்காடு வீராசாமி வெளியிட்டுள்ள அறிக்கையில் "ஆயிரக்கணக்கான விபத்துக்களில் இதுவும் ஒன்று" என்று சொல்லி இருக்கிறார். இவருக்கு மனிதாபிமானம் இருக்கிறதா? மனித தன்மை இருக்கிறதா?

இவ்வாறு ஆர் எம் வீரப்பன் பேசினார்.

சட்டமன்ற எதிர்க்கட்சி துணைத் தலைவர் திருநாவுக்கரசு கூறியதாவது—

விபத்து நடந்த இடம் அமைக்

## பூரண குணமடைந்து அவர் எழுந்திருக்க நாளாகும்

தார் மீனம்பாக்கம் விமான நிலையம் அருகே வந்து கொண்டிருந்தது- அப்போது மணலியில் கல்லி கற்களை இறக்கி விட்டு ஸ்ரீதேவி என்ற லாரி சென்னை திரிசூலத்தை நோக்கிச் சென்று கொண்டிருந்தது- லாரியின் மேல் ஸ்ரீதேவி என்ற பெயருக்கு இரண்டு பக்கமும் தி மு கவின் கறுப்பு - சிவப்பு கொடி வரையப் பட்டிருந்தது!

மீனம்பாக்கம் பழைய விமான நிலையம் அருகே ஜெயலலிதா போலீஸ் நிலையத்தில் வைக்கப்பட்டிருந்த போது லாரியின் பெயர்ப்பலகை ... றப்பட்டு தோணி போட்டு மூடியிருப்பது புதிராக உள்ளது- இது இந்த விபத்து பற்றி பல கேள்விகளை எழுப்புகிறது-

"லாரியின் முன்பு மாடு குறுக்கே பாய்ந்ததால்தான் லாரி டிரைவர் கட்டுப்பாட்டை இழந்தார்- அதனால்தான் கண்டசா கார் மீது லாரி மோதியது" என்று முதலில் பொலீஸார் கூறி னர் நேரிடையாக வந்து விசாரணை நடத்தாமல் அவசர அவசரமாக விபத்து நடந்தது பற்றி ஒரு அறிக்கை வெளியிட்டுள்ளனர்-

அந்த அறிக்கையைப் பார்க்கும் போது ஒரு திட்டமிட்ட சதியை அவர்கள் மறைக்க முற்படுவது போலத் தெரிகிறது!

விபத்து நடந்த இடத்தில் நான் இருந்தேன்- நான் அம்மாவின் (ஜெயலலிதா) காருக்கு முன்னால் வந்து கொண்டு இருந்தேன்-

விபத்து இயற்கையாக நடந்திருந்தால் அந்த லாரி என்னுடைய கார் மீதுதான் மோதியிருக்க வேண்டும்! விபத்து நடந்த உடனே முன்னால் சென்று கொண்டிருந்த நான் காரை நிறுத்தி விட்டு பின்னால் ஓடி வந்தேன்-

அம்மா முகம் முழுக்கவும் தலையிலும் இரத்தம் சொட்டக் காரில் அப்படியே சாய்ந்து கிடந்தார்! முன்பக்க சீட்டில் டிரைவரும சசிகலாவும இரத்த வெள்ளத்தில் மிதந்தனர்!

அதைப் பார்த்ததும எனக்கு கையும ஓடவில்லை- காலும ஓடவில்லை- காரின் பின்பக்க சீட் அடிபட்டுள்ளது- இதனால் கால்களையும அசைக்க முடியவில்லை- டாக்டர்கள் உயிருக்கு ஆபத்தில்லை என்று கூறியுள்ளனர்!

அம்மாவின் தோழி சசிகலாவுக்கு இடது கண்ணில் அடிபட்டு உள்ளது- இடது கண் அருகே கன்னத்தில் ஒன்றரை இஞ்ச் அளவுக்கு எலும்பு தெரியுமளவு சதை பிய்த்து கொண்டு வந்து விட்டது!

அவருடைய கண் அருகில் பாய்ந்து இருந்த கண்ணாடித் துண்டுகளை மூன்று மணி நேரம ஆபரேஷன் செய்து அகற்றினார்கள்!

அம்மா ஜெயலலிதாவின் கர்ப்பப்பையில் ஆபரேஷன் செய்ய வேண்டும என்று டாக்டர்கள் சொன்னார்கள்- அவர் தான் தேர்தல் முடிந்த பிறகு ஆபரேஷன் வைத்துக் கொள்ளலாம என்று டாக்டர்களிடம கூறி விட்டு தேர்தல் பிரசாரத்திற்குப் போனார்!

அப்போது கூட அவரது உடல் நிலை மோசமாக இருந்ததால் டாக்டர் ஒருவர் மருந்து போத்தல்களுடன் கூடவே வந்தார்!

ஒரு நாளைக்கு 4, 5 முறை

இந்த விபத்து பற்றி முதலில் பொலீஸார் எந்த தகவலும தெரிவிக்கவில்லை- மறுநாள் பொலீஸ் தரப்பில் இதுபற்றி ஒரு அறிக்கை வருகிறது-

அந்த அறிக்கையில் ஒரு மாடு அடிபட்டதாகவும அதன் காரணமாக லாரி திசை மாறி, காரில் மோதி விட்டதாகவும குறிப்பிடப்பட்டது-

அதே பொலீஸின் சார்பில் அதற்கு அடுத்த நாள் இன்னொரு அறிக்கை வெளி வருகிறது- அந்த அறிக்கையில் ரோட்டின் குறுக்கே மாடு போனதாகவும அதன் மீது மோதாமல் இருக்க டிரைவர் லாரியை திருப்பியதாகவும அறிக்கையில் கூறப்பட்டுள்ளது-

லாரி டிரைவர் "நான் காரணமில்லை வேகமாகத்தான் லாரியை ஓட்டினேன்" என்று கூறுகிறார்- அப்படி என்றால் என்ன அர்த்தம்?

தினமும 100 விபத்து நடக்கிறது ... என்று என்று மந்திரி வீராசாமி அறிக்கை வெளியிடுகிறார்- இவரது ராஜினாமாவை முதல் அமைச்சர் ஏற்றுக் கொண்டாரா என்று ... தெரியாது-

குள்ளாகி இருக்கிறார்- 1953 இல் கார்விபத்துக்குள்ளாகி கண் பார்வை பாதித்த விடுமோ என்று அஞ்சக் கூடிய அளவுக்கு அவருக்கு விபத்து ஏற்பட்டது-

அப்போதெல்லாம நாமு யாருமே எந்த அரசியல் கட்சி தலைவர்களும் இன்னொரு அரசியல் கட்சி மீது நோக்கம கற்பித்ததில்லை-

லாரியை விட்டு கொலை செய்யும கலாசாரத்துக்கு சொந்

... கூறியதாவது— ப

விபத்து நடந்த இடமும் அடிக்கடி விபத்து நடக்கிற இடம என்கிறார் அமைச்சர் ஆற்காடு வீராசாமி- அந்த இடத்தில் விபத்து நடந்தால் தான் சந்தேகம் வராது என்று நினைத்து குறிப்பிட்ட இடத்தை தேர்வு செய்திருக்கிறார்களோ என்ற ஐயப்பாடு எழுகிறது—

— இவ்வாறு திருநாவுக்கரசு கூறினார்— (மு-10)


# தமிழ் நூல்களும் இஸ்லாமிய நூல்களும்

இலங்கையிலும் வெளிநாட்டிலும் அச்சிடப்பட்ட தமிழ் — இஸ்லாமிய நூல்கள் தொடர்பான உங்கள் தேவைகளுக்கு விஜயம் செய்யுங்கள்



எம். டி. குணசேன அன்ட் கம். லிமிட்.

217, ஒல்கொட் மாவத்தை
கொழும்பு—11
தொலைபேசி- 23981—84.


## கண்ணீர் பூக்கள்...

(20ஆம் பக்கத் தொடர்ச்சி)

குடைக்கு வாருங்கள்... என்ன அப்படிப் பார்க்கிறீங்க?"

"அன்றைக்குப் பொண்ணு பார்க்க வந்த போது நான் ஏன் வாயை மூடிக் கொண்டிருந்தேன் என நினைக்கின்றீர்களா? அப்ப இதைப் பற்றி ஏதாவது நான் கதைத்திருந்தால் அம்மா இந்தச் சம்பந்தத்திற்கே சம்மதித்திருக்க மாட்டா அதை நினைத்துத்தான் பேசாமல் இருந்திட்டேன்..."

"இதோ பாருங்க ஷோபனா. சீதனத்தை அம்மாமார்கள் கேட்கும போது அதைத் தட்டிக் கேட்டு நியாயம சொல்ல வேண்டியது மகன்மாரின் பொறுப்பு அதைத்தான் நான் கொஞ்சம் விவேகமாகக் கையாண்டேன்

"இவற்றை நான் மட்டும் பேசிப் பயனில்லை. ஏனைய உங்களைப் போன்ற இளைஞர்கள் பின்பற்றினால்தான் இந்தச் சீதனப் பிரச்சினையை ஒழிக்க முடியும.

"பணத்திற்கு ஆசைப்படாத என்னைப் போன்ற எந்தவொரு ஆணும உங்களைப் போன்ற "பாரதி" கண்ட புதுமைப் பெண்ணைத்தான் விரும்புவான்!

"இனியாவது என்னை ஏற்பீர்களா?" என்றவனின் கரங்களைப் பற்றி கண்ணில் ஒற்றிக் கொண்ட ஷோபனா. கதைத் முடிவாக நிலையில் கண்ணீர்ப் பூக்களினால் அவனுக்கு அர்ச்சனை செய்தாள்! இரு கைகள் மலர இணைந்தன கரங்கள்...







இப் பத்திரிகையை அச்சிட்டு வெளியிட்டது ... ஸ்டீயூஸ் பேப்பர்ஸ் லிமிட்டெட் 5 குணசேன மாவத்தை கொழும்பு 12 (இலங்கை) தபால் பெட்டி இல 1613. வெளியீட்டு திகதி 11 மார்ச் 1990

"CHINTAMANI" 5, Gunasena Mawatha, Colombo 12 —
P.O. Box 1613